
https://tamileelamarchive.com/

# சூரியப் புதல்வர்கள்



## மாவீரர் நாள்

நவம்பர் 27

தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/



இதயத்தில்-
இனத்தின் விடுதலை
கரத்தில்-
ஒரு தேசத்தின் வரலாறு
சுதந்திர வாசல்வரை
இவன் சுவடுகள்
ஓயாது.

தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/



புலிவீரர்
"புதிய புறநானூறு" எழுதும்
ஒவ்வொரு தடவையும்
பூமி ஒருதரம் புல்லரித்துக் கொள்ளும்
விழிகளைத் திறந்து வியப்பைக் காட்டும்.
போராடிய பல தேசங்கள்
இன்று...
'பூஞ்சனம்' பிடித்துக் கிடக்கின்றன.
அகிலமே 'அரோகரா' சொல்ல
ஓடிய "போராட்டத் தேர்கள்"
அச்சாணி உடைந்து அசையாதிருக்கின்றன.
இங்கு மட்டும்
பிள்ளைத்தோல் உரியாத
பிஞ்சுப் பாதங்களுக்குக் கீழே
பூமி சிலிர்த்துக் கொண்டு சிரிக்கிறது.
எங்கள் பிள்ளைகள்
பள்ளிப் புத்தகம் சுமக்கும் கைகளில்
படைக்கலன் தூக்கியது
அடுத்த தலைமுறைக்கான 'அக்கினி யாகம்'
வேதவித்துக்கள் 'பத்ததி' வாசிக்க
எங்கள் தலைவன்
விடுதலை நெருப்புக்கு
நெய் சொரிந்து கொண்டிருக்கின்றான்.
'குண்டத்தில் மூண்ட தீ
"குறிக்கோள் வரம்" கிட்டும்வரை
அணையாது.



தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/

# இதயக் கோயிலில் பூசிக்கப்பட வேண்டியவர்கள்

எமது வீர விடுதலை வரலாறு இந்த மாவீரர்களின் இரத்தத்தால் எழுதப்பட்டிருக்கின்றது. இவர்களது இறப்புக்கள் அர்த்தமற்ற இழப்புக்கள் அல்ல. இந்த வீரர்களின் சாவுகள் எமது சரித்திரத்தையே இயக்கும் உந்துசக்தியாக, எமது போராட்டத்தின் உயிர்மூச்சாக, எமது போராளிகளின் உறுதிக்கு உத்வேகமளிக்கும் ஊக்குசக்தியாக அமைந்து விட்டன. இந்த மாவீரர்கள் காலத்தால் சாகாதாவர்கள். சுதந்திரச் சிற்பிகள். எமது மண்ணிலே ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச் சென்ற வீரமறவர்கள். எமது இனத்தின் சுதந்திரத்திற்காக, கௌரவத்திற்காக, பாதுகாப்பிற்காக தமது இன்னுயிரை ஈந்துள்ள இந்த மகத்தான தற்கொடையாளர்கள் (தியாகிகள்) காலம் காலமாக எமது இதயக்கோயிலில் பூசிக்கப்பட வேண்டியவர்கள்.

ஒரு விடுதலை வீரன் சாதாரண வாழ்க்கையை வாழும் ஒரு சாதாரண மனிதப்பிறவி அல்ல. அவன் ஓர் இலட்சியவாதி. ஓர் உயரிய இலட்சியத்திற்காக வாழ்பவன். தனக்காக வாழாமல் மற்றவர்களுக்காக வாழ்பவன். மற்றவர்களின் விடிவுக்காக, விமோசனத்திற்காக வாழ்பவன். சுயநலமற்ற, பற்றற்ற அவனது வாழ்க்கை உன்னதமானது; அர்த்தமுள்ளது. சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக அவன் தனது உயிரையும் அர்ப்பணிக்கத் துணிகிறான். எனவே, விடுதலை வீரர்கள் அபூர்வமான மனிதப்பிறவிகள், அசாதாரணப் பிறவிகள்.

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

வே. பிரபாகரன்
தலைவர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.



https://tamileelamarchive.com/

# மாவீரர் நினைவு போர்ப்பரணியாக முழங்கட்டும்

மாவீரன் யார் என்ற கேள்விக்குப் பதிலைத் தேடும் போது 'ஸ்திதப் பிரக்ஞன்' என்று பகவத் கீதையில் வாசித்த இரு சொற்கள் ஞாபகத்தில் வருகின்றன. அச் சொற்களுக்கு ஆன்ம உணர்வில் நிலைத்தவன் என்று பொருள் தரப்படுகின்றது. ஆயினும் எமது மாவீரர்களை தேச விடுதலை என்ற இலக்கில் நிலைத்தவர்கள் என்று துணிந்து கூறலாம். அதற்காகப் போர் செய்ய எழுந்தவர்கள். பலனை எதிர்பாராமல், இருப்பு, இறப்பு பற்றிக் கவலைப்படாமல் தம் தேசியக் கடமையாகிய போரைப் புரிந்தவர்கள். தம் உடம்பின் சுக, துக்கங்களுக்கு அப்பால், தேசத்தின், தேச மக்களின் நிரந்தர நலனிலும், விடுதலையிலும், சுபீட்ச வாழ்விலும் நிலைத்து நின்று செயல் புரிந்தமையினால், போராடி 'மரணித்ததால்' அவர்களுக்குச் சாவும் இல்லை. நிலைத்து நிற்கும் ஒன்றோடு அதாவது தேசத்தோடு கலந்து விட்டதால் இல்லாமை இல்லை என்ற சத்தியத்தை நாம் அவர்களது வாழ்க்கை, மரணம் இரண்டினூடும் அறிந்து கொள்கிறோம். எமது தேச மக்கள் என்பது எமது மண்ணில் வாழ்பவர்கள் மட்டுமல்ல, புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் குடியேறிகளாக், அகதிகளாக வாழ்பவர்களும் எமது தேசமக்கள் தான்.. எம் மாவீரர்களின் மரணம் அனைவருக்குமானது. இம் மாவீரர்களால்தான் எமது தளைகள் அறுகின்றன. எமக்குப் பெருமை சேர்கிறது. நாம் முன்னேற்றம் அடைகிறோம். பிறநாட்டு மக்களால் மதிக்கப்படுகிறோம். இறுதியில் பூரண விடுதலை அடைந்து ஏனைய மக்களுக்குச் சமனான அந்தஸ்த்தைப் பெறுகிறோம். எனவே, மாவீரர் கனவுகளை நிறைவேற்றுதல், விடுதலைச் செயல்பாடுகளில் பங்கு பற்றுதல் எம்மனைவரதும் விடுதலைக்கான வரலாற்றுக் கடமையாகிறது. மாவீரரைப் போற்றுவதற்கான சரியான வழி அவர்கள் விட்டுச் சென்ற செயல்களைத் தொடர்ந்து புரிவதுதான்; பூரண அர்ப்பணிப்புத்தான்.

விடுதலை பெற்ற ஒவ்வொரு தேச மக்களும் தங்கள் மாவீரர்களைப் போற்றி வணங்குவதைக் காண்கிறோம். சிலைகள் அமைத்தும், கலைக்கூடங்கள் அமைத்தும், நினைவு ஸ்தூபிகள், கோவில்கள் அமைத்தும் அவர் நினைவை மீட்பதையும், உரம் பெறுவதையும், சந்ததிகளுக்கு வழிவழியாக விட்டுச் செல்வதையும் பார்க்கிறோம்.

அவுஸ்ரேலியாவில், போர் வீரர்களின் ஞாபகத்திற்காக எழுப்பப்பட்ட, கலையம்சம் பொருந்திய நினைவுக்கூடம் ஒன்றில், தனது தேசத்தின் பாதுகாப்புக்காக போராடச் சென்ற தனது மகனின் வரவை எதிர்பார்த்து வழிமேல் விழிவைத்து காத்திருக்கும் ஓர் அன்னையின் சிலை காணப்படுகின்றது. கைக்குட்டையை அசைத்து வழி அனுப்பிய தோற்றத்துடனும், அதேவேளை தனது மகன் திரும்பி வருவானோ என்ற ஏக்க விழியுடனும் அத்தாய் காத்து நிற்பதாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. அவுஸ்ரேலிய வீரர்களைப் பொறுத்தவரை, தம் நாட்டின் எல்லைக்குள் ஆபத்து வரமுன்னரே, வெளி மண்ணில் போரிட்டு எதிரிகளைத் தடுத்து நிறுத்தினார்கள். அச்செயல்பாட்டில் இறந்து போன தம் மண்ணின் மைந்தர்களின், போர் வீரர்களின் தியாகத்தை, வீரத்தை போற்றுவதாக அந்நினைவுக்கூடம் உள்ளது. எமது நிலையைப் பொறுத்தவரை, எமது தாயகத்திற்கு, எமது நாகரிகத்திற்கு, எமது இனத்தின் இருப்புக்கு ஆபத்து வந்த போது எமது நாட்டின் எல்லையைக் கடந்தவர்களாக நாம் இருக்கிறோம். அவ்வாறு வந்த தனது பிள்ளைகள் இப்போராட்டத்தில் இணைந்துகொண்டு தனது மானத்தைக் காப்பாற்ற மாட்டார்களா என்று தமிழ் அன்னை ஏக்கத்துடன் காத்திருப்பதான தோற்றமே எழுகிறது.

மாவீரர் துயிலும் இல்லங்கள் பூசனைக்குரியவை; போற்றுதற்குரியவை. மிருகங்கள் கூட அவமரியாதை செய்யத் தயங்கும். ஆனால் எமது மாவீரர் துயிலும் இல்லங்கள், புல்டோசர் கொண்டு சிங்கள இராணுவத்தினரால் உழுதுவிடப்பட்டுள்ளன என்ற செய்தி தமிழர் நெஞ்சங்களில் ஈயத்தை உருக்கி வார்த்தது போன்ற வேதனையை ஏற்படுத்துவதாகும். உலகின் மிகக் கேடுகெட்ட பாஸிஸவாதிகள் கூடச் செய்யாத செயலை சந்திரிகாவின் இராணுவம் செய்துள்ளது.

மாவீரர்கள் லெப்டினன்ட் கேணல் நாதன், 'ஈழமுரசு' ஆசிரியர் கஜன் ஆகியோரது வீரச்சாவுகள் எமது போராட்டத்தில் புதிய பரிமாணமாக அமைகின்றன. கடல் கடந்த நாடொன்றில் மாவீரர்களாக அவர்கள் விழுந்துள்ளார்கள். அவர்களது வித்துடல்கள் பாரிஸ் நகரில், மாவீரருக்குரிய மரியாதையுடன் விதைக்கப்பட்டுள்ளன. சிறிலங்காவின் பயங்கரவாதம், தேச எல்லைகளைக் கடந்து பரவுவதையும் உணரக்கூடியதாக உள்ளது.

ஈழத்தமிழனே! போர் செய்யப் புறப்படுவாய்! உனது இருப்புக்கு எங்கும் விடப்பட்ட சவாலை ஏற்று போர் புரிவாய்! மாவீரர் நடந்து சென்ற பாதையின் இலக்கு தொலைவில் இல்லை. சத்திய யுத்தத்தில் அனைவரும் இணைவதும், இலக்கை நோக்கி விரைவில் நகர்வதும் நாம்தான் ஆற்ற வேண்டியவை. அதற்கு மாவீரர் நினைவு உறுதி தருவதாக அமையட்டும்.

**— திலகர்**

https://tamileelamarchive.com/



# தாயகத்தைக் காதலித்தோர்

மாவீரர்நாள் தமிழீழத்தில் மட்டுமல்ல, தமிழர்கள் பரந்துவாழும் இந்தப் பூமிப்பந்தில் தொட்டுக்காட்டக்கூடிய இடங்களிலெல்லாம் இன்று கொண்டாடப்படும் கோபுர தரிசன நாளாகிவிட்டது.

தமிழர்களுக்கு இந்தநாளே தலையான நாளாகிவிட்டது. தமிழர்கள் மதங்களால் கூறுகளாகி, அம்மதங்களின் திருவிழாக்களோ பலவாகி, அவைகளே பண்பாட்டின் விழாக்களென்றாகி, மத விழாக்களையே தமிழர் திருநாட்கள் என்று மயங்கி நின்ற வேளையில், தமிழர்கள் பேதங்களை மறந்து எல்லோரும் ஒரு நேர் கோட்டில் வருடமொருமுறை சந்தித்துக்கொள்ளும் நாள் மாவீரர் நாள் என்றாகிவிட்டது.

மாவீரர்கள் யாரென்பது இன்று எல்லோருக்கும் தெரியும். அவர்களின் கனவுகள் என்னவென்பதும், கல்லறைக்குள் அவர்கள் கண்மூடித் துயில்வது ஏனென்பதும் அனைவரும் அறிவர். எல்லாவற்றுக்கும் மேலாகத் தங்களின் எலும்புக்கூடுகள் மக்கி மண்ணாகுமுன்னர் இந்தமண் விடுதலைபெறும் என்ற பெரும் நம்பிக்கையுடன் அவர்கள் போனார்கள் என்பதும் எல்லோருக்கும் நன்கு தெரியும்.

தமிழீழம் அவர்களது தாரகமந்திரம். சந்ததிக்கான வாழ்வொன்றே அவர்களது கனவு. கட்டற்ற விடுதலையொன்றே அவர்களின் எதிர்பார்ப்பு.

இளமைச் சுகங்களை வீசிவிட்டு அந்த அரும்புகள் எரிந்து போயின. வண்ண, வண்ணக் கனவுகளை எறிந்துவிட்டு இந்த மண்ணின் கனவுகளுக்கு அவர்கள் ஆடைகட்டி அழகுபார்த்தனர். இலட்சிய நெருப்பே அவர்களின் நெஞ்சத்தில் அவியாது கனன்றுகொண்டிருந்தது.

வீரமும் மானமுமே அவர்களின் நரம்புகளில் நர்த்தனமிட்டன. அவர்கள் தாயகத்தைக் காதலித்தவர்கள். மக்களை உயிருக்குயிராக நேசித்தவர்கள். எல்லாவற்றுக்கும் மேலாக எங்கள் தலைவனை உளமார ஏற்றும், அவரிட்ட கட்டளையை அசையாத நம்பிக்கையுடன் சிரமேற்கொண்டும் களமாடிய புலிகள்.

மாவீரர்நாள் விதையுண்ட வீரர்களின் நினைவுநாள் மட்டுமல்ல. இது திதிபார்த்துச் செய்யும் பிதுர்க்கடனான திவசநாளுமல்ல. உயிரோடு வாழும் தமிழர்கள் 'மாரீசங்களில்', ஒப்பனைகளின் பொய்மை அழகில் மயங்கிப் போகாது, இறுதிவரை உறுதி தளரோம் என்று சபதமேற்கும் நாளுமாகிவிட்டது.

மனிதன் உலகில் வாழும் நாட்களிலேயே அடிக்கடி புதிது, புதிதாகப் பிறக்கிறான். நேற்று நடந்ததை இன்றும், இன்று நடப்பதை நாளையும் மறந்து ஏதோ வாழ்ந்துவிட்டு "ஊன் கழித்து மகிழ்ந்தோம்" என்றளவில் திருப்தி அடைகின்றான். "வந்தளவுக்கு லாபம்" என்று கிடைத்ததுடன் நிறைவடைந்து, வளைந்து கொடுத்து வாழ நினைக்கின்றான். சுதந்திரத்தின் சுகம் தெரியாது சும்மா கிடக்கிறான். விடுதலையில் இருந்து ஒரு குண்டு மணியளவேனும் குறைய விடமாட்டோம் என்று குரல் கொடுக்க மறந்துபோய் விடுகின்றான். இவற்றையெல்லாம் நினைவுபடுத்தவுமே மாவீரர்நாள் வருகிறது.

நள்ளிரவில் நாதமணி ஒலிப்பதும், நெய் விளக்கேற்றி நெக்குருகுவதும் சம்பிரதாயச் சடங்குகளாகக் கூடாது. இந்த வருடம் மாவீரர்நாள் மீண்டும் ஈழத்தமிழர்களெல்லாம் "தமிழீழத் தாயகமே" எங்கள் தாரக மந்திரமென்று உறுதி எடுக்கவேண்டிய காலகட்டத்தில் வருகிறது.

எல்லோரும் சென்று கல்லறைகளில் சபதமெடுப்போம். "உங்கள் கனவுகளை நாங்கள் நனவாக்குவோம்" என்று உறுதிமொழி எடுப்போம்.

செல்லும் வழியில் எங்களை எந்தச் சலுகை ஆசைகளும் ஆட்கொள்ள இடமளியோம் என்று சத்தியம் செய்வோம்.

மாவீரராக மடிவதே மகிமை என்று நாளும் நாளும் நம்புவோம். எல்லோரும் வாருங்கள். கைகளில் மலரேந்தி அந்தக் கல்லறைகளுக்குச் செல்லுவோம். வெளிச்சம் அங்கிருந்துதான் பரவுகின்றது.

★★★



தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/



# தேசத்தின் புயல்கள்

- தி. இனியவன்

ஏற்கனவே எல்லா வழிகளிலும்
அவர்களைச் சொல்லியாகிவிட்டது.

பாடல்கள் இசைத்து,
கட்டுரைகள் யாத்து, கவிதைகள்
படைத்து, ஓவியங்கள் தீட்டி, உரைகள்
முழக்கி, படங்களாய்க் காட்டி –

எப்படியெப்படி முடியுமோ
அப்படியெல்லாம்; எவரெவரால்
முடியுமோ அவர்களெல்லாம் –

ஏற்கனவே எல்லா வழிகளிலும்
அவர்களைச் சொல்லியாகிவிட்டது.
ஆனாலும் ஈற்றில் தம்முயற்சியில்
எவராலும் வெல்ல முடிந்ததா...?
இதுவரை இல்லை!

நாம் என்ன செய்தோம்?;
பார்த்துணர முடிந்த, கேட்டுணர முடிந்த,
தொட்டுணர முடிந்த அவர்களது
வெளித்தோற்றப்பாட்டை
அடிப்படையாகக் கொண்டு, எம் சிந்தனா
சக்தியினால் கணிப்பீடு செய்ய முடிந்த
அவர்களது உள்ளுணர்வுகளுக்கு மட்டுமே,
நாம் கலைகளில் வடிவமிட்டோம்.
இவற்றைக் கடந்து சென்று –

தேசபக்தியினதும், இனப்பற்றினதும்,
சமூக நேசத்தினதும் உச்ச
உயர் பீடங்களில் வீற்றிருந்த அவர்களது
ஆத்மாக்களின் ஆழமான
பரிமாணங்களை, எம்மில் எவரால்
கண்டறிந்து வெளிப்படுத்த முடிந்தது..?
இதுவரையும் இல்லை; இனிமேலும்
இல்லை!

உரிமை கோரியும், உரிமை
கோராமலும் நிகழ்த்தப்பட்ட கரும்புலி
நடவடிக்கைகள் எம் போராட்டத்தில்
ஏற்படுத்திய தாக்கமிகு விளைவுகளின்
அரசியல், இராஜதந்திர,
இராணுவப் பரிமாணங்களைக் கணிப்பிட்டு
ஆய்வு செய்ய முடிந்த எம்மால், அந்த
ஒப்பற்ற சாதனைகளின் சொந்தக் காரர்களது
மனவுணர்வுகளின்
ஆழத்தையும், அகலத்தையும்
அளவெடுக்கமுடிந்ததா...? இல்லை!

உண்மையிலேயே, வார்த்தைகளால்
வரம்பு கட்டிடும் வரையறைகளுக்கு
அப்பாலே இன்னமும் வாழுகின்ற,
சாகாவரம் பெற்ற சிரஞ்சீவிகளாய்
எம் நினைவுகளை என்றும்
நிறைத்திருக்கும் அவர்கள், சொற்களின்
சோடனைகளால் அலங்கரிக்கமுடியாத
அற்புதங்களேதான்!
எண்ணுகின்ற போதெல்லாம் நெஞ்சு
விம்முகின்றது! அந்தப் புரியாத
புதிர்களால் வியக்கின்றது!

நிலமதிர உயிரழிந்தும், கடலதிர
உருக்குலைந்தும், தமிழனின் சுதந்திர
வேட்கையை உலகதிர முரசறைந்த
அவர்கள், தமிழீழ தேசத்தின் நெருப்பு
மனிதர்கள்!

தமிழனைக் கொன்றவர்களைக்
கொன்று, தமிழனை எரித்தவர்களை
எரித்து, தான் அழியும் கடைசி
நொடியிலும் தமிழனின் பகையழிக்கும்
குறிக்கோளில் குலையாத இலட்சிய
வேங்கைகள்!

பலவீனப்பட்ட எம் இனத்தின்
பலமெனத் தோற்றம் கொண்டு,
'அம்பாகவும் வில்லாகவும்' எம்மை
அழித்தவர்களையெல்லாம் அழித்து,
பழிக்குப்பழியெடுத்த கர்மவீரர்கள்!

சுயத்தின் பற்றுக்களைத் துறந்து,
ஆசையின் வேர்களைப் பிடுங்கி,
தனிப்பட்ட வாழ்வின் இலட்சியங்களைக்
களைந்து, இனத்தின் விடிவு ஒன்றையே
அவாவிய ஈகத்தின் உன்னதங்கள்!

வாழ்வில் விருப்பிருந்தும், சாவில்
வெறுப்பிருந்தும், தாய்த்திரு நாட்டிற்கு



தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/

கடமையென வந்தபோது, நாங்களும்
நாடும் இன்புற்றிருக்கவென தம்மையே
இல்லாதழித்த தெய்வீகப் பிறவிகள்!

வெளித்தெரிந்தும்
வெளித்தெரியாமலும்;
முகம் காட்டியும்
முகம் காட்டாமலும் – பக்கத்திலும்
எட்டத்திலுமாகக் கண்மூடிப்போன
வாழ்வின் வழிகாட்டிகள்!

முகம் மறைத்து, தாம் புரிந்த
அரும்பெருஞ் செயல் மறைத்து,
பெயர் மறைத்து, தாம் பெறும்
மாபெரும் புகழ் மறைத்து, இனத்தின்
நலன் ஒன்றையே இலட்சியமாய் வரித்து,
நிஜத்தில் படைத்த சாதனைகளின்
பின்னால் நிழல்களாய்த் தூங்கும்
சரித்திரங்கள்!

அடிபட்டு அடிப்பட்டு, நலிவுற்று
அழிவுற்று, அழுது புலம்பிக் கிடந்த
தமிழினத்திற்காக – உலகின்
ஈடு இணையற்ற வீரப்படையணியென –
மாபெரும் தலைவன் பிரபாகரன்
தோற்றுவித்த மனிதக் கணைகள்!

நீண்ட உலக வரலாற்றில்
முதற்தடவையாக, உயிர் கொடுத்துப்
பகையழிக்கும் 'தற்கொடைப்படை'யெனத்
திரண்டு இனத்திற்குப் பெருமை தந்த
எம் "தேசத்தின் புயல்கள்!"

தமிழீழத் தனியரசை நிறுவி,
அவர்களது திருப்பாதங்களின் மீது
காணிக்கையாக்குவதைத் தவிர –
அன்னவர்களுக்குச் செலுத்தக்கூடிய
அஞ்சலி வேறென்ன
இருக்கப்போகின்றது!
எதுவுமே இல்லைத்தான் –
சுதந்திரத்தைத் தவிர!



# எனது குழந்தைக்கு ஒரு நாடு வேண்டும்

உலகில் இன்று நானுமோர் அகதி
பாலஸ்தீனியன், குருதிஸ்தானியன்
பொஸ்னியன், செச்சேனியன்
இவர்களைப் போல்
நானுமோர் அகதி.

இவர்களைப் போல்
எனக்கொரு நாடு இருந்தது
எனக்கொரு வதிவிடம் இருந்தது.

இவர்களைப் போல்
எனக்கும் ஒரு அம்மா
எனக்கும் ஒரு அப்பா
எனக்கும் ஒரு தங்கை
எனக்கும் ஒரு காதல்

அவர்களைப் போல்
எனக்கும் ஒரு வீடு
எனக்கும் ஒரு தோட்டம்
எனக்கும் ஒரு பாடசாலை
எனக்கும் ஒரு விளையாட்டு மைதானம்
எனக்கும் ஒரு நூலகம்
இவர்களைப் போல்
எனக்கும் எல்லாமே இருந்தது.
இன்றவை இல்லை
நான் அகதியானேன்.

எனக்கு எனது அம்மா வேண்டும்
அப்பா, தங்கை, காதலி
எல்லோரும் வேண்டும்.

எனது நிலமே! எனது நிலமே!
நீ எங்கிருக்கின்றாய்
உன்னிடம் நான் வந்தாக வேண்டும்.

எனக்கு எனது வீடு வேண்டும்
எனது தோட்டம், பாடசாலை
விளையாட்டு மைதானம்
நூலகம், ஆலயம்
அனைத்தும் வேண்டும்
அன்பான என் தாயகமே
நீ எங்கிருக்கின்றாய்
உன்னிடம் நான் வந்தாக வேண்டும்.

இப்பொழுது
என்னிடம் உணவிருக்கிறது
உடையிருக்கிறது
தேவைக்கு சொற்ப பணமும் இருக்கிறது
நான் பயப்படுகிறேன்
நாளை நான் இல்லாது போகலாம்
எனது குழந்தைக்கு ஒரு நாடு வேண்டும்.

ஆதலால், என் அழகான தாயகமே
உன்னிடம் நான் வந்தாக வேண்டும்.

நான் எங்கே பிறந்தேன்?
என்னைப் பெற்றவர் எங்கே?
அவர்கள் வாழும் வீடு எங்கிருக்கின்றது
அங்கு நான் போயாக வேண்டும்.

எனது கடல்
எனது முகில்
எனது காடு
எனது வயல்
எனது வான் நோக்கிப் பறக்கும் பறவைகள்
அனைத்துமே எனக்கு வேண்டும்.

குளிர் விறைக்கிறது
புற்கள் சிரிக்கின்றன
காற்று அகதியென்று
என்னைக் கேலி செய்கிறது
இருள் என்மீது வெறுப்பைக் கொட்டுகிறது
நான் பயப்படுகிறேன்
நாளை நான் இறந்து போகலாம்
எனது குழந்தைக்கு ஒரு நாடு வேண்டும்.

— இளவாலை அன்ரனி [illegible]




தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/




என்றும் என்மேல் அன்பும் பாசமும் மறவாத அன்பின் அப்பா, சித்தி, அண்ணா அறிவது நான் நலம். அதுபோல் உங்களையும் இறைவன் காப்பாற்றுவார். நர்ன் மீண்டும் திருமலை திரும்பிய பின் இதுவரையில் எதுவித தொடர்பும் கொள்ளமுடியாத நிலையில் இருந்ததையிட்டு முதற்கண் உங்களிடம் மன்னிப்பு கோருகின்றேன். யாழ். குடா நாடு இராணுவ வசம் சென்றுள்ளது. நான் முன்னதாகவே உங்களை வன்னிக்கு வருமாறு கூறி இருந்தேன். நீங்கள் வன்னியில்தான் இருப்பீர்கள் என எண்ணுகிறேன். இங்கு ஒவ்வொரு நாளும் செய்திகளைக் கேட்கும் போதெல்லாம் வன்னியில் மக்கள் படும் துயரங்கள், அவலங்களைக் கேட்கும் போதெல்லாம் நெஞ்சம் ஏங்குகிறது. உணவுக்கும் தண்ணீருக்கும் நீங்கள் எவ்வளவு பாடுபடுகின்றீர்களோ ஆண்டவன்தான் அறிவான். ஆனால், எத்துன்பம் வந்த போதும் நீங்கள் கலங்கக்கூடாது. வீரத் தலைவர் எமக்கு வழி காட்டுகிறார். நீங்கள் எனக்கு சோறூட்டி வளர்க்கும் போதெல்லாம் பண்டைய சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் வீரத்தையும், தமிழ்ப் பற்றையும் சேர்த்து ஊட்டித்தான் வளர்த்தீர்கள். அத்துடன் சிங்கள இனவாதிகளால் எம் மக்கள்பட்ட துன்ப துயரங்களும் இன அழிப்பு அடக்குமுறையாளரினால் எம் மாணவ சமுதாயம் அடைந்த பின்னடைவு அனைத்தையும் நான் வளரும் வயதில் நீங்கள் கூறித்தான் அறிந்தேன். நான் வளரும் வயதில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களின் நடுவிலேயே வளர்ந்தேன். நாம் அன்றாடம் காணும் காட்சிகள் – எம் மக்களின் ஒப்பாரி ஒலிகளும் அவர்கள் உயிருக்கு பயந்து மூட்டை முடிச்சுக்களுடன் ஊர் ஊராய் அலைந்ததையுமே; ஏன் பெற்றோராகிய நீங்களே எவ்வளவு தூரம் அலைந்துள்ளீர்கள். இவற்றிற்கு எல்லாம் முடிவுதான் என்ன? நான் மீண்டும் இடையிடையே வரும்போது நீங்கள் என்னிடம் வேண்டுவதுபோல் நான் வெளிநாடு போகலாம்; அதனால் நான் தப்பலாம்; என் வருங்காலம் வளமாக அமையலாம். என்னை நீங்கள் ஒரு கோழையாக வளர்த்திருந்தால் அது சாத்தியமாக இருக்கும். ஆகவே நீங்கள் நிர்க்கதியாக அலையும்போது உங்கள் மகன் உங்களைப் பற்றி அணுவளவும் சிந்திக்காது தன்பாட்டில் திரிகின்றான் – மற்ற வீட்டுப் பிள்ளைகள் எவ்வளவு வசதியாக இருக்கின்றார்களே இவர்கள் இருவருக்கும் வீட்டு நினைப்பே இல்லையா என்றெல்லாம் நீங்கள் நினைக்கலாம். ஆனால் நான் சாப்பிடும்போது சரி, தூங்கும்போது சரி உங்களைப் பற்றி எண்ணி என் மனம் மௌனமாகக் கண்ணீர் வடிப்பது ஆண்டவனுக்குத்தான் தெரியும். இரு ஆண்பிள்ளைகளைப் பெற்றும் நீங்கள் தனியாகத் தவிப்பதையும் மற்றவர்கள் ஏளனம் கலந்த ஆதரவுடன் கரம் நீட்டுவதை உங்களால் ஏற்க முடியாமல் இருக்கும்தான். ஆனால் எமது இளம் போராளிகள் கரும்புலிகளாகச் சென்று இவ்வளவு இளம் வயதில் எவ்வளவு பெரிய இலட்சியத்திற்காக தமது உயிரையே துச்சமாக தூக்கி எறிந்து தியாக உணர்வுடன் மடிகிறார்கள். அவர்கள் தம் வாழ்வில் என்ன சுகம் கண்டார்கள். அவர்கள் மட்டும் ஏன் இவ வாறு நடந்துகொள்ள வேண்டும். வேறு யாரும் இதை செய்யட்டுமே என்று அவர்கள் விலகி இருக்கலாம்தானே. எவ்வளவு கரும் புலிகள், தமக்கு ஒரு கல்லறை கூட கட்டமாட்டார்கள் என்று தெரிந்தும் கூட அவர்கள் தாம் முன்னெடுத்து வைத்த காலை பின்னே வைப்பது இல்லை. மகிழ்வுடனேயே சென்று தமது பணியை முடிக்கின்றார்கள்.

அத்துடன் நான் உயிராகப் பழகிய, தோளோடு தோளாக நின்று போராடிய எவ்வளவு போராளிகள் இன்று எம்முடன் இல்லை. அவர்கள் சுமந்த இலட்சியக் கனவை நாம் நிறைவேற்றாது பயந்து






தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/

ஓடுவதா முறையான செயல்? இன்று எமக்கு வழிகாட்டுகின்றார் ஒரு ஒப்பற்ற தலைவர். எமது முன்னைய அரசியல் தலைவர்கள் போல், அவர் நாளுக்கு நாள் ஒரு கதைகந்தக்கவில்லை. இவ்வளவு துன்பங்களைக் கண்டும் அஞ்சவில்லை; பயந்து ஓடவில்லை. எம்முடனேயே ஒன்றாகக் கலந்து நின்று எமக்கு வழிகாட்டுகின்றார் தலைவர் பிரபாகரன். தமிழீழம் என்ற வார்த்தையை விட்டு அதற்கு மாறாக வேறு சொல்லைக்கூட உச்சரிக்கவில்லை என்று அவரது எதிரிகள் கூட அவரைப் புகழ்ந்து வாழ்த்துகிறார்கள். அப்படியான ஒப்பற்ற தலைவர் கிடைத்தது தமிழ் இனம் செய்த பெரும் பாக்கியம். அத்தலைவன் காலத்தில் முனைப்புடன் போராடி விடுதலை பெறத் தவறினால் தமிழ் இனத்தின் அடிமை விலங்கு என்றும் உடையப்போவதில்லை. இப்படியான சூழ்நிலையில் அனுபவம் வாய்ந்த போராளிகளாகிய நாம் போராட்டப் பாதையில் இருந்து விலகுவது தமிழ் இனத்திற்கு செய்யும் மாபெரும் துரோகமேயன்றி வேறு இல்லை. எனவே என் பொருட்டு நீங்கள் எத்துன்பம் வரினும் பொறுமையுடன் எதிர்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. காலம் எம்மை யுத்தமில்லாத பூமியில் ஒன்று சேர்க்குமாயின், அது நாம் செய்த தியாகங்களுக்கும் கடைப்பிடித்த பொறுமைகளுக்கும் கிடைத்த வெற்றியே ஆகும்.

இப்படிக்கு

தங்கள் மகன்

வே. பார்த்திபன்

# உலகம் இன்னும் உருண்டை!

நண்பா! வணக்கம்

மிக நீண்ட நாட்களுக்குப் பின் உன் நினைவு மடியில் தவழ்வதில் மிக்க மகிழ்ச்சியே!

நண்பா!

மாவீரர் நாளை முன்னிட்டு சில சிந்தனைகளை உன்னோடு பகிர்ந்துகொள்ள வந்துள்ளேன்!

நண்பா! தமிழன் வரலாறுகளை வடிக்காதவன். நடந்து வந்த சுவடுகளை பொத்தி வைக்காதவன்!

உண்மை நண்பா! இதுவெல்லாம் உண்மையே!

மூன்று தலைமுறையைத் தாண்டிய பெயர்களை பத்திரப்படுத்தத் தெரியாதவன்!

வாழ்ந்த வரை போதும்....

வந்தவரை இலாபம் என்ற குணமுடையவன்!

இதன் விளைவு என்ன தெரியுமா?

இனமும் மொழியும் உண்டு; ஆனால் இவ்விரண்டும் வாழ்வதற்குரிய மண்ணில்லை!

கொடியுண்டு நீர் உண்டு; வேர்கொள்ள நிலமில்லை!

நண்பா!

வானத்தை மறந்த பறவையுண்டா?

இரவை மறந்த பகலுண்டா?

காதலைத் துறந்த இதயமுண்டா....

உண்டு நண்பா! உண்டு....

தமிழன் பொது சிந்தனையாளன். பொது நலம் கொண்டவன். பரந்த நோக்குடையவன். உள்ளதையெல்லாம் வாரிக் கொடுத்த பாரி தமிழன் தானே!

நண்பா!

இருந்ததை கொடுத்து விட்டு இன்று இல்லாமல் இருக்கிறோம்!

இன்றைய தமிழனின் புதிய வரலாற்றுத் தொடக்கம் எது தெரியுமா?

தமிழீழம்....

தமிழனின் தொலைந்த சுவடுகளின் சுட்டுப் பெயர் என்ன தெரியுமா?

வே. பிரபாகரன்....

தமிழனின் புறநானூற்றுப் பாடல்களின் பாடு பொருள் யார்?

விடுதலைப் புலிகள்....

நண்பா! இன்றைய தமிழன் விழித்துவிட்டான். காணாமற் போன சிந்தனைகளுக்கு புத்தாடை சூட்ட வந்துள்ளான்!

தமிழனின் மண் தமிழீழம்....

உலகெங்கும் வாழும் தமிழர்களின் தன்மானச் சின்னமே....

விழித்தெழு!

உங்களது விழிப்பில் விடியப் போவது தமிழனின் வரலாறு!

நண்பா!

தமிழனின் பெருமைகள் நூல்களோடும் கறுப்பு மை எழுத்துக்களோடும் முடிந்து விடுவதில்லை! தமிழன் ஏடுகளில் பதித்த புறநானூறுகளை செயல்படுத்த வந்துள்ளான்!

நண்பா!

நமது மானத்திற்கு மாராப்புக் கட்ட வந்த வீரர்களை வாரியணைப்போம்!

நமது உயிர்மைக்கு உணர்வூட்டும் வல்லவர்களை வாயார வாழ்த்துவோம்!

பல நூறு மன்ங்களால் பாராட்டுத் தெரிவிப்போம்!

நீண்ட நாட்களுக்கு முன் காணாமற் போன கனவுகளை நினைவாக்கும் நேரமிது!

நண்பா!

மாவீரர்கள்.... நம் இனத்தின் விடிவெள்ளியாய்; உயிரின் சுவடுகளாய் மின்னிடும் இந்த மின்மினிகளுக்கு ஒரு பொன்னாடை போர்த்தி வாழ்த்துவோம்!

வெல்க மாவீரர்....

கொள்க தமிழீழம்...

வாழ்க வே. பிரபாகரன்!

அன்புடன்

சீ. அருணாசலம்



தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/

# மனதை விட்டகலாத மாவீரர் நினைவுகள்

*மாவீரர்கள் என்றும் மரணிப்பதில்லை!*
*ஈழமண் மீட்கும் இலட்சியப் பயணத்திற்கு*
*திசைகாட்டி நிற்பவர்கள் அவர்கள்*
*களப்புலி வீரர்களுக்கு மனப்பலம்*
*கொடுப்பவர்கள்*
*ஈழமக்களின் இதய நினைவுகளில் என்றும்*
*வீரவிளக்காய் ஒளிபரப்புவர்கள்!*



அவர்கள் நினைவை எங்கள் ஜீவிதத்திற்கே ஒரு அர்த்தம் கூறுகின்றபோது 'நினைவுகள்' 'மறதிகள்' என்ற சொற்களுக்குத் தான் இங்கு இடமேது? ஒருவரா, இருவரா... விரல் விட்டு எண்ணுவதற்கு? எண்ணுக்கணக் கற்ற ஒளிதீபங்கள்! ஒவ்வொரு மாவீரனுக்கும் ஒவ்வொரு காவியமே இருக்கும் போது, ஓரிரு பக்கங்களில் எப்படி எம் நினைவுகளை மீட்டிட முடியும்?

ஈழபூமியின், வடமராட்சி மண்ணில் பருத்தித்துறையையும் அதனையண்டிய கிராமங்களிலும், எம்மையும் எம் வாழ்விடங்களையும் சுற்றிச்சூழ்ந்து பாதுகாத்து எம்முள் எம்மவராய் இணைந்து, எம்மக்களுக்காய் துப்பாக்கிகளும் குண்டுகளும் சுமந்து போராடி, தம் வாழ்க்கையை அர்ப்பணித்து மீளாத்துயில் கொள்ளும் எம் இனிய மாவீரர்களை கண்ணீர் மலர்தூவி சிலநிமிடங்கள் இங்கு நினைவு கூருகிறேன்.

1983–ஆம் ஆண்டு யூலைமாதம், கொழும்பில் தமிழர்களுக்கெதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட கொலைவெறிக் கொடூரத்தில், தமிழர்களுக்கேற்பட்ட வர்ணிக்கமுடியாத வடுக்களால், அழிவுகளால் இழப்புக்களால் உணர்வு பெற்று, அடிமை விலங்குடைத்துக் கொண்டெழுந்த ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள், தமிழீழ விடுதலைப் போராளிகளாகி விட்டபின் வென்றெடுக்கும் இலட்சி



தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/

யத்தோடும் போராடி, மக்கள் மனத்தில் நிலைத்து விட்ட பல்லாயிரக்கணக்கான மாவீரர்களுள் இவர்களும் சிலர்.

1987–ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியது. சிங்கள அரசாங்கத்தின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலியின் நேரடித் தலைமையில் முதன்முதலாக 'லிபரேசன் ஒப்பரேசன்' என்ற பெயரில் வடமராட்சி மண்ணில் ஆரம்பிக்கப்பட்ட விமானக்குண்டு வீச்சுக்களும் அதனைத் தொடர்ந்த பேரிழப்பினூடாக எம்மண்ணினுள் நுழைந்த பல்லாயிரக்கணக்கான சிங்களக் கொலைவெறி இராணுவம், ஊழிக்கூத்தாடி எண்ணுக்கணக்கின்றி மனிதப் பலி எடுத்து, பல்லாயிரக்கணக்கானோரை கைதுசெய்து பிரசித்திபெற்ற சித்திரவதை கூடமான பூசாமுகாமிற்கு அனுப்பிவிட்டு மனிதம் தொலைந்த முகங்களோடு வீதிகளில் திமிர் பிடித்துத் திரிந்த காலமது!

போராளிகளிற்கும் மக்களிற்கும் சோதனை நிறைந்த நெருக்கடியான காலத்தில் மக்களோடு மக்களாய் உணவருந்தி, நடமாடி காவல் புரிந்து வந்த போராளிகள் அப்போது பற்றைகளிற்குள் பசியோடு மறைந்து திரிய வேண்டிய சூழல்!

இராணுவ ஆக்கிரமிப்பின்போது வல்வெட்டித்துறையில் கடல்விமானக் குண்டு வீச்சுக்களில் களப்பலியான 6 மாவீரர்களில் கப்டன் வீமனும் ஒருவர்! 'வீமண்ணா' என்று மக்களால் நேசிக்கப்பட்ட இவர், தொண்டமானாற்றிலிருந்து குடத்தனை, நாவுறுகோவில் வரை கரையோர மக்களுக்கும் மண்ணுக்கும் காவல் புரிந்தவர்! எல்லோரிடமும் மிகுந்த அன்புடனும் பண்புடனும் பழகி துணிவுடன் பணியாற்றிய அந்த மாவீரனை இச்சந்தர்ப்பத்தில் கண்ணீருடன் நினைவு கூருகிறேன்.

உருக்குலைந்து போய் வடமராட்சி மண்ணில் தொடர்ந்து சிங்கள இராணுவம், தமிழர் மீது பஞ்சமா பாவகாரியங்களில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்த போது, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் முகாமிட்டிருந்த இராணுவத்தினர் மீது முதன் முதலாக மில்லர் மேற்கொண்ட கரும்புலித் தாக்குதலில் இலங்கையயே அதிர்ந்து போனது! விடுதலைப் புலியணிக்கு வெற்றிக்கீரிடமாய் அமைந்த இந்தத் தாக்குதலில் போது மில்லர் காற்றோடு காற்றாய் கலந்து போனான்.

பின்பு 1987–ஆம் ஆண்டு ஜூலை மாதம் இந்திய இராணுவம் முதன்முதலாக ஈழமண்ணில் கால்பதித்து மக்களை, போராளிகளை, விடுதலைப் போராட்டத்தை நசுக்கி அழிக்க ஆரம்பித்தபோது அதனுள் அநியாயமாக அழிந்து புதைந்து போன மாவீரர்கள் ஏராளம் ஏராளம்.



அச்சமயம் பருத்தித்துறை கற்கோவளம் கடற்கரைப் பகுதியில் இயக்கப்பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நாதனும் அவனின் தோழர் ஒருவரும் வாகனத்திற்குள் வைத்தே இந்திய இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டமை இந்திய இராணுவத்தினர் மீது அவ்வூர் மக்களுக்கு அச்சத்தையும் மிகுந்த வெறுப்பையும் ஏற்படுத்தியது.

நாதன்! கண்ணாடி பிரபா என எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்டவன். குழந்தை உள்ளம் கொண்ட இனிய சுபாவமுள்ளவன்! தம்பி மொறிசுக்கு நெருங்கிய தோழன் ஒரு சமயம் நாதன் போர்க்களத்திற்குப் புறப்படும் போது 'திரும்பிவரவிட்டாலும் என்னை ஞாபகம் வைத்திரு' என்று ஒரு அழகிய தோற்பையை தம்பி மொறிஸுக்கு அன்பளிப்புச் செய்திருந்தான். போர்க்களத்தில் வெற்றி கொண்டு திரும்பி வந்தவனிடம் 'அந்தத் தோற்பையை மட்டும் திருப்பிக் கேட்டுவிடாதே' என்று மொறிஸ் குறும்பாகக் கூற, சுற்றி நின்ற எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். அப்போது மகிழ்ச்சியில் கண்ணீர் துளிர்த்தது! இப்போது..?

கடற்புலி லெப். வெங்கேடசன் விடுதலை வெறியும் ஆக்ரோஷமும் நிறைந்த இனிய வீரன்! அவனின் குடும்பஸ்த்தர்கள் கூட அவனைப் போலவே விடுதலைப்பணியில் வேகம் நிறைந்தவர்கள். 'கடலினுள்ளும் கோட்டை கட்டி கொடிநாட்டுவோம்.' என்று அடிக்கடி வீரவசனம் பேசி காதடைக்கக் கர்ச்சிப்பான். 1988–ம் ஆண்டில் அவனும் அவனின் தோழன் றவாசும் இந்திய இராணுவத்தால் கொல்லப்பட்டார்கள்.

ரவிராஜ்! கொக்குவிலில் பிறந்து வளர்ந்து, பருத்தித்துறைக்கு வந்து, மக்களோடு மக்களாய் இயக்கப் பணியாற்றியவன். தம்பியார் மொறிஸூக்கும், மயூரனுக்கும் இனிய நண்பன். எம்மவர்க்கு அனபுச் சகோதரன். அவனுக்கு படிக்க வேண்டும் என்று நிறைய ஆசை இருந்தது. ஆனால் அதிகம் பேசிக்கொள்ளத் தயங்குவான். மொறிஸ் எப்பவும் அவனை அழ அழச் சீண்டுவான். 1988–ல் இந்திய இராணுவம் வந்தபின் வடமராட்சியில் நடைபெற்ற என் இலக்கிய நூல் வெளியீடு ஒன்றிற்காய் இயக்க சார்பாக முன்வந்து பல உதவிகள் புரிந்தான். அன்பும் இரக்கவுணர்வும் நிறைந்த அந்த மாவீரன் கப்டன் ரவிராஜ் 1989–ம் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் கோண்டாவிலில் இந்தியப் படையினரால் வீதியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டான்.

மொறிஸ்! ஒரு சிறந்த போராளி என்பதை விட பருத்தித்துறையிலிருந்து வல்வெட்டித்துறை தொண்டமானாறு ஈறாக, அம்பன், குடத்தனை, நாவுறுகோவில் வரை எல்லா மக்களின் மனதிலும் இடம்பிடித்துக்கொண்ட இனிய வீரன்! சின்னக்குழந்தைகளுக்கு அன்பு மாமன் அவனோடு சேர்ந்த குடும்ப நினைவுகள், அவனின் தோழர்கள் கூறிய போர்க்கள நினைவு



தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/

கள், வடமராட்சி மக்கள் கூறும் அவனின் பரிபாலனத்தையும் பண்பையும் பறைசாற்றும் நினவுகள் ஏராளம் ஏராளம் மனதில் வந்து குவிகிறது. அவனின் மென்மையான நகைச் சுவைப் பேச்சும், இனிய புன்னகையும், போர்க் களத்தில் வேகங்கொண்டு சீறும் வேங்கைத் தனமும் எல்லோராலும் வர்ணிக்கப்பட்ட அம்சங்கள். அவனின் இயக்க தீவிரமே அவ னின் அடுத்த உடன்பிறப்பான மாவீரன் கப் டன் மயூரனையும் போராட்டத்தில் இணைய வைத்தது. அதீத துணிச்சலும் தன்னம்பிக் கையும் மிக்க அவன் பல களங்களில் வீரவடு ஏந்தியவன். பருத்தித்துறைப் பொறுப்பாளா ராய் இருந்து மக்கள் பிரச்சினைகளையும் மதிநுட்பமாய் தீர்த்து வைத்தவன். ஒரு சமயம் என்னை வேற்றூரிலிருந்து ஆளனுப்பி அழைப் பித்திருந்தான். மூச்சுவிட்டாலும் முகர்ந்து பார்த்துவிட்டு அனுப்புகிற இந்தியப்படையின ரின் ஆதிக்ககாலமது. 'பொட்டண்ணாவைப் போய் உடனே சந்தியுங்கள்' என்றான். 'பொட் டண்ணாவையா? நானா? எதுக்காக? என் றேன்.

கலவரத்துடன், எதுக்காக என்பதெல்லாம் எனக்குத் தெரியாது; அவர் சந்திக்க விரும்பு கிறார்; சந்தியுங்கள்; ஆனால் அவர் என்ன உதவி கேட்டாலும் மறுக்காமல் செய்யுங்கள். அது தான் எங்களுக்கு முக்கியம்' என்று கூறி விட்டுப் போய்விட்டான். ஆனால் பொட் டண்ணா எதுவித உதவியையும் என்னிடம் கேட்கவில்லை. அப்பிரதேசத்தின் கலை இலக் கிய முயற்சிகளுக்கு இயக்கசார்பாக உதவிகளே தும் தேவையாக இருக்கிறதா? என்று விசாரிக் கவே அழைத்திருந்தார்.

உதவியளிப்பதற்காக அழைத்தவருக்கு உதவி செய்யும்படி சொல்லிவிட்ட அந்த மாவீரன் மொறிஸின் விசுவாச உணர்வையும் இயக்கத் தோழமையையும் எண்ணி மெய்சிலிர்க்கிறேன். 1989ம் ஆண்டு மே மாதம் 1-ம் திகதி ஆயிரக் கணக்கான இந்திய இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டு, பலமணிநேரம் போராடி உயிர் நீத்த மாவீரன் கப்டன் மொறிஸையும் அவனின் தோழர்கள் லெப். றம்போ, சிறீ ஆகியோரையும் இச்சந்தர்ப்பத்தில் கண்ணீரு டன் நினைவுகூருகிறேன்.

கேசரி மிகவும் குறும்புக்காரன். வடமராட் சிப் பகுதியில் போராளிகளின் வாகனங்களை எந்த இக்கட்டுகளினூடாகவும் புத்திசாதுரிய மாக ஓட்டக்கூடியவன்! தம்பி மொறிசுக்கும் மயூரனுக்கும் இனிய நண்பன் – ஒரு சமயம் கேசரி நம் வீட்டுக்கு வந்த போது 'ரீ போட்டுத் தரட்டுமா? என்று கேட்டேன். ரீயா? என்று விட்டு மெல்லமாக எழுந்து சமயலறைக்குள் வந்தான். ஹார்லிக்ஸ் ஒரு ஸ்பூன், பூஸ்ற், போன்விற்றா, பால் எல்லாம் கலந்து பாணி போல ஒரு 'கப்' குடித்தான். சத்தாக இப்படிக் குடிக்காவிட்டால் எப்படி தெம்போடு வேலை செய்ய முடியும்? மற்றப்பெடியளுக்கும் இது மாதிரிக் கொடுங்கள் என்று கூறிவிட்டுப் புறப்பட்டான். நாமெல்லோரும் விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டோம். மறக்கமுடி யாத அந்த நினைவுகளிடையே.... ஆனையிறவு இறுதிச்சமரில் கனரக வாகனம் கொண்டு சென்று கணப்பொழுதில் காற்றாகிப் போனான். இன்றும் அவன் நினைவு நெஞ்சை அடைக் கும்.

மற்றும் என் உடன்பிறப்பாய் இருந்தவன் என்பதை விட, தலைவரின் அருகாகவும் காட்டு வேங்கையாகவும் வீரத்துடன் களமாடி, மணலாறு, மண்கிண்டி, ஆனையிறவுச் சமர்க ளில் வெற்றிகொண்டு, இறுதியில் 13.11.93ல் பூநகரிப் தவளைப்பாய்ச்சலில் முதல் அணி யாய் உள்நுழைந்து தீயோடு தீயாய் சங்கமாகி விட்ட இந்த இனிய மாவீரன் கப்டன் மயூர னையும் அவனின் விடுதலைக் கனவுகளையும், நிறையும் கண்ணீருடன் என்றும் நினைவு கூருவேன்.

மாவீரன் கப்டன் குட்டி காட்டிற்குள் காவியமான கப்டன் சுபேசன் (புலோலி) கண்கள் கலங்க உணர்ச்சிப் பெருக்குடன் அரசியல் பேசி 1993-ல் பூநகரிச்சமரில் போர் புரிந்து காவியமான லெப். கேணல் பாமா (பொலிகண்டி) கப்டன் சித்தப்பா (பருத்தித் துறை) லெப். அல்விஸ், படுக்கையில் சுகவீன மாக இருக்கையில் இந்தியப்படையால் சுட்டுக் கொல்லப்பட்ட லெப். வெள்ளை (புலோலி) கப்டன் ஹரன், லெப். அருண், கப்டன் பார்த் திபன், கப்டன் ரவி (பருத்தித்துறை) கேணல் கிட்டுமாமா... இன்னும் பெயர் மறந்து போனா லும் முகம் மறக்க முடியாத; அவர்தம் வீரச் செயல்மறக்க முடியாத ஆயிரமாயிரம் இனிய வீரர்களை அவர்களின் தியாகங்களை கண் ணீருடன் நினைவுகூர்ந்து அஞ்சலிக்கின்றேன்.

- ஈழநிலா (லண்டன்)

## எங்கள் தேசத்து நிஜங்கள்!

எங்கள் தேசம்
செந்தணலாய் எரிகிறது!
என்றும் போலவே
இரத்தமும் கண்ணீரும்.

எரிமலையாக குமுறும்
எங்களின் நெஞ்சங்கள்
இனி,
புதிய விடுதலைக்கு
பூபாளம் பாடும்

கொடிய எதிரியின்
கொட்டங்கள் அடங்கிட - எங்கள்
தேசமே பொங்கி எழும்!

சத்தமின்றியே - நிதமும்
செத்துமடிகின்ற
வீர விழுதுகள்
'விடுதலை வேரை' விசாலமாக்கும்!

காவியநாயகர்களின்
கல்லறைகள்
சுதந்திரத்தை ஒலிக்கும்!
இது எங்கள் தேசத்து நிஜங்களே!

- முல்லைதரன்



தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/

# தொல்லை தொலைந்த முல்லை

முல்லைப் பெருங்கடல் மூச்சிரைத் திருக்க
முழுநிலவும் ஒருமுறை விடுமுறை கேட்டது
மெத்தக் களிப்பில் முல்லைப் பெருமுகாம்
நீளிருட் போர்வையில் நீட்டிப் படுத்தது
பிரளயம் நிஜமென்று பெருங்கடல் ஆர்க்க
பேரலை கரைவந்து வேவுகள் பார்த்தது
ஓயாத அலைபொங்கி உள்ளே புகுந்ததும்
பகைவீட்டு முற்றத்தில் பலிவீழ்ந்து போனது

தாயை நிகர்த்த நம் தாயகக் காதலால்
தானைப் புலிவீரர் சன்னதங் கொண்டனர்
நாயாறு மணலாறு நாடி துடித்தெழ
நந்திக்கடல்கூட நன்றியெனச் சொன்னது
புயல் புகுந்த மாதிரியாய் புலிபுகுந்து
தானும் வீழ்ந்து தருக்கரை அழித்தது
அவலக் குரலெடுத்த ஆட்காட்டி இணைகள்
சேதிகள் சொல்ல தென்ஈழம் சென்றது

ஆயிரமும் தாண்டி ஆதிக்கப் பேயழிய
முல்லையை மீட்க பிள்ளைகள் வீழ்ந்தனர்
அலம்பில்கரை தொட்டவர் ஆவி ஏகுமென
அழகு மயிலொன்று அகவிப் பறந்தது
புழுதியில் புரண்டொரு நிலக்கிளி நேர்வர
வற்றாப் பளையம்மன் வாஞ்சையாய் சிரித்தாள்
கொற்றமும் கொடியும் மீளுது பாரென
குழுவன் மாடுகள் கொக்கிளாய் நோக்கின

வெற்றிக்களிப்போடு தோழர்கள் களத்தில்
விதையாய் போனோரே விழித்தொருகால் பாரும்
சாவினில் வீழ்ந்து சரித்திரம் செய்தீர்
தொல்லை தொலைந்த முல்லையை பாரும்
வரலாறு தந்தும் வாடிக்கிடக்கின்ற
வீர விழியொரு முறையேனும் மலராதா?
தமிழீழம் என்றொரு தாரகம் உரைத்த
பூவிதழ் மீண்டும் இனி பூக்காதா?

– சோதியா (நோர்வே)



தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/




'மா வீரர்' என்பது உயர்ந்த மரியாதை கொடுக்கும் உயர்ந்த சொற்பதமாகும். வாழ்க்கை வெறுமனே சுவாசிப்பதல்ல; அது அற்புதமான செயல்முறை. நாட்களின் நீட்சியை விடவும், வாழ்தலின் கூரிய உணர்விலேதான் வாழ்க்கை அடங்கியிருக்கிறது என்பதற்கு இலக்கணமானது மாவீரர்களின் வாழ்க்கைக் காலம். தன்னை ஆக்குவதன் மூலம் தன் சமூகத்தை உருவாக்கி, மற்றவருக்காகவே அனைத்தையும் கொடுத்து, எதிலுமே தம் பெயர்களைப் பொறித்துக்கொள்ளாது விட்டுப்போன பொருட்களில் எல்லாம் வாழ்ந்துகொண்டிருப்பவர் மாவீரர். ஒரு காகிதத்தையோ அல்லது ஒரு நாணயத்தையோ நோக்குவோர் அதில் இரண்டே இரண்டு பக்கங்களையே காணமுடியும். அதுபோல மாவீரத்திற்கும் இரண்டு பிரதான பக்கங்கள் உண்டு. ஒன்று வீரம், மற்றையது தியாகம். தமிழீழ விடுதலைப் போரும் இதற்குப் புறநடையல்ல. அந்த நாணயம் தனது வீரத்தின் முகமாக மில்லரையும், தியாகத்தின் வடிவமாக திலீபனையும் பொறித்து வைத்திருக்கக் காண்கிறோம்.

மாவீரர்கள் மதிப்பிற்குரியவர்கள். ஆனால், மாவீரர்களாலேயே பெருமதிப்புடன் நோக்கப்பட்ட இவ்விருவரின் வாழ்விலும் மறுபடியும் மறுபடியும் கூர்ந்து பார்க்கப்பட வேண்டிய செய்தியொன்றுண்டு. இந்திய உபகண்டத்தின் இராணுவ இயந்திரத்தையே தமது தனித்துவமான ஆன்மபலத்தால் இரண்டு தடவைகள் முன்னும் பின்னும் நகர்த்திக்காட்டிய வல்லமை கொண்டிருந்தவர்கள். ஒப்பிரேசன் லிபரேசனை முதற்கொண்டு, சூரியக்கதிர் தொடர் நடவடிக்கைகளூடாக சிறீலங்கா அரசு நடாத்திக் கொண்டிருப்பது உள்நாட்டுப் போர்களல்ல. அனைத்துமே அன்னிய தேசத்தின் மீதான படையெடுப்புக்களே. இப்போர்களில் சிறிலங்கா அரசின் வெற்றிகொள்ள முடியாத தகுதிக் குறைவை அவர்களுக்கே அம்பலப்படுத்தி, இந்திய இராணுவத்தைத் துணைக்கழைக்க வேண்டிய நெருக்கடிக்குள் தள்ளியது மில்லரின் மகத்தான தாக்குதல். அதுபோல தியாகி திலீபன் கொடுத்த எதிர்விசையே வந்திறங்கிய இந்திய இராணுவத்தையே பாரிய இழப்புக்களுடன் வெளியேற்றி வைக்கக் காரணமானது. பணிந்து போவோர்க்குக் கிடைக்காத மரியாதை போராடுவோர்க்குக் கிடைக்கும் என்ற உண்மையை இந்திய இராணுவத்தையே அசைத்துக்காட்டி நிரூபித்தவர்கள் இவ்விருவருமே! எனவேதான் இந்திய வல்லரசையே இரண்டு தடவைகள் திடுக்கிட்டுத் திரும்ப வைத்த இருவருமே வீரமும் தியாகமுமாகச் சுழன்றுகொண்டிருக்கும் தமிழீழப் போரின் இரு முகங்களாயினர் எனலாம்.

இவ்விரு பக்கங்களையும் நன்கு கணித்து வைத்துக்கொண்டவர் எமது தேசியத் தலைவர். மாறும் அரசியல் சூழ்நிலைகளுக்கேற்ப இதில் எப்பக்கத்தைப் பிரயோகிக்க வேண்டும் என்பதை மதிநுட்பத்துடன் தெரிவுசெய்து, எதிரியின் இராணுவத்தை எப்பொழுதுமே தோல்விப் பொதி சுமப்போராக்கி வைத்திருப்பவரும் அவரே. போர் என்பது படைபலமல்ல. சிந்தனையில் ஒருவரை மற்றவர் முந்திச் செல்லும் செயற்பாடே என்பதை இந்திய சிறீலங்கா அரசுகளுக்கு விடுதலைப் புலிகளின் வீரத்தாலும், தியாகத்தாலும் உணர்த்தி வைத்தது அவரது ஆளுமை. "வீரமும், தியாகமும் மட்டுமல்ல அதனோடு கொண்ட கொள்கையில் விடாப்பிடியாக இருப்பதே புரட்சியில் வெற்றியின் ஆன்மாவாக இருக்கும்" என்ற டான்டனின் கூற்றுப்போல, உறுதியான கொள்கையால் விடுதலைப் பயிரின் ஆன்மாவாகவும் ஒளிகாட்டியோ மாவீரர்களாவார். இத்தகு மாவீரத் தியாகிகளுக்கும் தலைவருக்குமிடையே கட்புலனாகாத வகையில் ஓர் ஆத்மார்த்தத் தொடர்பு கனவுக்கும், நனவுக்கும் வேறுபாடு தெரியாதவகையில் இயங்கிக் கொண்டிருப்பதை விளக்க எண்ணற்ற சாட்சியங்கள் உள. இத்தகைய ஆத்மார்த்த உறவுகள் இல்லாவிட்டால் 'மாவீரர்களின் தேசம்' என்ற சிறப்பைத் தமிழீழம் இவ்வளவு குறுங்காலத்தில் எட்டிப்பிடித்திருக்க முடியாது.

தலைவருக்கும் மாவீரர்களுக்குமிடையே எழுதமுடியாத விதியாக இயங்கிக்கொண்டிருக்கும் தொடர்பை விளங்கிக்கொள்வதற்காக பாரதக் கதையை ஓர் எடுகோளாக்கிப் பார்த்தால் விளக்கக்கூடியதாக இருக்கும். பாரதப் போரின் பார்த்தசாரதியென்று கூறப்படும் கண்ணனுக்கும் பாண்டவர்களுக்குமிடையே மறுக்கமுடியாத தொடர்பொன்று மறை



தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/

பொருளாகி நின்றது. "யுத்தம் யுத்தமே! அதை முடிப்பதில் தயக்கமும் கால விரயமும் காட்டலாகாது!" என்ற செய்தி இக்கதையிலும் உள்ளது. இவ்விதம் வெற்றியாகவும் தாமதமின்றியும் முடித்து வைக்கப்பட வேண்டிய யுத்தத்திற்கு வழிகாட்டியாக தானாகவே முன்வந்து ஊன் உயிர் உட்பட யாவற்றையும் தானமாக்குவதே 'களப்பலி' ஆகும். தொடர்ந்துவரும் வெற்றிக்கு இதுவே அவசியம் என்று வர்ணிக்கின்றன பழமைக் காவியங்கள். எனவேதான் வெற்றிக்கு வித்தாக அராவான் களப்பலியானான் என்கிறது பாரதக்கதை. இதைப் பின்னணியாக வைத்து தமிழீழத்தில் இந்திய இராணுவத்துடன் நடைபெற்ற போரை நோக்கினால் அதுவும் ஓர் பாரதப்போரே என்பது தெரியவரும். அப்போரில் தர்மத்தின் வெற்றிக்காக உண்ணாநோன்பிருந்து, சத்தியத்தைத் தானமாக்கி முதற்களப்பலியானவன் தியாகி திலீபன். அந்தத் தியாகத்தின் பெறுமதியை முழுத் தமிழினமுமே அறிந்து கலங்கினாலும், அக்காரியம் எதற்காக நிகழ்த்தப்பட்டிருக்கிறது அந்தத் தியாகத்தையே உயிர்மூச்சாக்கி எப்படி இந்திய அரசை வெற்றிகொள்ளப்போகிறோம் என்பதை துல்லியமாக எடைபோட்டிருந்தவர் தமிழீழப் போரின் பார்த்தசாரதியாக நிற்கும் தேசியத் தலைவரே. திலீபன் அடைந்திருக்கக் கூடிய உபாதைகளை மனதில் கொண்டு இறுதிவரை போராடும் வலுவை விடுதலைப் புலிகள் பெற்றுவிட இத்தியாகமே தலைமைக்காரணியாக நின்றது.

இவ்விதம் திலீபனுக்கும் தலைவருக்கும் அமைந்துவிட்டிருந்த எழுதப்படாத தொடர்பினை ஆரம்பத்திலேயே அனைவராலும் அறிந்துகொள்ள முடியாது போனது. ஏனெனில் அனுபவம் மிக்க மூத்த தளபதிகளே "பாரதத்துடனான போரிலிருந்து நாம் மீள முடியுமா?" என்று வினவியதாக பின்னாளில் வெளிவந்த குறிப்புக்களால் இதை உணர்ந்து கொள்ள முடிகிறது. இந்தியா கூறிய பேச்சு வார்த்தை பொருளற்றது. எப்போதுமே சுதந்திர மனிதர்களால்தான் பேச்சுவார்த்தை நடாத்தி உடன்பாடு காணமுடியுமென்பதை தனது உரைகளில் மட்டுமல்ல; தொடர்ச்சியான செயல்பாடுகள் மூலமாகவும் விளக்கி வந்திருக்கிறார் தலைவர். திலீபனின் மரணத்தின்பின் இந்தியாவுடனோ சிறீலங்காவுடனோ பேசுவதற்கு அவரிடம் எதுவுமிருக்கவில்லை. போரின் மூலம் சுதந்திரத்தைத் தேடுவதற்காகவே இந்தியாவுடன் போர் புரிவது என்ற மாற்று முடிவை அவர் எடுத்திருந்தாரென அறியக்கிடக்கிறது. "எதிராளி வலுவானவன் என்று யோசிப்பதானது வெற்றிக்கான முக்கிய தடை!" என்ற தலைவரின் ஆத்ம விருப்பை விளங்கி இந்தியாவிற்கெதிராக முதல் அடி வைத்தது திலீபனே. இது திலீபனுக்கு மட்டுமல்ல, இவ்விதமாகவே ஒவ்வொரு மாவீரனுக்கும் தலைவருக்குமிடையே தர்மத்தின் குரலாக ஒரு இயங்குநிலை விதி செயற்பட்டுச் செல்லக் காண்கிறோம்.

மகான் என்பது, "சக மனிதர்களின் அநீதிக்கெதிரான போராட்டத்தில் தன்னையே தியாகம் செய்து எடுபடுபவனைக் குறிக்கும்!" என்று பகத்சிங் தனது சிறைக்குறிப்புகளில் கோடிட்டுக் காட்டுவார். இதற்கமையவே இம்மாவீரத் தியாகிகளின் வாழ்விலும் விஞ்ஞானத்தால் விளக்கமுடியாத இயற்கையின் மொழியொன்று இயங்கிக்கொண்டிருப்பதாக எண்ணமுடிகிறது. கடலில் சூரியன் போல கேணல் கிட்டு சமுத்திரத்தில் தீமூட்டிக் கொண்ட போது நவக்கிரகங்கள் போல அவருடன் ஒன்பது வேங்கைகள் சகம் புரிந்தனர். இது போலவே தியாகி திலீபன் உண்ணாநோன்பிருந்து, தன்னை வருத்தி மரணித்த நாட்கள் பன்னிரண்டு. அதுபோலவே இந்தியாவுடனான போரைத் தொடங்க உடனடிக் காரணமாக அமைந்துவிட்ட குமரப்பா, புலேந்திரனுடன் மரணித்த வேங்கைகளின் எண்ணிக்கையும் பன்னிரண்டு. ஏன் இப்படி? காரணத்திற்கு விஞ்ஞானபூர்வமான விளக்கமில்லை. ஆனால் சொல்லிவைத்தாற் போன்ற தொடர்புகள் அனைத்துச் சம்பவங்களையுமே ஓர் நெடிய சங்கிலிக் கோர்வையாகப் பிணைத்து நிற்கக் காண்கிறோம். "மாவீரத்தைப் போற்றிப் பாடும் இரைப் பறவைகள் ஓயும்! அப்போது ஆத்மா வானில் ஒளிர்வான்!" என்பது ஓர் சரித்திர நியதி. இதேபோல எதிரி இயங்கமுடியாது போகும் காலம் தொலைவில் இல்லை. சுதந்திரத்திற்காக நீண்ட நெடுங்காலம் காத்திருக்கும் நம்மினத்திற்கான விடிவுபிறக்கும் போது அதற்கு ஒளிகொடுத்து நிற்பதும் மாவீரர்களே.

— **கி. செ. துரை**

## தமிழீழ விடிவு

"விடுதலைக்காக
சக்திக்கு மீறிய விலை கொடுத்துவிட்டோம்
இன்னும் இன்னும் விலைகொடுப்போம்.
விலங்குகளற்று கைகள் வீசி நடப்பதற்கு
எஜமானர்களின் கட்டளையேற்று வேலை செய்வதற்கு
...ம்பு என்று யாரும் சொல்லாது குந்த
ஒரு குடி நிலம் வேண்டும்.
அது தமிழீழம்."





தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/

# கரும்புலிகள்

விஞ்ஞானிகளே..!
உங்கள் சூமேக்கர்லெவிக்கான தொலைநோக்கிகளை
உளநோக்கிகளாக்குங்கள் - முடிந்தால்
எங்கள் கரும்புலிகள் உள்ளத்துணர்வுகளை
கணிப்பிட்டுக் கூறுங்கள்.



டார்வினே!
வாழ்க்கைப்போரில்
தக்கன பிழைக்குமென
தர்க்கமாய் உரைத்தீரே!
கரும்புலிகள் என்ன
வாழத் தகுதியற்றவர்களா?

வரலாறே!
ஒருமுறையுன்னைப் புதுப்பித்துக்கொள்
கரும்புலிகள் எனும் அத்தியாயத்தை
உன்னோடு புதிதாகச் சேர்த்துக்கொள்

கவிஞர்களே!
கற்பனையில்கூட தர இயலாத
கரும்புலிகளைக் கருத்தோவியங்களாக்க
உவமான உவமேயங்களுக்காக
எங்கே போகப் போகின்றீர்கள்?

கடலலையே!
விடலைப் பருவத்துக் கரும்புலிகள்
உன்னோடு
விளையாடியதெல்லாம் தங்கள்
உடலோடு உயிரை அழித்திங்கு - பகைவன்
படகோடு அவன் உளவுறுதியை
உடைத்தெறிவதற்காகவா?

தாரகைகளே!
உங்கள் கண்சிமிட்டலில் கரும்புலிகள்
தங்கள் உடலை வருத்தியதெல்லாம்
எங்கள் எதிர்காலச் சந்ததியின்
மங்காத ஒளிர்விற்காகவன்றோ!

– தூயவன்



தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/



# கனவுகளுக்கு வலுசேப்போம்

**கார்த்திகை மாதம்,**

இனிய வசந்தம் காற்றுடன் இணைந்து வரும். புற்கள் முகம் காட்டும். பூமியெங்கும் உயிர்ப்புப் பிறக்கும். அந்த அழகிய காலம் உங்களுக்கானது தோழர்களே!

உங்கள் உயிராலும், உயிர் சுமந்த உடலாலும், உருக்கொடுத்த உணர்வாலும் திரண்டு நிமிர்ந்தவை எங்கள் தாயகமும், தமிழீழத் தேசியமும்.

அதன் ஆதர்ஸத்தில் வாழ்பவர்கள் நாங்கள்.

அதனால்தான் நண்பர்களே!

ஒரு வசந்தம் துளிர்ப்பதற்காய், ஒரு விடியல் மலரின் பிரசவிப்புக்காய் துயிலிடங்களில் உறங்கும், உங்கள் நினைவுக்காய் கார்த்திகை மாதத்தை உங்களுக்குத் தந்துள்ளோம்.

சென்ற ஆண்டுகளில் எங்கள் வீதிகள் உங்கள் நினைவுருக்களால் நிறைந்தன.

மரங்கள் பனி சொட்ட விடிந்த காலையிலிருந்து, நிலவு உச்சியில் நிற்கும் பொழுது வரை உங்கள் உணர்வுகளைக் காற்றும் கடலலையும் பாடின. பறவைகளின் கீதங்களிலும், மனிதர்களின் மொழிகளிலும் நீங்கள் ஒன்று கலந்தீர்கள்.

விழி நீரில் நெய்யூற்றி, மனமெடுத்த பூத்தூவி, சுடரேற்றி உங்களைப் பூசித்தோம்.

மாவீரர் துயிலுமில்லங்களை எழிலார்ந்த சொர்க்கபுரிகளாக்கினோம்.

நடுகல் வரிசையில் அயர்ந்து தூங்குகின்ற உங்களை நோக்கி, துயிலெழுச்சிப் பாடலிசைத்தோம். நள்ளிரவின் நாதமணியொலியும் அதைத் தொடர்ந்த அமைதி வணக்கமும் துயிலெழுச்சிப் பாடலுமான அந்தப் பொழுதுகளில் உங்களை எழுப்பி, உங்களோடு அருகமர்ந்து உரையாடினோம்.

உங்கள் தியாகங்களை மீட்டினோம்; நீங்கள் ஏந்திய உணர்வுகளை வேண்டினோம்; உங்கள் கனவுகளில், நாங்கள் தாண்டிய ஒவ்வொரு படிகளையும் எடுத்துரைத்தோம்; எல்லாவற்றிலும் ஒன்றி நாம் மனங் கலந்திருந்தோம் அந்தக் கணங்களில்.

தேவகுமாரர்களே!

நாங்கள் வாழ்வதற்காய் வீழ்ந்தவர்களாதலால், உங்களை விடப் பெரும் பொருள் எங்களுக்கில்லை. தாயகத்தைக் காதலித்த உங்கள் அகதாகத்தை நாங்கள் நெஞ்சிலேற்றியுள்ளோம் இப்போதும்.

ஆனால் தோழர்களே!

இந்த ஆண்டில் விடுதலை நோக்கிய எங்



தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/

கள் பயணம் புதிய பரிமாணத்தை எட்டியுள்ளது. தமிழீழத்தின் ஒரு பகுதி யுத்தத்தின் கொடும் புயலில் சிக்கிச் சீர்கெட்டுள்ளது. டாங்கிகளையும், பீரங்கிகளையும், இன்னும் கொடிய அஸ்திரங்களையும் கொண்டு அசுரர்கள் வளமார்ந்த பூமியைக் கீறிக் கிழிக்கிறார்கள். அவர்களின் காலடியில் நசுங்கித் தீய்கிறது யாழ்ப்பாண நகரமும் வலிகாமப் பிரதேசமும். எல்லாப் பிரதேசத்திலும் எதிரியின் கொடிய மூச்சுப் படர்கிறது.

உண்ண வகையற்று, உறங்க வழியற்று, எண்ணமெல்லாம் சிதைந்து இடம்பெயர்ந்து ஓடிக்கொண்டிருக்கிறார்கள் உங்களால் நேசிக்கப்பட்ட மக்கள்.

இது வெறும் ஓட்டமல்ல தோழர்களே!

உங்களால் நேசிக்கப்பட்ட மக்கள் — நாம் — உங்களைப் பூசிக்கத் தவறவில்லை. உங்கள் உணர்வுகளை ஏந்தி நிற்கும் எமது இந்த ஓட்டம் வரலாற்றுத் தேரைப் புதிய வழிக்கு இட்டுச் செல்லும் ஓட்டமென்பதை உங்களுக்குச் சொல்லிவைக்கிறோம்.

வலிகாமத்தில் — கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தில் — சென்ற ஆண்டுகளில் நாங்கள் அலை அலையென ஒன்றுகூடினோம். காற்று நசிய, வெற்றிடமற்ற பெரும் எண்ணிக்கையில் உங்கள் பூமுகம் பார்க்கக் கூடி, உங்களோடு பேசிவிட்டு வந்தோம்.

இன்று உங்களிடத்தில் வந்து, அருகமர்ந்து, உங்களைப் பார்த்துப் பேசிட முடியவில்லை. கொடியவர்களின் கூடாரமாக அப்பூமி மாற்றப்பட்டுள்ளது. உங்களுக்குக் காணிக்கை செலுத்த வழியற்றுத் தவிக்கின்றோம் நாம்.

ஆனாலும் நண்பர்களே!

இக்கணத்தில் உங்கள் உணர்வுகள் எப்படியிருக்கும் என்பதை நாமறிவோம். உங்கள் விழிகளில் தீ பற்றியெரிந்து கொண்டிருக்கும்; எதிரிகளைத் துவம்சம் செய்ய ஆணையிடும் உங்கள் புலன்கள்.

அதை நாங்கள் உள்வாங்கிக்கொள்கிறோம்; அது நாளை கைகூடும் என உறுதி தருகிறோம்.



மழை பெய்து பூரித்த இந்தக் கார்த்திகையில் — இடையில் எரிந்த வெம்மையிலும் — எங்கள் மனங்கள் உங்கள் நினைவுகளில் நிறைந்துதான் போயிருக்கின்றன. உங்கள் நினைவுகளை நாம் விட்டு விடவில்லை எப்போதும்.

வலிகாமத்தில் தான் உங்கள் துயிலும் இல்லங்களுக்கு வந்து தொழ எம்மால் முடியவில்லை. ஆனாலும் தமிழீழத்தின் ஏனைய பிரதேசங்களிலும், தமிழர்கள் பரந்து வாழும் ஏனைய உலக நாடுகளிலும் மாவீரர் தின நிகழ்வுகள் எழுச்சியுடன் நடைபெறுகின்றன. அங்கெல்லாம் நாங்கள் உங்களோடு நெருங்கிப் பேசுகிறோம்.

விடுதலை வரலாறு தோற்றுப் போகாது வீரர்களே!

உங்கள் உணர்வை ஏந்திச் செல்லும் தோழர், தோழியர் எதிரிகளிடம் இராட்சதப் பீரங்கிகளின் முன்னே நேர் நின்று அவற்றைப் பிளந்தெறிகிறார்கள். மழையெனப் பொழியும் ரவைகளிடையே பாய்ந்து சென்று எதிரிகளைச் சின்னாபின்னமாக்குகிறார்கள்.

விடுதலைக்காக எத்தகைய விலையைக் கொடுக்கவும் இந்த மண் தயாராகிவிட்டது.

அதனால் தோழர்களே!

உங்களுக்குச் சத்தியம் செய்து தருகிறோம்.

நீங்கள் என்ன கனவு கண்டீர்களோ, எதை நம்பினீர்களோ, எதற்காக இறுதி வரை உங்களை அர்ப்பணித்தீர்களோ அதை, அந்த இலட்சியத்தை நாங்கள் மேலும் வலுவேற்றித் தொடர்வோம்.

எமது தேசத்தை எதிரியின் ஆக்கிரமிப்பிலிருந்து முழுமையாக நீக்கி, சுதந்திர தமிழீழ தாயகத்தில் எழுச்சி பொங்க மாவீரர் நாளைக் கொண்டாடுவோம்; உங்கள் அருகமர்ந்து நீண்ட பொழுதாய்ப் பேசுவோம்.

https://tamileelamarchive.com/



# தீயை விதைப்போம்

உடலம் புழுதிபட, அறுவாய் நெய்வழிய
அங்கங்கள் செங்களத்தில் ஒவ்வொன்றாய்த் துண்டுவிழ
நெஞ்சம் பதைக்காமல், மேனி நடுங்காமல்
அஞ்சுதல் இன்றி அவர் செபிக்கின்ற மந்திரம்
"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

வானம் அதிர வெடிவெடிக்கும்.
மின்னல் போன்று ஒளி தெறிக்கும்.
கரியபுகை மேலெழும்பும்.
புழுதி கிளம்பப் புலிவாய்ந்த திசை பார்த்தால்....
எதிரி இருந்த அரவம் இருக்காது, அதுபோல
எங்கள் கரும்புலியின் வித்துடலம் கிடைக்காது.
சிரித்தபடி கையசைத்துச் சென்ற வெம்புலியின்
செபித்த மந்திரம்தான் எமைச்சேரும்.
"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்."

எண்ணிப்பார்க்கவே நெஞ்சால் முடியாத தியாகங்கள்.
எம்மோடு வாழ்ந்தவர்கள். எம்மோடு ஒன்றாய் உண்டு மகிழ்ந்தவர்கள்.
சண்டைபிடித்தவர்கள் சமாதானம் ஆனவர்கள். கைகோர்த்து வீதியுலா
வந்தவர்கள்.... இன்னும் இன்னும் பசுமையாக நெஞ்சுக்குள்
சண்டைபிடித்துக் கொண்டிருக்கின்ற நினைவுகளின் சொந்தக்காரர்கள்.
எல்லோரும் எங்கே போனார்கள்?
ஏன்....? ஏன் இந்தத் தற்கொடைகள்....?
இதயம் உள்ளோரே கேளுங்கள்.
ஏன் இந்தத் தற்கொடைகள்...?
தம்மைச் சுற்றி தாமே தீமூட்டி
ஏன் இந்தத் தீக்குளிப்பு....?
போர் முகத்தில் மரணம் உறுதி என்றுணர்ந்து
ஏன் இந்தப் புயற் கோலம்....?

இனிமையான..... இளமையான வயதில் வர்ணக்கனவுகளை ஒதுக்கி வைத்துவிட்டு
தேச விடுதலைக்கு வர்ணம் குளைத்தவர்கள்.
கறுப்பைச் சிகப்பாக்க தம் உதிரம் பிழிந்தவர்கள்.
தம்மை வருத்தி வருத்தி.... தேசத்திற்கு வாழ்வு கொடுத்தாரே..... ஏன்...?
ஏன்.... இந்தச் சுயவதைகள்....?

கடிமனங்களில்....இந்தக் கேள்விகளால் அறையுங்கள்.
அங்கே நீர் சுரக்கும்.
இதயப் பரப்பில் மென்மை சுடர்விடும்.....
தேசத்திற்கு கைகொடுக்கின்ற ஆசை.... ஆவல் பீரிடும்.

மாவீரர் நாளில்... எங்கள் தேசிய எழுச்சி நாளில்
புதிய நம்பிக்கைகள் பொங்கிவரட்டும்.
கைநீட்டிப் பிரிந்த எங்கள் உறவுகளின் நம்பிக்கையை இறுக்கிப் பற்றிப்பிடிக்கின்ற
உறுதிகள் விளையட்டும்.
தாயை நிகர்த்தும் எங்கள் தேசத்தைக் காக்க எங்கள் வீரர்கள் தங்களைத்
தந்தார்களே.... உங்கள் நினைவுடன்.... அந்த இலட்சியம் காக்கும் போரினைத்
தொடர்வோம் என்ற உறுதியைத் தருவோம் அவர்கட்கு.

எண்ண வருடலில் ஈரம் சுரக்கின்ற இதயங்களே!
அவர் வீரமுகமும், வெற்றிக்கள நினைப்பும்
ஆற்றல்மிகு பேச்சும், அழகான புன்சிரிப்பும்
ஏற்றமிகு கொள்கை, வளையாத மன உறுதி
நேர்கொண்ட பாதை, கடந்து சென்ற நெருப்பாறு
யாவும் விரியட்டும்.
யாவும் விரிந்த வளமான மனப்பரப்பில், தீயை விதைப்போம்!
தீயை விதைத்து, விடுதலையை அறுத்தெடுப்போம்!!

— ஜெயா



தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/

# வேட்கை

பொழுது புலராத அந்த நேரத்தில்..... இருள் அதிர்ந்தது! தங்கள் கிளைகளோடு கிளம்பிய அரக்கர்கள்; ஆயிரம்...ஆயிரம் கைகளில் ஆயுதங்களை உயர்த்தியபடி..தீப்பொறிகளை உமிழ்ந்து தள்ளியபடி; பேரிரைச்சல்களை எழுப்பி... ஆகாயத்துப்பிகளின் துணையோடு.... தங்கள் அழிப்பு வேலையை ஆரம்பித்தனர்.

"வாறாங்கள்.... வாறாங்கள்! தம்பி எழும்படா! தங்கச்சி எழும்படி! ஓடுவம்....ஓடுவம்! வாருங்கோ ஓடுவம்!"

இவை அன்றாடம் வந்து மீளும் அவலங்கள்தான். ஓசை கேட்டு ஓடுவதும்; நிசப்தம் நிலவ திரும்புவதும்.... இந்த எல்லைப் புற வாசிகளான எங்களுக்கு வழக்கமாகிவிட்டது.

அமைதித் தேவதை தன் சேலைத் தலைப்பால் முக்காடிட்டு; மூலையிலே முடங்கிப் படுத்து வெகுகாலமாகி விட்டது. விரக்தி சுமந்து வாழும் வேதனை நெஞ்சங்கள்... நெடுமூச்சுக்களை இறைத்து அலுத்துவிட்டன. ஊரைவிட்டு வெளியேறி; எங்கோ தொலைந்தவர்களைவிட; எங்களைப் போன்றவர்கள் இன்னும் நிலத்திலே நின்றுபிடிக்கிறோம்.

"அவன்களை இஞ்சாலை கடைசிவரை வரவிடம்! பவளம் அக்கா! பயப்பிடாமல் இருங்கோ!" என்ற திலகனின் குரல்; அடிக்கடி என் செவிகளில் ஒலித்தது... நம்பிக்கை சுரப்பியை நெருடிவிடும் அந்தச் சின்னஞ் சிறிய போராளிக்கு இருக்கும் மனஉறுதி; வயது இருபதைத் தாண்டிவிட்ட தடிக்குமரியான எனக்கில்லையே..? என என்மனம் ஏங்குவதுமுண்டு.

சூரியனின் வரவு கண்டு, அசுரர்கள் திரும்பி விட்டார்கள். சுமந்து கொண்டு ஓடிய பொருள் பண்டங்களோடு; வீடு திரும்பும் படலத்தில் ஈடுபட்டோம். தங்கச்சி எப்போதும் போல் புத்தகக் கட்டோடு முன்னே போகிறாள்.

"கடவுளே! எப்பதான் இந்தக் கோதாரி அலைச்சல் தீரப் போகுதோ?" என உரக்கக் கூறி உள்ளம் வெதும்பியபடி; அம்மா தனது வற்றலான உடலைச் சுமந்தபடி பின்னே வருகிறாள்.

வண்டில் மாடுகளை விரட்டிக் கொண்டு அப்பா முன்னே போக; "வண்டிலை பூட்டியாங்க எண்ட; விட்டிட்டு.... என்னாலை நடக்கவும் ஏலுதில்லை" என்று, போலியோ வந்த தம்பி சிணுங்க; நான் அவனைத் தூக்கி நாரியில் ஏற்றியபடி நடக்கின்றேன்.

சமராடித் திரும்பிக் கொண்டிருந்த போராளிகள் எங்களை அனுதாபத்தோடு பார்க்கின்றார்கள். திலகனின் முகம் தெரிகின்றதா என்று தேடிய எனது கண்ணில் பெண் போராளிகளின் மிடுக்கு நடை உறுத்துகின்றது.

அரக்கர்கள் வந்து போன தடம் வழியெங்கும் ஆழப்பதிந்திருந்தது. ஆடுமாடுகள் கட்டோடு.... கருகிக்கிடந்தன! வீடுகள் அழிந்து... இடிந்து...புகை எழும்பி; எரிந்து கொண்டு... சேதத்தை எடுத்துக் கூறமுடியாத வாயடைத்த துயரங்களோடு வந்து சேர்ந்தோம்.

மரணித்துக் கிடந்த மயான அமைதியை கிழித்துப் போட்டபடி; அகிலா செய்தி கொண்டோடி வந்தாள். "அக்கா! எங்கடை திலகன் வீரமரணமாம்"

என் இருதயம் அதிர்ந்தது! கை வேறு.... கால் வேறாகக் கழன்று விழுந்துவிட்டது போல் கதறினேன். மண்ணில் விழுந்து குழறினேன்... துடித்தேன்... இன்னும் என்னென்ன செய்தேனோ எனக்குத் தெரியாது.

"அக்கா...அக்கா! பவளம் அக்கா! திலகனின் குரல் ஊசி இழைகளாய் என் உயிர் நரம்புகளில் ஊடுருவியது. விடுதலை வேண்டி உந்தி எழுந்த அந்தச் சின்னஞ்சிறு சிட்டுக் கடுவன்... வெடிபட்டு வீழ்ந்தான்! என்னால் அந்தத் துயரத்தை மிண்டி விழுங்கி; ஜீரணிக்க முடியவில்லை. அவனின் உடல் காணவேண்டி ஓடினேன்.

சிறிய வெள்ளை நெற்றியின் கீழ்.... அந்த அடர்ந்த புருவங்களின் கீழ் பறந்த அந்தக் கண்வண்டுகள்.. இமைகளுக்குள் சிறைப்பட்டுக் கிடந்தன. றோசாநிறக் கன்னங்களின் மினுக்கத்தை மரணம் பறிக்கவில்லை. சிவந்த அதரங்கள் இன்னும் சிரித்தபடிதான் இருந்தன.

திலகனின் புகழ் உடலைப் பிரிந்துவர முடியாதவனாக... பேழையை மூடி அடைக்



தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/

கும் வரை, உன்னத ஊர்வலம் முடியும்வரை, விதைகுழியில் அவன் உடல் விதைக்குமட்டும் என்னை இழந்தவனாக நான் நின்றிருந்தேன்.

என் நெஞ்சத்தை ஆற்ற எனக்கு நெடுநாள் தேவைப்பட்டது. அவ்வப்போது அவனின் முகம் தெரியும். அந்தக் கண்வண்டுகள் நிலை கொள்ளாது பறக்கும். முற்றத்து மாங்காயை எட்டிப்பிடுங்கி தானும் தின்று...எனக்கும் நீட்டும் அவனின் வேகம் தோன்றும். இடது கையை தூக்கி மணிக்கட்டை நோக்கி, பின் சயிக்கிலை உருட்டி.. தொங்கி ஏறி, எட்டாத



கால்களால் அங்கும் இங்கும் ஆடி அவன் உன்னி உழக்கிப் போய் மறையும் தோற்றம் தெரியும்.

இருளின் சுருதியை இல்லாதொழித்து இருந்தாற்போல் விண்ணெழுந்தது வெடிக்கும் தீயின் சுவாலைகள் இப்போதெல்லாம் என் இதயத்தை துணுக்குறச் செய்வதில்லை குண்டுகள்... துப்பாக்கி வேட்டுகள் இவற்றோடு; அசுரர்கள் எழுந்து வரும் அவல ஒலிகள் அவ்வளவாக என்னைப் பாதிப்பதில்லை.

மனம் சலிக்காது முகம் சுழிக்காது வேதனைகளை எதிர்கொள்ள என் மனம் முனைந்தது. அழிவுக்கு இடையே எழுந்து ஆக்கத்தை உருவாக்கும் ஊக்கம் வளர்ந்து வந்தது. சூழ்நிலை புரிந்தது! எதிர்காலத்தின் ஒளிக்கீற்று எனக்குள் தெரிந்தது;

விடுதலை வேண்டி வீறாப்போடு பறக்கும் சிட்டுகளின் சிறகொலி... என்னை வா வா என்று அழைத்தன. பயத்தின் பழுவால் மெல்லக் கூனிப் போய்விட்ட எனது முதுகு... என்னையறியாமலே நிமிர்ந்து கொண்டது.

"அகிலா நான் இயக்கத்துக்குப் போகப் போறன்!" தங்கையைப் பார்த்து நான் கூறியது அவளுக்குச் சிரிப்பை மூட்டியது.

"பயந்த பீச்சாண்டி! நீ இயக்கத்துக்குப் போப்போறியோ?"

உரக்கக் கேட்டவளின் உதடுகளைப் பொத்திவிட்டேன்.

விடிவை நோக்கி நான் புறப்படும் பயணத்திற்கு.... விடுக்கப்பட்ட அறிவிப்பாக அது அமைந்தது. பந்தபாசங்களால் மயங்கும் மனங்களின் மயக்கங்களைத் தாண்டி, துயில் நீங்கிய நம்பிக்கைச் சுடரை தூண்டிவிட்டபடி..... உன்னத இலட்சியத்தைத் தேடி அன்றே வீட்டின் படலையைத் திறந்து வெளிப்பட்டேன்.

பயிற்சிகள் முடிந்து முழுமையான போராளி என நிமிர்ந்த நான் இந்த மூன்றாண்டுக் காலத்தில் அனுபவரீதியாக அறிந்து கொண்டவை கல்விமூலம் கற்றுக் கொண்டவை எல்லாம் என்னை இன விடுதலைக்காக விரைவுபடுத்தின.

எமது எல்லைப் புறக் கிராமம் எதிரிகளின் கைக்குள் சிக்குண்டது கேட்டுவருந்தினேன். எங்கள் வீடு.... அயல் அட்டம்.... அம்மன் கோவிலடி, பாடசாலை.... அது... இது என்று என் நெஞ்சுள் திரைப்படமொன்று ஓடித் தீர்ந்தது.

ஆழப்புதைந்துபோன உறவுப்பிணைப்புகள் உடைப்பெடுத்து சிறு கணங்களை விழுங்கிக் கொண்டன. ஒல்லியான தேகமுடைய அம்மாவும் ஒருகாலை இழுத்து இழுத்து நடக்கும் என் தம்பியும் நீண்ட நேரம் நினைவில் நின்றாடி மறைந்தார்கள்.

சிந்தும் ஒவ்வொரு வியர்வைத் துளியும், குருதித் துளியும் தாயகமண்ணுக்காக என்ற நினைவு, உந்தி எழும் உற்சாகப் பெருக்கை, ஒவ்வொரு புதிய நாளிலும் வாரிவழங்கியது என்றும் உறைந்துபோகாத உணர்வுக் கிளர்த்தல்களோடு எதிரியைக் களங்களில் கண்டு எங்கள் மண்ணை விடுவித்து வந்தோம்.

சூறைக்காற்றாய் சுழன்றடிக்க சூழ்ந்து வந்து எமது மண்ணையும் மக்களையும் விழுங்க.... அசுரர்கள் போட்ட திட்டத்தை எதிர்கொள்ள; எழுந்த அணிகளுள் ஒருத்தியாகி நான் களத்திலே நின்றேன்.

மேகக்கூரைகளைக் கிழித்தெறிந்தபடி; விமானங்கள் வெளிக்கிளம்பிவந்தன... குண்டுகளைக் கொட்டின! இடியிடியாக அவை விழுந்தன. கடலெனப் பெருகி வந்த எதிரியைக் காப்பாற்ற வானத்தடுப்பு வலு மும்முரமாகியது.

ஊழிக்காற்றின் "ஹோ" வென்ற உறுமலோடு கூரிய துணிவோடு.... நேர் எதிர்கொண்டு நாங்கள் மோதினோம்! சுற்றி வந்த எதிரிபடை சற்றுப் பின்னோக்கி நகர்ந்து.... வீழ்ந்துபட்டு அச்சத்தொனி எழுப்பி... ஏக்கம் கௌவிக் கொள்ள, எங்கும் சிதறியது.

உதய சூரியன் முதிர்வடைந்து உச்சியைத் தொட்ட வேளையிலும் அடிபாடு முடியவில்லை. என் கண்முன்னே நின்று அடிபட்ட தோழி; அலறுவது தெரிகிறது. நெஞ்சால் தவழ்ந்து சென்று; அவளை நிமிர்த்தியபோது...

புலன்கள் அதிர...மின்னாமல் முழங்காமல் இடியொன்று என்மடியிலே இறங்கியது. அது அகிலா. என் உடன் பிறப்பான அகிலாவே தான்.

வேகமாய்ப் பாய்ந்துவந்த பாசப்பெருக்கோடு... 'அகிலா! அகிலா....' என அழைக்கிறேன். மெல்ல விழிகளை உயர்த்தி கூர்குறிப்பாய்பார்த்தவள், கணப்பொழுதில் என்னைக் கண்டுபிடித்துவிடுகிறாள்.

"அக்கா!" என்ற முனங்களோடு...அவளின் ஆவி பிரிகின்றது.

அகிலாவின் இரத்தம் தோய்ந்த துப்பாக்கியை எடுத்து என் தோளிலே ஏற்றிவிட்டு... தொடர்ந்து அரக்கரைத் துரத்துகிறேன். ★



தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/

# கரும்புலிகள் கோரிக்கை நிறைவேறும்

ஆடித் திங்கள்
ஐந்தாம் நாள் – எம்
நாடி நரம்புகளில்
ஓடித்திரியும்
இரத்த அணுக்களெல்லாம்
வேகம் கூட்டி
விரைகின்ற நாள்.

பல நூற்றாண்டிற்கு முந்தைய
புறநானூற்று வீரத்தை
நூல் வழி
படித்தே அறிகிறோம் – எம்
உற்ற உடன்பிறப்புகள்
பெற்றுக் குவிக்கும்
வெற்றிக் கனிகளை
விழிமுன்னர்
வாழ்நாளில் காண்கிறோம்.

'பஃறுளி ஆறும்
பன்மலை அடுக்கதும்
குமரிக்கோடும்
கொடுங்கடல் கொள்ள'
பிரிந்ததால் நாடு
பிற நாடா?
'மறை நாடு
மறவர் நாடு
மாசற்ற தமிழோதி
காசினிக்கே ஓர் – அறிவுக்
கருவூலமாகிய நாடு'
என நிரூபித்த
அந்நாட்டில்....



அரைத்த அம்மியில்
அமரவந்த சிங்களவரின்
துரைத்தனத்தால் நம்மை
துரத்திட இயலுமோ?
என...
உரைக்க – எதிரிகளை
உணரவைக்க
பிரபாகரனெனும்
பேராளன் தலைமையின் கீழ்
சீராளன் மில்லர் முதல்
சீறிப் பாய்ந்து தயக்கமின்றி
செயற்பரிய செயல்முடித்த

செம்மல்களை
மறக்க இயலுமோ?
எம் பத்தரை மாற்றுத்
தங்கங்களே!
புத்தர் போதித்தார்
அன்பை
இந்த எத்தர்கள்
வளர்ப்பதோ
வம்பை.
இத்தரை மீது
எமக்குள் உரிமை
எதுவை என்று
இயம்பிடவோ முயன்று
ஏந்தினீர் ஆயுதத்தை?

எம் சிந்தை உடல்
அணுவெல்லாம் சிலிர்க்க
விந்தை புரிந்த
அருந்தமிழ்க் கரும்புலிகளே!
எப்படிப் பெற்றீரோ
இந்த இதயத்துணிவை?
செப்படி வித்தையோ
எனப் பகைவரை
சோதிக்க வைத்துவிட்டீர்.
அந்த ஆருடக்காரர்களை
அலர வைக்கும்
அற்புதம் எங்கு கற்றீர்?
நீங்கள் ஊதியதும் அவர்கள்
பறக்கிறார்கள் எனும்போது
எங்களுக்கும் சந்தேகம்
இருக்கத்தான் செய்கிறது.



தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/

நெருப்பாற்றில்
நீந்தக் கற்றோரே!
நித்திய கண்டம்
பூரண ஆயுசெனும்
யுத்தக் களத்தை
இதம்தரு சோலையென
ஏற்கத் துணிந்த
எஃகு இதயங்களே!....
என் இளவல்களே!
ஏற்ற பொறுப்பை
போற்றத்தகும் விதம் நிகழ்த்தி
தாயக மீட்பிற்காய்
தன்னுயிர் நீத்தீர்!....

உங்களின் தன்னலமில்
தன்மை அறிந்தே
தெளிவோடு வழிதொடர
ஆயிரமாயிரம் தம்பிமார்
அணிவகுத்து நிற்கிறார்கள்.

இதோ!...
உங்களின் கல்லறைகளுக்கு
மரியாதை செலுத்துவதென்பது
இனி கொண்டுவரவுள்ள
'சுதந்திரம் எனும்
பூந்தாரால்தான்'
எனும் கருத்தில்
ஊறித் திளைத்த
தினவெடுத்த தோள்களுடன்
பகைவிரட்ட
புறப்பட்டுவிட்டார்கள்.

'செய் அல்லது
செத்துமடி' என்பதை
பழையதென மாற்றி
சாதலின் மூலமே
சாதனை படைத்த
வீரத்தின் விளைநிலங்களே!
சுதந்திர ஈழம்
வெகு தூரத்திலில்லை
என்பதற்கோ....
கோரப்புயலை
குளிர் தென்றலாய்க்
கருதினீர்கள்?

கழனிச் சேற்றில்
நெற்பயிர்கள்
விளையவைக்கும்
காலம் போய்...
குருதிச் சேற்றில்
தத்தம் உயிர்களை
பணயம் வைத்து
ஒப்புரவாற்றிய
ஒப்பிலா மனிதர்களே!

கருமணியின் பாவையாய்
எம் விழிகளுக்குள் நீங்கள்
பரிணமித்து விட்டீர்கள்

'தமிழீழ தாயகம்!'
'தமிழீழ தாயகம்!' – என
உச்சரித்து உச்சரித்து
உயிர்ப்பூவை பரவவிட்டீர்!

இஃதும்....
பகைவர்களுக்கு விடுத்த
எச்சரிக்கைகள்தான்
எனும் விதத்தே.....
சுதந்திர ஈழம்காண
பயணமித்த உங்களின்
சுந்தர பாதங்களுக்கு
எம் பாசமிகு
முத்தங்கள்....
இஃதை....
"எரிமலைகளாய்" – எதுவரினும்
எளிதாய்த்தகர்த்த
ஏந்தல்களே!
உங்களின் கோரிக்கைகள்
நிறைவேறும் எனும்
நம்பிக்கையில்
காணிக்கையாய் ஏற்பீர்!

திருமாவளவன்
தமிழ்நாடு



https://tamileelamarchive.com/



# இந்த நூற்றாண்டின் நெருப்பேந்திய மக்கள்

வாழ்வு மறுக்கப்பட்ட போது
மக்கள் நெருப்பைச் சுமந்தார்கள்.
தீ கக்கும் கண்களோடு
குழந்தைகள் பிறந்தனர்.

ஒடுங்கிப் போகின்ற மக்களின்
உணர்வு நெருப்பே!

வீரம் தொனிக்க
தீயை மூட்டி
இளைஞர்கள் வீர தாண்டவம்
ஆடினார்கள்

கிராமத்தின் கடலோரக் காற்றாக
இருந்த மக்கள் நெருப்பு மனிதர்கள்
ஆகிவிட்டார்கள் - இந்த
நெருப்பை அணைக்க
கடல் தாண்டியும் வந்தார்கள்
மக்கள் நெருப்பாய்
நின்றெதிர்த்தார்கள்
ஒடுங்கிய மக்களின்
விடுதலைத் தீ
ஓமகுண்டத்து நெருப்பாய் ஓங்கியது.

வாழ்வுக்கான போர்த் தீ
அணைந்து விடுமாயின்
வாழ்க்கை?
அப்போது இன்னும் வேகமாய்
எங்கள் நிலத்தில் மூண்டது தீ

தீ நிறைந்த தேச வயல்களில் திரியும்
நெருப்புப் பறவைகளின்
சிறக்கை நிழலில்
தீ அணையாது.



தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/





தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/

# வண்ணத்துப்பூச்சி பறக்குது பார்



சங்கரலிங்கம் அச் செய்தியைக் கேட்டதும் ஒரு நிமிடம் இடிந்துதான் போனார். இத்தனைக்கும் அந்த முடிவும், அது சம்பந்தமான செய்தியும் அவர் முற்றிலும் எதிர்பார்த்திராத ஒன்றல்லத்தான். விடுதலைப் போரில் இன்றுவரை தமது உயிரை அர்ப்பணித்துள்ள வீரக் குழந்தைகள் ஒன்றா இரண்டா!

இருந்தாலும் வீரகத்தியின் மகன் நேசன் மாவீரனாகிவிட்டான் என்ற செய்தி சங்கரலிங்கத்தின் மனதை உலுக்கவே செய்தது. பதினான்கு வயதில் இயக்கத்தில் சேரும்வரை அவருடைய குடும்பத்தில் ஒரு பிள்ளைபோற் பழகிவந்த சிறுவன் அவன். தந்தை வீரகத்தியைப் போலவே கரிய மேனியும், நெடிய உடல்வாகும் கொண்டவன். அதன்பின் நான்கு நீண்ட வருடங்களுக்குப் பின்னர், நாலைந்து மாதங்களுக்கு முன்னர்தான், பயிற்சியும் அனுபவமும் பெற்ற ஒரு பொறுப்பு வாய்ந்த போராளியாக அவனை ஒரு தடவை கண்டது அவருடைய நெஞ்சில் ஆழமாய்ப் பதிந்திருந்தது. இப்போதும் அந்த இறுதிச் சந்திப்பும், அவனுடைய கம்பீரமான அமைதியும் சங்கரலிங்கத்தின் நினைவுக்கு வந்தன! போராளியின் சீருடையில், ஆறடி உயரத்தில், முகத்தில் ஒரு பிரகாசமும், ஒளியைச் சிந்தும் விழிகளும், தளும்பாத ஒரு நிதானமும் கொண்டவனாய் அவனைக் கண்டபோது சங்கரலிங்கம் வா என்று சொல்லமுடியாத அளவுக்கு மலைத்துத்தான் போயிருந்தார்.

அந்த மாவீரனுடைய இறுதி அஞ்சலியில்தான் பங்குபற்ற முடியாமற் போய்விட்டதே என்பதை நினைத்து நினைத்து மனம் கசிந்தார் சங்கரலிங்கம். ஏழெட்டு ஆண்டுகளின் பின்னர், வெளிநாட்டில் வாழ்கின்ற தன் மகளையும், மகனையும், அவர்களது குடும்பங்களையும் பார்ப்பதற்காக டென்மார்க் சென்று இரண்டு மாதங்களின் பின்னர் மறுபடியும் தன் சொந்த ஊரான ஒட்டுசுட்டானுக்கு திரும்பிய சங்கரலிங்கத்துக்கு ஊரின் எல்லையிலேயே கிடைத்த முதற் செய்தி வீரகத்தியின் மகன் நேசன் மரணமாகிவிட்டான் என்பதுதான்.

அ. பாலமனோகரன்

செய்தியைத் தெரிவித்த மணியம் அவருடைய வெளிநாட்டுப் பயணத்தையிட்டு விசாரித்தான். "பிள்ளையள், பேரப்பிள்ளையள் எல்லாரும் எப்படி இருக்கினம்?.... ஏன் இதுக்கிடேலை அவசரப்பட்டு வந்தனீங்கள்!.... இஞ்சை உங்கடை வீட்டை மொட்டு மொட்டெண்டு தனிய இருந்து காலத்தைக் கழிக்கிறதை விட அங்க அதுகளோடேயே நிண்டிருக்கலாமே!..." என மணியம் வாய் ஓயாது விசாரித்ததற்கு ஏதோ வாயில் ஒரு பதிலைக் கூறிவிட்டு வீரகத்தியின் வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தார் சங்கரலிங்கம்.

அவரால் தன்னையும் வீரகத்தியையும், தனது பிள்ளைகளையும் வீரகத்தியின் பிள்ளைகளையும் ஒப்பிட்டுப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. வீரகத்திக்கும் சங்கரலிங்கத்தைப் போன்று ஒரு மகனும், ஒரு மகளுந்தான். ஆனால் வீரகத்தி தனது நாற்பதாவது வயதுக்குப் பின்னரே மணம் முடித்ததனால் அவருடைய பிள்ளைகள் சங்கரலிங்கத்தினுடைய பிள்ளைகளை விட இளமையாக இருந்தனர். ஐம்பது வயதிலேயே தாத்தாவாகிவிட்ட சங்கரலிங்கம் கூட வீரகத்தியை விடப் பத்து வயது குறைந்தவர்தான். சங்கரலிங்கம் பிள்ளைகள் இருவரையும் ஏஜென்சிக்காரருக்குப் பெருமளவு பணத்தைக் கொடுத்து டென்மார்க்குக்கு அனுப்பிவைத்த பின் அவருடைய வீடே வெறிச்சென்று ஆகிப்போயிற்று. அவருடைய மனைவிக்கும், அவருக்கும், தம் பிள்ளைகளை இந்த முதிர் வயதில் பிரிய நேரிட்ட துயரைப் பெருமளவு போக்கியவள் வீரகத்தியின் மகள் கலாதான். அண்ணன் நேசனைவிட நான்கு வயது குறைந்த அவளுடைய சுறுசுறுப்புக்கும் செய்காரியத் திறனுக்கும் அவளைத்தான் உவமையாகச் சொல்லமுடியும்! சங்கரலிங்கத்தின் வளவுக்குப் பக்கத்திலிருந்த சிறிய வயலும், தோட்டமும் வீரகத்தியினுடையதுதான். சுமார் 200 மீற்றர் இடைவெளிக்கு அப்பாலிருந்த தங்கள் குடிசைக்கும் சங்கரலிங்கத்தின் வீட்டுக்கும் இடையே உள்ள தூரத்தை, கலா நடந்து கடந்ததை சங்கரலிங்கம் என்றுமே கண்டதில்லை! பறந்து வந்தாள் என்று சொல்வதே பொருத்தமாக இருக்கும்!

..... நேசனுடைய மறைவு வீரகத்திக்கும் அவர் மனைவிக்கும் என்றுமே ஆறாதவொரு சோகமாகவே இருக்கும்... ஆனால் அந்த ஆறாக் காயத்துக்கும் அது தரும் வேதனைக்கும் கலா ஒரு அருமருந்தல்லவா!.... அவர்களுக்கு மட்டுமா?.... கலா அடிக்கடி வந்து போவதால் அல்லவா எனது வீடும் ஓரளவு ஒளியைப் பெறுகின்றது!...

இரண்டு வருடங்களுக்கு முன்னர் அவருடைய மனைவியின் நோய்க்கு புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் மருந்தில்லாமல் போய்,



தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/

அதன் காரணமாக அவள் அநியாயமாக இறந்ததின் பின்னர், அவர் தனது வீட்டில் தனித்துத்தான் வசித்து வருகின்றார். கலாவுக்கும் நேசனுக்கும், வீரகத்தி தம்பதிகளுக்குமென அவர் வெளிநாட்டிலிருந்து கொண்டுவரும் பொருட்கள் உள்ள அவருடைய பயணப்பை, வீரகத்தியின் வீடு நெருங்க நெருங்க அதிகமாகக் கனப்பது போன்று சங்கரலிங்கம் உணர்ந்தார். கையிலுள்ள பை மட்டுமா?.... கால்கள் கூடக் கல்லுக்கட்டி விட்டது போன்று எடுத்து அடிவைக்க முடியாமற் கனத்தன.

.... எப்படித்தான் அந்தத் தாய்தந்தையை, ஆசைத்தங்கையை, முகங்கொண்டு எதிர்கொள்ளப் போகின்றேன்? பணம் படைத்த ஒரே காரணத்தால் தனது பிள்ளைகள் இரண்டையும் வெளிநாட்டுக்கு அனுப்பிவைத்துவிட்டு, இப்போ அங்கே சென்று அவர்களையும் பேரக்குழந்தைகளையும் ஆசைதீரப் பார்த்துவிட்டு வரும் இவனுக்கு எங்கே புரியப் போகின்றது எமது இழப்பும் வேதனையும் என்று எண்ணுவார்களோ அவர்கள்?.... சேச்சே!... வீரகத்தியும் அவர் மனைவி ராசமும் அப்படி நினைக்கக்கூடியவர்களல்லவே!.... பரம்பரை பரம்பரையாக மண்ணை மட்டும் நம்பி வாழும் அந்த எளிமையான உள்ளங்களுக்கு, படித்த எம்மைப்போல வினைசுனையாகச் சிந்திக்கத் தெரியாதல்லவா!....

சங்கரலிங்கம் சம்மளங்குளம் பாதையினால் இறங்கி, குறுக்கு வழியாக நடந்தார். மரங்களின் தலைகளுக்கு மேலாக ஒட்டுசுட்டான் சிவன்கோவிற் கோபுரம் தெரிந்தது. ..... தான் தோன்றி ஈஸ்ரவா!... என வாய்விட்டு ஒரு முறை சொல்லிக்கொண்டு ஒழுங்கை வழியாகச் சென்ற சங்கரலிங்கம் தனது வீட்டைத் தாண்டியே வீரகத்தியின் இருப்பிடத்துக்குச் செல்லவேண்டி இருந்தது. தனது வீட்டுத் திறப்பையும், வாசற்கதவுத் திறப்பையும் கலாவிடந்தான் கொடுத்து, இடைசுகம் ஒரு கண் பார்த்துக்கொள் அம்மா! என்று சொல்லிவிட்டுத்தான் டென்மார்க் சென்றிருந்தார் சங்கரலிங்கம்.

வீட்டு வாசற்கதவை அண்மித்த போது அங்கு ஒரு சில நிமிடங்கள் தரித்து வீட்டையும், வளவையும் பார்த்தார் சங்கரலிங்கம். சுற்று மதிலுக்கும் மேலாக எட்டிப்பார்த்த செவ்வரத்தை, நந்தியாவட்டை மற்றும் பூமரங்களில் ஏராளம் பூக்கள் புத்தம் புதிதாக மலர்ந்திருந்தன. கலா அவற்றிற்குத் தவறாமல் கிணற்றிலிருந்து நீரிறைத்துப் பாய்ச்சியிருப்பதை அவரால் அனுமானிக்க முடிந்தது. மதிலோரப் பூஞ்செடிகளையே வாடவிடாமல் நீர் வார்த்தவள் வீட்டையும் நிச்சயம் நன்றாகத்தான் கவனித்திருப்பாள்.... அருமையான பிள்ளை!.... என்று எண்ணிய சங்கரலிங்கத்தின் கவனத்தை அந்தப் புத்தம்புது மலர்களில் மாற்றி மாற்றித் தேன் குடித்துக்கொண்டிருந்த இரு வண்ணத்துப் பூச்சிகள் கவர்ந்தன.

தற்போதிருந்த தளர்ந்த மனநிலையிற்கூட சங்கரலிங்கத்தின் கவனத்தைத் தம்பால் ஈர்க்கக்கூடிய அளவுக்கு அந்த வண்ணத்துப்பூச்சிகள் ஒளிசிந்தும் நிறம் படைத்தவையாக இருந்தன. பொன் மஞ்சளும் கடுஞ்சிவப்பும் கறுப்பும் வெள்ளையுமான நிறங்கள் கொண்ட அவை, மலர்களில் தேங்கிக் கிடக்கும் மதுவை உண்டு களித்த போதையில் ஒன்றையொன்று தொட்டும் தொடாமலும், பட்டும்படாமலும், படபடத்துப் பறந்தவாறே தேனருந்திக்கொண்டிருந்தன.

'.... வண்ணத்துப்பூச்சி! வண்ணத்துப் பூச்சி!.... பறக்குது பார்!.... பறக்குது பார்!....' என மழலைக் குரலொன்று அவருக்குள் இப்போது ஒலித்தது. அவருடைய மகள் வயிற்றுப் பேத்தி ரமணியின் அழகிய முகம் கண்ணுக்குள் தெரிந்தது. அந்தப் பாடலின் அந்த முதல்வரி மட்டுமே ரமணிக்குத் தெரியும். அவளுடைய இரண்டாவது பிறந்ததின விழாக்கூட அவர் டென்மார்க்கில் தங்கியிருந்தபோதுதான் நடைபெற்றது. வெகு விமரிசையாகவும் ஓரளவு தேவைக்கதிகமான ஆடம்பரத்துடனும் நடைபெற்ற அந்த விழாவிற்கு வந்திருந்த சில டென்மார்க் வாழ் தமிழ்ப் பெண்களையும், ஆண்களையும், அவர்கள் அணிந்திருந்த பலவண்ண

## கொடை

'டிறக்' வண்டிகள் பின்னால்வர 'இந்தியப்படை' ஆட்கள் துப்பாக்கிகளோடு உலாவுகிறார்கள்.

எங்கும் பதட்டம். கொல்லப்பட்டவர்கள் பற்றிய சேதிகள் பரவிக் கொண்டிருக்கின்றன. வேட்டுக்கள்..... பிணக்குவியல்........ குருதி ஓடை....

யாழ்ப்பாணத்தில் – வளலாய்க் கிராமத்தில் இளைஞன் ஒருவன் நூல் நிலையத்தில் நண்பர்களோடு 'சீட்டு' ஆடிக் கொண்டிருக்கிறான். பொழுது போகவில்லை. சிங்களப் படைகளை மோதிய காலத்தில் களத்தில் நின்றவன் அவன். 'விடுதலைப் புலி'யாய் அவன் நடத்திய வீரப்போர்கள் பல. இயக்கத்தின் உறுதியான கட்டுப்பாட்டை என்றைக்கும் அந்த இளைஞன் மீறியதில்லை. ஆனால்...

சிறிலங்கா – இந்திய உடன்படிக்கை வந்த போது – எல்லாமே ஓயந்து விட்டது போல ஆன நேரத்தில் – தலைவர்களின் ஒப்புதல் பெற்றுக்கொண்டு அவன் ஒதுங்கி விட்டான். வீட்டில் சாப்பாடு – பெற்றவர்களோடு வாழ்க்கை – நண்பர்களின் உறவு.

தொலைவில் துப்பாக்கி வேட்டோசை முழங்கி ஓய்கிறது. எங்கோ யாரோ கதறி அழும் ஓலங்கள்...

வெறிபிடித்த இந்தியப்படை கருக்கிய தமிழர் பிணங்களின் சாம்பல் பொடிகள் விண்ணில் எழுகின்றன.

இளைஞனோ 'சீட்டு' ஆடிக்கொண்டிருக்கிறான்.

அவன் எதிர்பார்க்கவில்லை..... யாரோ 'பளீர்' என்று கன்னத்தில் ஓங்கி அறைந்தபோது மூளை குளம்பிற்று. நூல் நிலைத்துக்குள் இந்தியப்படை நுழைந்து விட்டதா?

அதிர்ச்சியோடு தலையை நிமிர்த்துகிறான்....

அவன் தந்தைதான் எதிரில் நிற்கிறார். கண்களில் நெருப்பு. 'தமிழனுகளை இந்தியப்படை கொல்லுற நேரத்தில 'சீட்டு' ஆடுறியே... நீயும் ஒரு தமிழனோடா? விடுதலைப்புலிகள் வீரமாகப் போராடுகினமாம்.... இந்தியப் படையின்ர 'டாங்கிகள்' எல்லாம் நொறுங்கிப் போட்டுதாம்... அவனுகள் அல்லோ தமிழன்கள்!'

திரும்பவும் அடிவிழ இளைஞன் திணறிப் போகிறான், 'போய் பழையபடி பிரபாகரனுட்ட துப்பாக்கியை வாங்கிட்டுக் களத்தில நில்லு. வீட்டுக்கு வந்திடாத... உனக்கு இனி வீட்டில சோறு கிடையாது.... விளங்குதே?' 'விர்' என்று அவர் வெளியேறுகிறார். வளலாய் நூல்நிலையம் பின்பு அந்த இளைஞனைச் சந்திக்கவில்லை.



தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/

## தெளிவு

துடியாய்த் துடிக்கிறார்.

இந்திய அமைதிப்படையின் 'செல்' தாக்குதலால் உடலெல்லாம் கிழிந்துபோய் ஒரு கிழட்டு உயிர் சாவோடு போராடுகிறது.

உரும்பிராயில் எல்லோருடனும் 'நல்ல மனிதராய்' வாழ்ந்திட்ட ஒருவர்.

செல்வா காலம் – சிவகுமாரன் காலம் – பிரபாகரன் காலம் மூன்றையும் தன் நீண்ட நெடிய வாழ்வில் நேரில் கண்டு – வீறுமிக்க ஒரு விடுதலைப் போரில் தன்னையும் எங்கோ சேர்த்துக்கொண்ட பெருமை.

நல்ல விடுதலை உணர்வாளர்.

அதிகம் பேசாத வாய்.

இத்தனை காலமும் சாவுக்குத் தப்பிய அந்த நல்லவர் இந்திய வெறிப்படையின் 'செல்' அடித்து இரத்த வெள்ளத்தில் கிடக்கிறார்.

கண்களில் நீர்பொங்கப் பக்கத்து வீடுகளின் சிறுவர்கள் – இளம் பெண்கள் – பெரியவர்கள் – தாய்மார்கள் – இளைஞர்கள் எல்லோரும் வளைத்து நிற்கிறார்கள்.

உற்றுப் பார்க்கிறார்.

பேசத் தோன்றுகிறது

'கடைசியாகச் சொல்லுறன்.... ஒருவரையும் நம்பாதீங்கோ. சிங்களவன் ஏசிக்கொண்டு எங்களை அழிச்சான். இந்தியா பாராட்டிக் கொண்டு அழிக்குது. தமிழர்களைத் தமிழர்கள்தான் காப்பாத்த வேணும்..... விடுதலைப் புலிகளுக்குப் பின்னால் நில்லுங்கோ...'

எல்லோரும் அழுகிறார்கள்.

உரும்பிராயில் ஒரு நல்ல உயிர் அடங்கிற்று.

அடுத்த நாள்–

இளைஞன் ஒருவன் சாவீட்டில் பக்கத்தில் நின்றவர்களைப் பார்த்துச் சொன்னான்.

'பெரியவர் எங்களை உசுப்பிவிட்டுப் போகிறார்.'

---

ஆடம்பர ஆடை அணிகலன்களையும் இந்த வண்ணத்துப்பூச்சிகள் நினைவுக்குக் கொண்டு வந்தன.

ஆனால், மனதுக்குள் தேங்கி நின்ற துயரும் துன்பமும் மறுபடியும் பொங்கியெழுந்து இந்தக் காட்சிகளையெல்லாம் அடித்துக் கொண்டு போய்விடவே, சங்கரலிங்கம் பதைக்கும் நெஞ்சுடன் வீரகத்தியின் காய்ந்துபோய்க் கிடந்த வயலுக்குள் இறங்கினார்.

காட்டோரமாக அமைந்திருந்த வீரகத்தியின் சிறிய ஓலைவீட்டினுள் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. அதையொட்டி அமைந்திருந்த அடுக்களைக் குடிசையினுள்ளும் எவருமில்லை. சற்று ஒதுக்குப்புறமாக இருந்த மாட்டுக்கொட்டிலைப் பார்த்தார் சங்கரலிங்கம். வீரகத்தியின் குடும்பத்தின் லட்சுமி என்று அவர்கள் போற்றிப் பராமரிக்கும் வெள்ளைப் பசுவையும் அதன் கன்றையுங்கூடக் காணவில்லை.

சுள்ளென்று எரிக்க ஆரம்பித்த வெய்யிலுக்கு ஒளித்து, கிணற்றடி வாழைகளுக்குள் பள்ளம் பறித்து உறங்கிக்கொண்டிருந்த வீரகத்தியின் நாய் மட்டும் திடீரென விழித்துக் கொண்டு ஓடி வந்தது. பின்னர் ஆளை இனங்கண்டு கொண்டு ஊளையிட்டும், முனகியும் தனது உணர்ச்சிகளை வெளிப்படுத்திக்கொண்டது. அந்த சோகம் விரவிய ஊளையும் முனகலும் சங்கரலிங்கத்தின் இதயத்தைக் கசக்கிப் பிழிவது போலிருந்தது.

"ஆரது?" என்ற குரல் வீட்டின் பின்புறமாக இருந்து வரவே சங்கரலிங்கம் அந்தப் பகுதியை நோக்கி நடந்தார். நாயும் அவருடன் கூடவே, அவருடைய கால்களை உரசியபடியே சென்றது.

வீரகத்தியும் மனைவி ராசமும் அங்கு குடை பரப்பி நின்ற பெரிய முதிரை மரத்தின் கீழ் ஒரு சிறிய குடிசை அமைப்பதற்கான வேலையில் ஈடுபட்டிருந்தனர். சங்கரலிங்கத்தைக் கண்டதும் ராசம் கோவென்று கதறிவிட்டாள். குலுங்கிக் குலுங்கி, விம்மி வெடித்த

அவளைத் தேற்றுவதற்கு வார்த்தைகள் எதுவும் வராத நிலையில் வாயடைத்துப்போன சங்கரலிங்கத்தின் விழிகளிலிருந்து கண்ணீர் தாரையாக வடிந்தது. அவர் அவர்களுக்காகவும், நேசனுக்காகவும் மட்டுமே அழவில்லை. மறைந்துபோய்விட்ட மனைவி, இருந்தும் இல்லாமற் போய்விட்ட பிள்ளைகள் இவர்களுக்காகவும் சேர்த்தே அழுதுகொண்டார்.

கையில் மண்வெட்டியுடன் நின்ற வீரகத்தி அழவில்லை. ஆனால், அவருடைய முகமோ வேதனையில் இறுகிப் போய் கண்களிரண்டும் இரு சிறு கோடுகள் போன்று தெரிந்தன. மண்வெட்டியைப் பற்றியிருந்த அவருடைய வலிமையான கரங்களின் பிடி ஒரு கணம் இறுகியது. பின்னர் அந்த நெடிய விரல்கள் மெல்லத் தளர்ந்து தமது பழைய நிலைக்குத் திரும்பின.

சங்கரலிங்கம் எதுவும் பேசாது அங்கு புதிதாகப் போடப்படும் குடிசைக்காகக் கொண்டு வந்து போடப்பட்ட காட்டுத்தடிக் கட்டின் மேல் அமர்ந்துகொண்டார். வீரகத்தி, விட்ட வேலையைத் தொடர்ந்தபடி தனக்குத் தானே பேசிக்கொள்வது போல, நடந்து முடிந்தவை பற்றியும் தனது முரட்டுக்குரலில் கூறிக்கொண்டிருந்தார்.

மகன் நேசனுடைய கதையை மிகவும் சுருக்கமாக முடித்துக்கொண்டு, அது சம்பந்தமான எண்ணத்தையே மறக்கடிக்க முயற்சிப்பது போன்று இப் புதிய குடிசையை அமைப்பதற்கான காரணத்தை சற்று விஸ்தாரமாகவே சொல்லிக்கொண்டிருந்தார். யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்த ஒரு சிறிய குடும்பத்துக்குத்தான் அந்தக் குடில். அவர்கள் இங்கு வந்து ஏழெட்டு நாட்களாகிவிட்டது. இப்போது அவர்கள், தமது நோய்வாய்ப்பட்ட கைக்குழந்தையை புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ளனர்...... இளங்குடும்பம்!.... அதுகளுக்கும் தங்களுக்கெண்டு ஒரு தங்குமிடம் வேணுந்தானே!... என்று சொல்லிக்கொண்டே மண்வெட்டியை ஓங்கிக் கொத்தினார் வீரகத்தி. மண்வெட்டி





தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/

பாய்ந்த இடத்திலிருந்து பாளமாகப் பெயர்ந்து விழுந்த அந்தக் கருகருவென்ற மண்ணில் இரு துண்டுகளாக வெட்டுப்பட்டுக் காணப்பட்டது ஒரு பெரிய மண்புழு. இளஞ்சிவப்பு நிறமாக இருந்த அந்த துண்டுகள் இரண்டுமே துடித்தபடி வெவ்வேறு திசையில் நுழுந்தியவாறு மறுபடியும் மண்ணினுள் நுழைய முயல்வதை அவதானித்தார் சங்கரலிங்கம். ..... இவற்றில் வால் எது? தலை எது?.... அவருக்குத் தெரியவில்லை. ஆனால் அவை இரண்டுமே வாழ்வதற்காகாகத் துடித்துப் போராடுவது தெரிந்தது. அவையிரண்டும் நிச்சயமாக வாழத்தான் போகின்றன என்பதும் அவருக்குப் புரிந்தது. அவர் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே அவையிரண்டும் மண்ணுக்குள் மறைந்துகொண்டன.

சங்கரலிங்கம் கையிற் கொண்டுவந்த பயணப்பையை மடியில் எடுத்து வைத்தவாறே "கலா எப்பிடி இருக்கிறாள்?.... பள்ளிக்கூடம் போட்டாளே?" எனக் கேட்டபோது மறுபடியும் பொங்கி வெடித்து அழ ஆரம்பித்தாள் வீரகத்தியின் மனைவி. சங்கரலிங்கத்தாருக்குத் திக்கென்றிருந்தது. வீரகத்தியையும் ராசத்தையும் பார்த்து மலங்க மலங்க விழித்தார்.

"அழுதுதழுது என்னத்தைக் கண்டனீ?.... கலா என்ன செத்தே போட்டாள்! தமையன் துடங்கின காரியத்தை தங்கச்சிக்காரி முடிக்கப் போட்டாள்!.... சும்மா அழுறதை விட்டிட்டு அந்தக் கிடுகுக் கட்டைப் பிரிச்சுப்போடு பார்ப்போம்!" என அதட்டினார் வீரகத்தி. அவருடைய குரலில் தொனித்த கடுமையும் சினமும் அவருடைய உதட்டில் மட்டும் பிறந்தவைதான்.... உள்ளத்திலிருந்து வந்தவையல்ல என்பதைச் சங்கரலிங்கத்தினால் இலகுவாக உணரமுடிந்தது. பாசமும் அன்னியோன்னியமும் மிக்க அந்தக் கிராமத்துத் தம்பதிகளை அவர் வெகுகாலமாகவே அறிவார்.

.... கலாவும் இப்போது ஒரு போராளியா? அண்ணன் ஆரம்பித்து வைத்ததைத் தங்கை முடித்து வைப்பாள் என்று எவ்வளவு உறுதியாக வீரகத்தியானால் உரைக்க முடிகின்

# தணியுமா எந்தன் தாகம்?

அழகு, அற்புதம், அமைதி இத்தனையும் கொலுவிருக்க அவள் முத்துப்பற்கள் தெரிய புன்னகைப்பாள்.

பூப்போன்ற முகம் வெண்ணிலாவை பொறாமை கொள்ள வைக்கும். நடையில் மென்மையும், உடையில் தூய்மையும், நெஞ்சில் பயமும் நிரம்பிய அவள், சிலந்தியைக் கண்டே சிலுசிலுத்து நடுங்குவாள்.

அவள் பாடசாலையில் படித்துக்கொண்டிருந்துவிட்டு வீடு திரும்பி வந்து கொண்டிருந்த போது அவளின் வாழ்விடம் இரத்தத்தில் குளித்துக் கிடந்தது. பத்து வயதுப் பாலகன்கள் உட்பட பலர் சிங்கள இராணுவத்தின் வெறியாட்டத்தில் அகப்பட்டு செத்து மடிந்தார்கள்.

எங்கும் ஒரே அவலக் குரல்கள். அழகிய கிராமம் தன் ஆத்மாவை இழந்துகிடந்தது.

உயிர் தப்பியவர்கள் ஆலயங்களுக்குள் ஓடிச்சரணடைந்தார்கள். எல்லோரும் கையில் அகப்பட்டவற்றுடன் தலைதெறிக்க ஓடினார்கள்.

ஆனால் அவள் மட்டும் ஓடவில்லை. சரணடையவில்லை. சில கணங்கள் விறைத்துப் போய் நின்றாள்.

பூ மலர்ந்தது போன்று பொலிவுறுகின்ற வீட்டு முற்றத்தில் ஒதுங்கிச் செல்கின்றது. ஊமைக்காற்று. பெற்றவர்களை, உற்றவர்களை, பிரிந்திட துணிந்தபோது அவள் மீதான என் கற்பனைகளும் சரிந்தன.

பசுமையான அவள் பாறாங்கல்லாய் இறுகினாள். அமைதி நிறைந்த கண்களில் நெருப்புக் கோளங்கள் ஒளியூட்டின.

இனி அவள் யார் சொல்லையும் கேட்க மாட்டாள். வேகம் பூட்டி புயலாய் நடந்து போனாள். அப்படி அவள் அந்த நெருப்பெரிந்த கிராமத்திலிருந்து போன பிறகு எப்போதாவ்து தான் தென்றலாய் சிலவேளை வந்து போனாள்.



அவ்வாறு அவளைக் கண்டபோது தான் என் பிறவியின் பலனை அடைந்தேன்.

இன்று அவள் முல்லை மண் மீட்கப் புறப்பட்டாள் என்றும் அந்தப் போரில் அவள் வீரமுடுத்தி வேங்கையாய் நின்று சமரிட்டாள் என்றும் அறிந்தேன்.

முல்லை மண் வெடியதிர்வுகளால் சிலிர்த்து நிற்க காற்று மேவித் திரியும் திசையெங்கும் விடுதலை முழக்கம் ஒலித்தது.

ஆக்கிரமிப்பாளனுடனான சமரில் அவள் வீரச்சாவடைந்து விட்டாள் எனும் செய்தி என் காதுகளில் எட்டியது. அந்த தூய மனித ஆத்மாக்களை என்னுள் குடியிருத்திக் கொண்டேன். அவள் வீராங்கனையல்லவா? அவள் என்னையும் ஒரு எரிமலையாய் ஆக்கிவிட்டாள். என்னுடலில் அவள் உயிரும் என் உயிரும் இரண்டறக் கலந்துவிட்டன.

–திருமதி அம்பிகா இராஜலிங்கம்



தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/

# இலட்சிய வீரர்கள் இறப்பதில்லை

உலக விடுதலைப் போராட்ட வரலாற்றில் நாம் எத்தனையோ அர்ப்பணிப்புக்கள் தியாகங்களைப்பற்றி படித்திருக்கின்றோம். கேள்விப்பட்டிருக்கின்றோம். ஆனால் தமிழினத்தின் போராட்ட வரலாற்றில் எமது இளைஞர்களின் தியாகங்களும், அர்ப்பணிப்புக்களும் வார்த்தைகளாலும், எழுத்துக்களாலும் அளந்துவிடமுடியாதவை.

இந்த மாவீரர்களின் தியாக உணர்வும், தன்னலமற்ற இலட்சிய உறுதியும், ஒப்பற்ற அர்ப்பணிப்புக்களும் தமிழினத்தை உலக அரங்கிலே தலைநிமிரச் செய்திருக்கின்றதென்பதை நாம் எல்லோரும் அறிவோம். உலகின் ஒடுக்கப்படும் மக்களின் ஒரு பகுதியாக, தமிழினமும் விடுதலைவேண்டிப் போராடுகின்றதென்பதை இந்த மாவீரர்களினது மெய்சிலிர்க்க வைக்கும் களச் சாதனைகள் உலகிற்கு உணரச் செய்து வியப்பில் ஆழ்த்தியுள்ளன.

இந்த வீரர்கள் வாழப்பிறந்தவர்கள், இவர்கள் தாய் தந்தை, அண்ணன், அக்கா, தங்கை, தம்பி என்ற குடும்பப் பாசப் பிணைப்பில் இணைந்தவர்கள். ஆனாலும் தனது குடும்பம், உறவு, தனது தனிப்பட்ட வாழ்க்கை என்பவை பற்றிச் சிந்திக்கமுடியாதளவிற்கு தமிழினத்தின் செயற்பாட்டையும் கடமையையும் உணர்த்தியது. இதனால் இன்று இவர்கள் உலகம் போற்றும் மாவீரர்களானார்கள்.

தமிழன் தனது சொந்த மண்ணிலேயே சுதந்திரமாக நடமாடமுடியாது, வாழமுடியாது, நாளும் துன்பத்தையும் அழிவையும், இழப்புக்களையும் சந்திக்கின்ற ஓர் அவலநிலையைக்கண்டு இந்த இளைஞர்கள் மனம் நெகிழ்ந்தவர்கள். மனித வாழ்விற்கு அர்த்தம் வேண்டும் என்பதற்காக சுதந்திரம் வேண்டி தங்களை அழிக்கத் துணிந்தவர்கள். தங்களது சுதந்திரத் தாகத்தோடு சாவையும் அணைத்து இவர்கள் கடந்து சென்ற பாதைகளோ மிகவும் கொடூரமானவை. அவை விபரிக்கமுடியாதவை. ஆனாலும் இவர்கள் காலத்தால் சாகா வரம் பெற்றவர்கள்.

சிறிலங்கா அரசானது சமாதானம் என்ற பாதையிலிருந்து மாறி தமிழினத்தின் நீண்டகால உரிமைப் போராட்டத்தை ஓர் பயங்கரவாதப் பிரச்சினையாக உலகிற்கு காட்ட நினைக்கின்றது. இதிலிருந்து நாம் ஒன்றைப் புரிந்துகொள்ளவேண்டும். சிறீலங்கா அரசுகள் எதுவானாலும் தமிழினத்தின் உரிமைப்போராட்டத்திற்கு தீர்வுகாணப் போவதில்லை. மாறாக பொருளாதாரத்தடைகளாலும், இராணுவ நடவடிக்கைகளாலும் விமானக்குண்டு வீச்சுக்களாலும் தமிழினத்தின் உரிமைப்போரைச் சிதைத்துவிடலாம் என்பதிலேயே நம்பிக்கை கொண்டுள்ளது.

சிங்கள ஆளும் வர்க்கத்தின் இந்தத் தொடர்போக்கானது தமிழினத்திற்கு ஒன்றையே மீண்டும் வலியுறுத்துகிறது. அதாவது தமிழினம் தனது சுதந்திரத்தைப் போராடித்தான் பெற வேண்டும் என்பதையே.



இந்த வகையிலே எமது வீரர்கள் நாளும் இரத்தம் சிந்தி, ஒப்பற்ற தியாகங்களைப் புரிந்து எமது இனத்திற்காக தங்களை அர்ப்பணித்துச் சென்றுள்ளனர். நாளைய சந்ததி சுதந்திரமாக வாழ்வதற்காக இந்த மாவீரர்கள் வழியே நாமும் செல்வோம். ★

றது!.... சங்கரலிங்கம் மடியில் தூக்கி வைத்த பிரயாணப் பையைத் திறக்க எண்ணமின்றியே உட்கார்ந்திருந்தார். அவரது விழிகள், மண்வெட்டியில் அகப்பட்டு இரண்டு துண்டுகளாகிப் போன அந்த மண்புழுவைத் தேடின.

இரவும் பகலும் ஓசையின்றி, ஓய்வின்றித் தாம் பிறந்த மண்ணை மேலும் மேலும் வளமாக்க உழைக்கும் அந்த மண்புழுவின் துண்டிக்கப்பட்ட இரு பகுதிகளையும் அவர் தரை மீது காணவில்லை.

வீரகத்தி தம்பதியினருடன் ஒரு மணி நேரத்துக்கும் அதிகமாகக் கூடவே இருந்து, அவர்கள் தந்த தேனீரையும் அருந்திவிட்டு, தனது வீட்டுத் திறப்புக்களையும் பெற்றுக்கொண்டு மிகவும் சோர்ந்த மனதுடன் தனது வீட்டை நோக்கி, காய்ந்து கரடுதட்டிப் போய்க் கிடந்த வயலின் ஊடாக நடந்தார் சங்கரலிங்கம்.

.... முன்பெல்லாம் எப்படியிருந்த பூமி! கதலி வாழையும் கமுகம்பூச் சம்பாவும், கத்தரியும் வெண்டையுமாகக் காய்த்துக் குலுங்கிய மண்ணல்லவா! அப்போதெல்லாம், ஈரங்கசியும் இந்த நடைவரம்பில் நடந்தாலே பசியும், களைப்பும் பறந்துபோகுமே!.... எரிபொருட்தடை காரணமாக ஆழ உழவில்லை.... செழிக்கச் செழிக்க இறைப்பில்லை.... நம்பியிருக்கும் வானமும் இப்போ சில வருடங்களாக தேவையான நேரத்தில் பொய்ப்பதும், தேவையற்ற சமயத்தில் பொழிவதுமாக, காலக்கிரமம் தவறி ஏமாற்றினால்?.... சங்கரலிங்கத்தின் விழிகள் சிவன் கோவில் கோபுரத்தைத் தேடின.

தனது வளவை அடைந்து, வாசற் கதவைத் திறந்துகொண்டு உள்ளே பிரவேசித்தபோது, அங்கே தரையிலே கிடந்த இரண்டு வண்ணத் துப்பூச்சிகள் அவருடைய கவனத்தை ஈர்த்தன.

.... அட!... நான் வீரகத்தி வீட்டிற்குப் போகுமுன் கண்ட வண்ணத்துப்பூச்சிகளா இவைகள்?... சில மணிநேரங்களுக்கு முன்னர், தேன் மாந்தி, மதுமயக்கத்தில் உல்லாசமாகச் சிறகடித்த இவையிரண்டும் ஏன் இப்போ தரையிற் கிடக்கின்றன?... பயணப்பையை



தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/

நிலத்திலே வைத்துவிட்டு அவர் குத்துக் காலிட்டு அமர்ந்து அந்த வண்ணத்துப்பூச்சிகளைக் கவனத்துடனும், அனுதாபத்துடனும் பார்த்தார். ஆனால் அவர் அங்கே கண்டது வண்ணத்துப்பூச்சிகளின் பிரகாசமான நிறங் கொண்ட பட்டுப்போன்ற மிருதுவான செட்டைகளைத்தான். அந்த வண்ணத்துப்பூச்சிகளின் உடல்களைக் காணவில்லையே! என்ன நடந்திருக்கும்?... ஏதாவது ஓணான் கிணான் பிடித்துச் சாப்பிட்டிருக்குமோ? இறந்துபோன உடல்களை எறும்புகள் இழுத்துச் சென்றிருக்குமோ?... அப்படியானால் இந்த அழகான செட்டைகள் மட்டும் எதற்காக இங்கே கிடக்கின்றன?... ஓணானுக்கோ. எறும்புகளுக்கோ இந்தக் கவர்ச்சிச் செட்டைகளினால் எவ்வித பயனுமில்லைப் போலும்!....

சங்கரலிங்கம் அந்த மிருதுவான பட்டுச் செட்டைகளை தனது கையிலே எடுத்தார். அவற்றின்மேல் காணப்பட்ட அந்தப் பிரகாசமான பொன்மஞ்சள், சிவப்பு நிறங்கள் அவருடைய கையிற் பட்டதும் ஒட்டிக்கொண்டு வந்தன. எவ்வளவு சீக்கிரம், எவ்வளவு மிக இலகுவாக இந்தக் கண்கவர் நிறங்கள் கழன்று விட்டன! என அவர் வியந்துகொண்டிருந்த போது அவருக்குள், அவருடைய மனதுக்குள் மறுபடியும் அவரது பேத்தி ரமணியின் மழலைக் குரல்.... வண்ணத்துப்பூச்சி.... என்று பாடுவதுபோல் இருந்தது. ஒருகணம் அவருடைய நெஞ்சு விக்கித்துப் போயிற்று.

"என்ன வந்ததும் வராததுமாய் வீட்டுக்கை கூடப் போகாமல் கடவேக்கை குந்திக்கொண்டிருக்கிறியள்!..." என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் தன் சுயநிலைக்கு வந்த சங்கரலிங்கம் திரும்பிப் பார்த்தார். மதிற்சுவரில் தனது பழைய சைக்கிளைச் சாத்தியவாறே மணியம் நின்றுகொண்டிருந்தான். "ஒண்டுமில்லை!" எனச்சொல்லிக்கொண்டே எழுந்த சங்கரலிங்கம் பயணப்பையைக் கையில் எடுத்துக் கொண்டு, "வாவன்!.... வேற வேலை கீலை ஒண்டுமில்லைத்தானே?" என மணியத்தை அழைத்தார். அவருக்கு அந்த நேரம் யாராவது தன்னுடன் கூட இருக்கவேண்டும் போலிருந்தது.

வீட்டிற்குள்ளே நுழைந்த சங்கரலிங்கம், வீட்டுக் கதவைத் திறக்காமலே, பத்தியிறக்கிய விறாந்தையில் நின்றவாறே சுற்றும் முற்றும் பார்த்தார். தரை தூசு தும்பின்றித் துப்பரவாக இருந்தது. விறாந்தையைச் சுற்றியிருந்த அரைச் சுவரில் வைக்கப்பட்டிருந்த பூச்சட்டிகளில் உள்ள மலர்ச்செடிகள் யாவும் வாடாமற் கொள்ளாமல், பசுமையாகப் பூத்துச் சிரித்தன. சங்கரலிங்கத்தின் கண்ணுக்குள் கலா சிரித்தாள்.

"கலா நாலைஞ்சு நாளைக்கு முன்னந்தான் போனவளாம்!.." சங்கரலிங்கம் தனக்குத்தான், ஆனால் உரக்கவே சொல்லிக்கொண்டார்.

"பாத்தியளே!... வீரகத்தியின்ரை மனிசியைக் கண்ணாலை பாக்கேலாது!.... நீங்கள் போட்டியள்.... அதுகளுக்கு வந்த கஷ்ட நஷ்டம் கொஞ்சமே!.... நேசன்ரை அலுவல்கள் முடிஞ்சு இரண்டு கிழமையுக்கை ஆரோ மாவிட்டபுரத்துக் குடும்பம் ஒண்டு இஞ்சை வந்து தங்கக் கொள்ள இடமில்லாமல் அந்த ரிச்சுப் போச்சுதுகள்!... அதுகளைக் கூட்டிக் கொண்டு வந்து வீட்டோடை வைச்சு நாலைஞ்சு நாளையாலை சோத்துக்கு அரிசியில்லாமல் போச்சுது!.... வீரகத்தியின்ரை குணம் உங்களுக்கும் தெரியும்தானே!... ஆரிட்டையும் போய் கடன் கிடன் எண்டு வாய் வைக்காது அந்தாள்!...."

வீட்டுக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழையும் நிலையிலிருந்த சங்கரலிங்கம் மணியம் சொன்னவற்றைக் கேட்டு அப்படியே நின்றுகொண்டு திரும்பி அவனைப் பார்த்தார்.

"அந்த மனுசன் தங்கடை பசுவையும் கண்டையும் சாய்ச்சுக்கொண்டு போய் கமலத்தாரிட்டை வித்துப்போட்டு அரிசி, சாமான் வேண்டிக்கொண்டு வந்துதான் உலை வைச்சதுகள்.!"

சங்கரலிங்கம் கையில் வைத்திருந்த பையை ஒருபுறம் போட்டுவிட்டு அவசரம் அவசரமாக

## மீண்டும் எப்போது சந்திப்பு?

ஒருவேளை நான் உங்களிடம்
விடை கூறிப் பிரிந்து செல்லலாம்
மீண்டும் திரும்ப முடியாமலும் போகலாம்

உங்களிற்குப் புரிகிறதா?
நீங்கள் உணர்ந்து கொள்வீர்களா?
நான் எங்கு எதற்குச் செல்கிறேன் என்று

நான் வீழ்ந்து விடலாம்
மீண்டும் எழும்ப முடியாமல் கூட



இனியும் நீங்கள் எனக்காக
என்றுமே காத்திருப்பீர்களா?

ஒருவேளை எனது கண்கள்
மீண்டும் திறக்காமல் போகக் கூடும்
உங்களிற்குப் புரியுமா?
எனது அமைதியின் உளப்பாடு

தமிழீழ மண் அன்பிற்குரியது என்பதனால்
நாம் எல்லாவற்றையும் கொடுத்துவிட்டோம்

தமிழீழக் கொடி உயர்வானது
எமது குருதியினால் தான் தோய்ந்துள்ளது

எமது குருதி தோய்ந்ததால்
தமிழீழக் கொடி இன்றும் சிவப்பாக உள்ளது.

இதுதான் விடயம்!....
எனக்குப் புரிகிறது இப்போது

நீங்கள் புரிந்துவிட்டீர்கள் என்று
நீங்கள் உணர்ந்து விட்டீர்கள் என்று
நீங்கள் கவலைப்படமாட்டீர்கள் என்று

உங்களை மீண்டும் சந்திப்பேன்
நீங்களும் எனது காலடிச் சுவடுகளை
பின்தொடர்ந்து வந்தால்.



தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/

சமயலறைக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தார். அங்கு எல்லாமே மிக ஒழுங்காக, கழுவித் துடைத்து, பொருட்கள் யாவும் அதனதன் இடத்தில் கச்சிதமாக வைக்கப்பட்டிருந்தன. சமையலறையின் ஒரு மூலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அரைச் சாக்கு அரிசி அப்பிடியே, அவர் டென்மார்க்குக்கு செல்லும்போது விட்டுச் சென்றபடியே இருந்ததைக் காணச் சங்கரலிங்கத்துக்கு நெஞ்சுக்குள் ஏதுவோ செய்தது. சாப்பாட்டு மேசைக் கதிரையில் அப்படியே அமர்ந்துகொண்டார். அவருடைய கையிலிருந்த திறப்புக்கள் கனத்தன.

அவரைத் தொடர்ந்து சமையலறைக்குள் வந்த மணியம், அவருடைய நிலையைக் கண்டு "என்ன இப்பிடி உடைஞ்சு போனியள்! இதெல்லாம் இப்ப இஞ்சை எல்லா இடத்திலும், எல்லா வீடுகளிலையும் நடக்கிற விசயம் தானே!.... யோசிச்சு என்னத்தைச் செய்யிறது?" .... என ஆறுதல் கூறியவன், அவருடைய கவனத்தை வேறு திசையில் திருப்பும் முயற்சியில், "அது சரி.... உங்கடை மோள், மருமோன்.... மற்ற மோன், பேரப்பிள்ளைகளெல்லாம் எப்பிடி இருக்கினம்?.... அதுகளுக்கென்ன குடுத்து வைச்சதுகள்!.... செல்லடி, குண்டடி, சோத்துப் பிரச்சினை இல்லாமல் சுதந்திரமாய் சந்தோசமாய் இருக்குங்கள்!... உங்கடை மோளின்ரை புருசன்..... எப்படிப் பொடியன்?.... புள்ளை டென்மார்க்குக்குப் போன பிறகுதானே அங்கை கலியாணம் நடந்தது!..."

சங்கரலிங்கத்துக்கு மகள், மருமகன், பேத்தி ரமணி, மகன் குடும்பம் யாவருமே எங்கேயோ மிக மிகத் தொலைவில், தொலைந்தே போய்விட்டது போன்று ஒரு வெற்றுணர்வு மனதில் தோன்றியது.

"ஓமோம்!.... அவைக்கென்ன!..... எல்லோரும் சந்தோஷமாய்த்தான் இருக்கினம்.... அது கிடக்கட்டும்... நீ ஒருக்கா கமலத்தாரிட்ட ஓடிப்போய், நான் சொன்னது எண்டு சொல்லி வீரகத்தியின்ரை பசுவையும் கண்டையும் சாய்ச்சுக்கொண்டு வா!.... எவ்வளவு காசு எண்டும் கேட்டுக்கொண்டு வா!..." என மணியனைக் கமலத்தார் வீட்டிற்கு அனுப்பிய சங்கரலிங்கம் மீண்டும் முன்விறாந்தைக்கு வந்து தனது சாய்மனைக் கதிரையில் அமர்ந்து கொண்டார்.

அவருடைய விழிகள் சென்ற இடமெல்லாம் கலாவின் கைவண்ணம் தெரிந்தது. 'பாவம்! எத்தினை நாள் சோறில்லாமல் பட்டினி கிடந்ததுகளோ?.... குசினி கூட்டித் துப்பரவாக்கினவளுக்கு அங்கை கிடந்த அரிசிச் சாக்கு கண்ணிலை படாமல் போயிருக்குமே!.... பசி கிடந்தாலும் இன்னொருத்தற்றை பொருளைத் தொடாத மானப் பிறவிகள்!.... இந்தத் துறப்புக்கள் எல்லாம் அவளிட்டை தானே கிடந்தது!'

அந்தத் திறப்புக்களைப் பார்த்த சங்கரலிங்கத்துக்கு, அவர் டென்மார்க்கில் தங்கியிருந்த போது நேர்ந்த ஒரு அனுபவம் சட்டென நினைவுக்கு வந்தது.

அவருடைய மகளுடைய குடும்பம் டென்மார்க்கில் வசிக்கும் நகரத்தின் நூல் நிலையத்துக்கு அவர் ஒரு தடவை தன் மகளுடன் சென்றிருந்தார். மகள் வழியெல்லாம், வாய் ஓயாமல் டென்மார்க்கின், டென்மார்க் மக்களின், தன் கணவனின் புகழ் பாடிக்கொண்டே வந்திருந்தாள்.... இவர்தான் இஞ்சை எங்கடை தமிழ்ச் சங்கத்துக்கு தலைவர்!.... சங்கந்தான் பாரீஸ் ஈழநாடு பேப்பர் சங்கக் காசிலை எடுத்து நூல் நிலையத்திலை போட்டிருக்குது!... வீரகேசரி நூல்நிலையமே எடுத்துத் தருகுது....

அவர்கள் நூல்நிலையத்திற்கு சென்ற சமயம் அங்கு அதிகம் ஆட்கள் இருக்கவில்லை. பத்திரிகைகள் இருக்கும் பகுதிக்குச் சென்று வீரகேசரியையும் பாரீஸ் ஈழநாட்டையும் எடுத்துக்கொண்டு வந்து அவரிடம் கொடுத்துவிட்டுக் கடைக்குப் போய்விட்டிருந்தாள் மகள். வீரகேசரியை எடுத்துவிட்டு, பாரிஸ் ஈழநாட்டுப் பத்திரிகையைப் பார்ப்பதிலியே சங்கரலிங்கத்தின் கவனம் சென்றது.

**'விடுதலை என்பது அக்னிப் பிரவேசம். நெருப்பு நதிகளை நீந்திக் கடக்கும் நீண்ட பயணம்; தியாகத்தின் தீயில் குதிக்கும் யாகம். இந்த விடுதலை வேள்விக்கு தமது உயிரை ஈகம் செய்தவர்கள் மாவீரர்கள்.**

**- தமிழீழத் தேசியத்தலைவர்.**

அப்பத்திரிகையில் காணப்பட்ட விசயங்களை விட, அந்தப் பத்திரிகை இருந்த விதமே அவரை வியப்புக்குள்ளாக்கிற்று. ஒரு மெல்லிய உலோக மட்டையில் இடப்பக்க ஓரம் முழுவதும் ஒரு சட்டத்தினுள் செலுத்தப்பட்டு, பத்திரிகையை யாரும் அந்த உலோக மட்டையிலிருந்து பிரித்து எடுக்க முடியாதபடி, ஒரு சிறிய, கனதியான பூட்டும் போடப்பட்டிருந்தது. சங்கரலிங்கம் அந்தப் பகுதியில், தட்டுக்களில் வைக்கப்பட்டிருந்த மற்றப் பத்திரிகைகளைக் கவனித்தார். வெவ்வேறு மொழிப் பத்திரிகைகள் பல அங்கு காணப்பட்டன. ஆனால், அவற்றுள் எந்த மொழிப் பத்திரிகையும் இப்படிக் காபந்து நிலையில் காணப்படவில்லை. வீரகேசரிக்கும் இந்தப் பூட்டுப் பாதுகாப்பு இருக்கவில்லை. இந்த பத்திரிகைக்கு மட்டும் ஏன் இந்த தனிப்பாதுகாப்பு? அச்சறுக்கை? என்ற எண்ணம் அவருடைய மண்டையைக் குடைந்து கொண்டிருந்தது. இதைப் பற்றி மகள் வந்ததும் கேட்கவேண்டும் என மனதுக்குள் குறித்துக்கொண்டு அவர் பத்திரிகையைப் படித்துக்கொண்டார்.

பின் மகள் கடையால் வந்து வீட்டுக்கு அழைத்து வந்தபோது தான் கேட்க எண்ணியதைக் கேட்காமல் மறந்துபோனதை இப்போது சங்கரலிங்கம் தனது வீட்டு விறாந்தையில், தனிமையில், கலாவின் நினைவு நெஞ்சை நிறைக்க, சாய்மனைக் கதிரையில் உட்கார்ந்திருந்த



தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/

போதுதான் நினைத்தார். எதற்கு அந்தத் தமிழ்ப் பத்திரிகைக்கு மட்டுமே பூட்டு என்ற கேள்வி இப்போது நினைவுக்கு வந்ததும் அல்லாமல் அதற்குரிய விடையுங்கூடப் புரிந்தது அவருக்கு!

சங்கரலிங்கத்தின் பார்வை, வீட்டுக்கும் வாசற்கதவுக்கும் இடையேயான ஒடுக்கமான பாதையின் இருமருங்கும் கொல்லென்று பூத்துநின்ற வாடாமல்லிகைச் செடிகளின் மேல் பதிந்தது. அங்கே அவற்றின் மீதும், மதிலோரத்து தொங்கு செவ்வரத்தம் பூக்கள் மீதும் பட்டும் படாமலும், தொட்டும் தொடாமலும் சிறகடிக்கும் ஒரு அழகிய வண்ணத்துப் பூச்சியையும் அவர் கண்டார்.

இன்னுமோர் முறை அவர் மனதுக்குள் பேத்தி ரமணியின் டெனிஷ் மொழி கமழும் மழலைத் தமிழ்க் குரல்.... வண்ணத்துப்பூச்சி!... பறக்குது பார்!.... பறக்குது பார்! என்று ஒலித்தது.

இந்த வண்ணத்துப் பூச்சிகளைப் பற்றித்தான் எத்தனை அழகிய, இனிய பாடல்கள் உண்டு! அவற்றின் செட்டைகளில் உள்ள, கைபட்டாலே கரைந்துபோகும் இந்தக் கண்கவர் வண்ணங்களுக்குகாக மட்டுமா இத்தனை பாடல்கள்! அவருடைய மனதில் எழுந்த இந்த நினைவை அமுங்க அடித்துக் கொண்டு அவர் மனத்திரையை முழுமையாக ஆக்கிரமித்தது அவர் காலையில் காணநேர்ந்த இன்னொரு காட்சி!

அகலமும், கனதியும், கூர்மையுங் கொண்ட மண்வெட்டியினால் இருவேறு துண்டங்களாக வெட்டப்பட்டுத் துடித்து, வாழ்வதற்காகப் போராடி மண்ணினுள் மறைந்துகொண்ட அந்த மண்புழு!

வீட்டையொட்டிய ஒழுங்கையில் மணியம் பசுவைச் சாய்த்து வரும் ஒலியும், வீரகத்தி வீட்டுப் பசுவின் கழுத்துச் சலங்கையின் கல கல என்ற ஓசையும் கேட்கவே, சங்கரலிங்கம் ஒரு புதிய தெம்புடன் எழுந்து வீரகத்தியின் வீட்டுக்கு மறுபடியும் செல்வதற்குத் தன்னைத் தயார்படுத்திக்கொண்டார். ★

# பலம்



வட்டுக்கோட்டைச் சந்திக்குச் செல்லும் பாதை. ஒரு 'விடுதலைப்புலி' விரைவாகப் போய்க் கொண்டிருக்கிறான்.

சட்டைப்பையில் 'சயனைட்' புட்டி பத்திரமாக இருக்கிறது.

ஒவ்வொரு மணித்துளியும் சாவுக்குப் பக்கத்தில் இறுமாப்போடு நிமிர்ந்து நிற்கும் அந்த வீரன் போர்க்களத்தில் ஏதோ ஒரு கடமைக்காக விரைகிறான்.

எதிர்ப்புறமாக வந்த கிழவி ஒருத்தி பதட்டத்தோடு கையை நீட்டி அவனைத் தடுத்து நிறுத்துகிறாள்.

நிமிர்ந்து பார்க்கிறாள்.

'தம்பி.... வட்டுக்கோட்டைச் சந்தியிலை இந்திய 'ஆமி'க்காரன்கள் படுத்துக் கிடக்கிறானுகள் மோனே.... உந்தப்பக்கம் போகாதே அப்பு..'

தளதளத்த குரல்,

கிழவி சொன்னது அவனுக்குப் புரியவில்லை.

தொடர்ந்து அதே திசையில் விரைவாக நடக்கிறான்...

இரண்டு அடிகள் வைக்கவில்லை. கிழவி தலையில் அடித்து 'ஓ!' என்று கதறும் ஓலம் அவன் கால்களை இழுத்து நிறுத்துகிறது.

ஏன் கிழவி அழுகிறாள்?

திரும்பி வருகிறான்.

'ஏனணை அழுறே?'

கிழவி அழுது கொண்டே ஒவ்வொரு சொல்லாக அவனுக்கு விளங்கச் சொல்லுகிறாள்.

'வட்டுக்கோட்டைச் சந்தியிலை......'

இப்போது அவனுக்குப் புரிகிறது.

'நீயெல்லாம் உயிரோட இருந்தாத்தான் மோனே உவனுகளோட போராடலாம் ....'

கிழவி தொடர்ந்து அழுகிறாள்.

மேனி சிலிர்க்கிறது.

கண்களில் நீர் பனிக்க – கிழவியைக் கைகளால் அணைத்துக்கொண்டே அவன் எதிர்த்திசையில் திரும்புகிறான்.

நண்பர்களோடு பேசும்போது இந்த நிகழ்ச்சியைக் குறிப்பிட்டு இன்றும் அந்த விடுதலைப்புலி சொல்லிக் கொள்கிறானாம்.

'இது தான் எங்கள் பலம்.'



தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/

# துயிலெழுச்சிப் பாடல்

தில்லைச்சிவன்

பொழுது புலர்ந்தது, யாம்செய்த தவத்தால்
புகழ்ப்பிர பாகரன் தோன்றினன்; அதனால்
தொழுது அடிமைசெய் தொழும்பத் தமிழர்
தொன்றைப் புகழ்நிறீஇ எழுந்தனர் புலியாய்,
பழுதறு வீரம் பரந்தது உலகம்
பார்த்து வியந்து போற்றினர்; தமிழே!
அழுது அழுது அடிபட்ட வாழ்வு
அகன்றது, ஈழம் மலர்ந்தது பாரேன்.

புண்ணியப் பொருண்மிய மேலவர் ஒருபால்,
புலமை மிகுந்தநற் புலவர்கள் ஒருபால்,
நண்ணிய நாவலர் காவலர் நாப்பண்
நாடறிந் தபலர் கூடிநின் றார்க்க,
திண்ணிய தோள்வலிப் புலிப்படை வீரர்
திரளொடு வேல்விழிச் சேனையுஞ் சேர்ந்து
'மண்ணிநல் வண்ணமே வாழ்கென' வாழ்த்த
வண்டமி ழேகன் விழித்தெழு வாயே!



ஆற்றல் மிகுபுலி வீரர்செய் தவமாம்
அகலிடத் தேபயின் றமைய அன்பே!
மாற்றலர் எங்கோ மடிந்தனர், இருள்போய்
மறைந்தது; ஈழ மணித்திரு நாடு
தோற்றிய தாய்மையில், புலிக்கொடி எங்கும்
துய்ய ஒளிச்சுடர் வீசின வானைக்
காற்றிடைப் பாய்ந்து பறப்பதைக் காண
கடிமலர்க் கண்விழித் தெழுகவெம் தாயே

அரும்பசி தாகம்நோய் யாவையும் வென்று
அன்னைத் தமிழைச்சிங் காசனத் திருத்த
கரும்புலி வீரர்தம் உயிரையா யுதமாய்
கண்டவர், இதற்கணுக் குண்டு எத் தரமோ!
விரும்பி உயிர்தரும் வீரரைப் பெற்ற
வியலி! யுனைவெல்ல நினைத்தவர் இன்றோ
கருங்கடற் பரப்பிலும் தரையிலும் எங்கும்
சுட்டழிந் தோடுதல் காணக்கண் விழிமே.



தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/

வயல்களெல்லாம் எரிந்து கிடந்தன. வைரவர் கோயில் வரை தைரியமாய் நடந்துவந்த வேலவருக்கு காலங்கள் மெல்ல அச்சம் காட்டின. இராணுவ முகாமின் தொலைத் தொடர்புக் கோபுரம் தெளிவாகத் தெரிந்தது.

இடுப்பில் கிடந்த துவாயை இலுப்பை மரத்தின் கீழ் விரித்துவிட்டு அதில் அமர்ந்தார். சிலுசிலுவென்று காற்று அவரை ஆனந்தத்தோடு தழுவியது!

திரும்பிப் பார்த்தார். தூரத்தே வயல் காணிக்குள் கார்த்திகேசரின் கல்வீடு கம்பீரமாய் நின்றது!

'என்னெண்டுதான் இந்தச் சனங்கள் வீடு வாசலை மறந்து போச்சுதுகளோ?...' வயிறு பற்றி எரிந்தது!

'இரவிலோ மனிசரைக் கிடக்க விடாமல் குண்டு போட்டா.... சனம் எழும்பி ஓடாமல் என்ன செய்யிறது...' தன்னைத்தானே தேற்றிக் கொள்ள முயற்சித்தார்.

எலும்பும் தோலுமாய்... நாயொன்று ஆடி ஆடி வந்து வைரவர் கோயில் கொட்டிலில் சுருண்டு கிடந்தது!

'தைப்பூசம் சித்திராப்பறுவம் வைகாசி விசாகம் என்டு இந்தக் கோயிலிலை எத்தினை விசேஷம் நடக்கும் இப்ப...'

நீளமான பெருமூச்சொன்றுதான் அவரிடமிருந்து வெளிப்பட்டது!

ஒவ்வொரு விசேஷத்துக்கும் கூடும் சனக் கூட்டத்தை நினைத்துப் பார்த்தது அவர் மனம். 'அந்தக் காலம் இனி எப்ப வரும்...?' என்ற ஏக்கம் நெஞ்சில் படர்ந்தது.

அண்ணாந்து பார்த்தார் வைரவர் கோயில் கொட்டிலின் ஓடுகள் சில நொருங்கி வெறும் சிலாகைகள் தெரிந்தன!

இலுப்பை மரம் கிளைகளை அசைத்து அசைத்து அவருக்குச் சாமரை வீசிற்று! ஓர் அரசகுமாரனைப் போல ஒருகணம் பெருமிதம் கொண்டார்!

சோளகம் தொடங்கி விட்டால் வயல் வெளிக்குள் பெரிய சிறிய வேறுபாடின்றி பட்டம் ஏற்றுவார்கள்... இப்போது வயல் வெளியின் வானப்பரப்பு வெறிச்சோடி அவர் மனதில் வேதனையைப் பிறப்பித்தது!

இரண்டு மாதங்களுக்கு முன்னால் மாட்டுக்குப் புல்லுச் செதுக்க வந்த கணபதி சற்றுத் தள்ளித்தான் சடலமாக எடுக்கப்பட்டான்... நண்டும் குஞ்சுமாய் இழப்படும் கணபதியின் மனைவிக்காக அவர் இரங்கினார்! கணபதிக்கு வெடி பிடித்ததைக் கேள்விப்பட்டு வேலவரின் மூத்தவள் ஓடோடி வந்தாள். 'அப்பு... வெளிக்கிட்டு வாணை... வீடு போனாப் போகட்டும்....' அவர் மறுத்துவிட்டார்!

'உனக்கும் ஒருநாளைக்கு கணபதிக்கு நடந்ததுதான் நடக்கும்....' அவள் கோபத்தோடு போயவிட்டாள்.

இலுப்பை மரத்தில் இப்போது குருவிகள் பேசிட்டன. வெள்ளை நிறத்தில் சிறியதாய்... இலுப்பம் பூக்கள் அவர்மேல் விழுந்தன!

அவரின் மனைவி பொன்னு... முன்பெல்லாம் இந்த இலுப்பம் பூக்களைப் பொறுக்கித் துவையலாக்கித் தருவாள்!

மனைவி நினைப்பு அவரை ஒருகணம் மௌனமாக்கியது!

'ராசாத்தி குடுத்துவைச்சவள்... பூவோடையும் பொட்டோடையும் போட்டாள்? மனது மனைவியை வாழ்த்தியது!

சூரியன் அவரின் தலைக்குப் பின்னால் தகதகத்துக் கொண்டிருந்தது! காற்று மூசி மூசி வெறித்தனமாய் வீசியது!

தூரத்தே... வயல் வரம்பில்... வரிசையாய் உருவங்கள்... அவர் சடாரென்று நிலத்தில் கிடந்த துவாயை எடுத்துக்கொண்டு கொட்டிலுக்குள் மறைந்தார்.

மறைந்து கொண்டவர் அந்த உருவங்களை உற்றுப்பார்த்தார். 'எங்கடை பிள்ளையள் தான்...'

எல்லோரும் முதுகில் பொதிகளுடன்... விதம் விதமான துப்பாக்கிகளுடன்.... ஒன்று இரண்டு பேர் மட்டும் நீளமான குழாய்களை தோளில் சுமந்துசென்றார்கள். 'உந்தக் காம்புக்கு (CAMP) சாத்துப்படி விழப்போகுது...! தன்னளவில் ஊகித்துக்கொண்டார்.

நெஞ்சக்கூடு லேசாய் நடுங்கியது.... 'ஒரு நாளைக்கு கணபதிக்கு நடந்ததுதான் உனக்கும்

# இப்படியும்

ஆதிலட்சுமி சிவக்குமார்



தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/



நடக்கும்...' மூத்தவரின் எச்சரிப்பு குமிழிட்டது. 'இனி இஞ்சை இருக்கிறது வில்லங்கம்....' மண்ணைத்தட்டி விட்டு எழுந்தார்.

தெரு பரபரப்பாக இருந்தது. மூத்தவன் கடைக்குட்டியை சைக்கிளில் வைத்து உருட்டியபடி வேலவர் தெருவைக் கடக்க எத்தனித்தார். 'அப்பு.... என்ன இஞ்சை நிற்கிறாய்?....'

சோதி கலகலத்தான்.

வளவளப்பான முகத்துடன்.... கொஞ்சம் சதைவைத்த உடம்புடன்.... அவனையும் அடையாளம் கண்டுகொள்ள சில வினாடிகள் எடுத்தன வேலவருக்கு...!... 'எட சோதி.... ஆளை அடையாளம் தெரியலை..... எப்படி உன்ரைபாடுகள்.... மனிசி... பிள்ளை குட்டிகள்.... எங்கை?...!

'எல்லாரும் சின்னம்மா வீட்டிலை இருக்கினம்... அது சரியணை அப்பு.... எப்ப இஞ்சாலை வந்தனி....'

'முந்தநாள் பொழுதுபட....'

'ஏனணை அங்காலை ஏதும் சிக்கலோ...!'

'முந்தநாள் பின்னேரம்... எங்கடை வயிர வரடியிலை போய் சும்மா படுத்திருந்தன். ஒரு 75 பொடியள் காணும். எல்லோரும் ஆமான துவக்குகளோடை..... பைப்புகள்.... மம்பெட்டியளும் கொண்டு...!

'எங்கை போனவை?..'

'கார்த்திகேசற்றை கல்வீட்டுக்கை போனாங்கள். ஆமிக்குச் சாத்தப்போறாங்கள் போல நடுச்சாமத்திலை ஒண்டெண்டா வரேலாது... நான் நேரத்தோட வந்திட்டன்'

சோதி கீழ்த்தாடையைத் தடவிக்கொண்டு தலையாட்டினான்.

'நானும் கனநாளாய் ஊர்ப்பக்கம் போகலை. தேங்காய் கீங்காய் ஏதும் விழுந்தால் எடுத்தரலாம்தான்...'

கணபதி புல்லுக்குப் போய் நடந்தது தெரியுமே பேசாமல் உங்கினை சந்தையிலை பார்த்து வாங்கு.... அங்கை என்னத்திற்கு....!

'வேண்டுறத்துக்கு காசும் இல்லையணை வேணும்...!

'ஏனடா.... தொழில்துறை ஒண்டுக்கும் நீ போறலையே...!

'கொஞ்சநாள் விறகு கட்டினன் சரிவரலை.. கொஞ்சநாள் கிளாலிச் சனத்தை ஏற்றி இறக்கினன்.... அதுவும் சரிவரலை...!

'அப்ப....இப்ப என்னடா மோனை செய்யிறாய்?'

'உயிரைப் பார்க்காமல் வன்னியிலை போய் சாமான் கொண்டு வாறனான்.... அதுவும் கையும் கணக்கும் சரியாய்ப் போகுது....!

'எப்படி இருந்தனாங்கள்.... இப்ப இப்படியெல்லாம் இழுபடுகிறோம்.... இதுகளுக்கு ஒரு முடிவு வராமலே விடப்போகுது....! வேலவர் நெடுமூச்செறிந்தார்.

'நேரம் போகுது.... ஆறுதலாய் வாறன் அப்பு... வரட்டே...' சோதி விடைபெற்றுப் போக....

'பேரப்பிள்ளையை பாடசாலையில் இறக்கிவிட்டு வேலவர் வீடு வந்தார்.

"ஏனணை அப்பு இவ்வளவு நேரமும் சென்றது....? நான் பயந்து போனன்..." மூத்தவன் வேலவரைக் கேட்டாள்.

"எங்கடை சோதியை தெருவிலை கண்டனான் மோனை. கதைச்சாப்போல மினைக்கட்டுப் போனன்...."

'என்னவாம்?....'

'வேற என்ன.... சீவியப் பாட்டை நினைச்சு மனவருத்தப் பட்டுப் போறான்.... பாவம்...'

'வவுனியாவில போய் நல்லாச் சாமான் கட்டியந்து விக்கிறவன்.... சும்மா உனக்கு முன்னாலை அழுகிறான்.... நம்பிற்றியே....!'

மக்களின் கூற்றைத்தான் அவரால் நம்ப முடியவில்லை. அவருக்கு எதுவித பதிலும் கூறாது மௌனமாகிப் போனார்.

தெருச்சந்தியில் வாழைகளும், தோரணங்களும், கறுப்புக் கொடிகளும் கட்டப்பட்டிருந்தன. கறுப்புக் கொடிகளும் கட்டப்பட்டிருந்தன. வீதிகளில் சனநடமாட்டமும் குறைந்திருந்தது. ஓரமாக... கூடாரமொன்றில் நான்கைந்து போராளிகளின் உருவப்படங்கள் வைக்கப்பட்டிருந்தன. மலர்கள் தூவப்பட்டிருந்தன.

சில பாடசாலைச் சிறுவர்கள் அந்தப் போராளிகளின் படங்களைப் பார்த்துக் கொண்டு நின்றனர்.

சைக்கிளை வேலி ஓரமாக வெயில் பிடிக்காது விட்டுப் பூட்டிவிட்டு அந்தக் கூடாரத்தின் அருகே போனார் வேலவர்!

'பிள்ளையள் எந்தச் சண்டையிலே இவையள் செத்தவையாம். அந்த இரு சிறுவர்களையும் பார்த்து... துயரம் பொங்கக் கேட்டார் அவர்.

'சண்டேலை சாகேலை அப்பு செல் அடிச்சுத்தான் செத்தவயள்...' துடிதுடிப்பான சிறுவன் சொன்னான்.

'பிளேனுகள் ஒண்டும் இப்ப பறக்கிறேல்



தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/

லையே....'

"பிளேனுகள் அடிக்கேலயணை.... காம்பில இருந்து மோட்டடார் அடிச்சுத்தான் இந்த அண்ணாக்கள் செத்தவை!.... மோட்டாரோ எப்ப அடிச்சவன்..."

'நேற்றுக்காலமை... இடைக்காட்டில அடிச் சதல்லே...' சிறுவனின் கேள்வி கூர்முள்ளாய் நெஞ்சுக்குள் குத்தியது.

கொண்டுவந்த காசுக்கு மீன் வாங்கிக் கொண்டு புறப்பட்டார். நெஞ்சுக்குள் ஏதோ கனப்பது போன்று இருந்தது....

முற்றத்தில் சைக்கிளை நிறுத்திவிட்டு திண்ணையில் அமர்ந்து கொண்டார். உடல் வியர்த்துக்கொட்டியது.

'அப்பு விசயம் கேள்விப்பட்டனியே...'

'என்ன மோனே..'

'எங்கடை காத்திகேசற்றை கல்வீட்டுக் கல்லே நேற்று செல் அடிச்சவங்களாம். 6 பெடியள் செத்ததுகளாம்...'

'.......'

'ஆரோ.... காசுக்கு ஆசைப்பட்டுப் பெடியளைக் காட்டிக் குடுத்திட்டாங்கள்....' மூத்தவளின் அந்த வார்த்தை மீண்டும் அவரைத் தைத்தது!

'உவன் சோதியன்...'

'ஓ.... சோதியன்.... சோதிக்கென்ன...'

அவர் குரல் நடுங்கியது

சோதியனை பொடியள் 'பொயின்ரில' பிடிச்சிருக்கிறாங்களாம்..... என்ன நாசமோ தெரியேல்லை...'

சொல்லியபடி மூத்தவள் பையிலிருந்து மீனை எடுத்துக்கொண்டு உள்ளே போனாள்.

சோதியின் சதைபிடித்த வளவளப்பான முகமும் செல் தாக்குதலில் சிதைந்த போராளிகளின் முகங்களும் மாறி மாறி அவர் மனக் கண்ணில் தோன்றின! முகத்தை இரு கைகளாலும் பொத்திக்கொண்டு, போராளிகளின் சாவுக்காக அவர் குமுறிக் குமுறி அழுதார்.

# மாவீரரை நினைவு கூருவோம்!

இலங்கைத் தமிழர் மேல் சிங்கள பேரினவாத அரசு செலுத்தி வந்த அடக்குமுறை 1977 உடன் யு.என்.பி. அரசாங்கம் ஆட்சிபீடம் ஏறியதுடன் ஒரு உச்சக்கட்டத்தை அடைந்தது. தமிழர்களின் கல்வி வாய்ப்புக்கள் குறைக்கப்பட்டன. அரசாங்க துறைகளிலும் தொழில் பெறும் வாய்ப்புக்கள் கிட்டத்தட்ட முற்றாகவே அருகிவிடும் நிலையை அடைந்தது. தமிழீழ பிரதேசம் பொருளாதார ரீதியில் புறக்கணிக்கப்பட்டன. அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டன.

1977–ல் இருந்து 1985 வரை இலங்கைத் தீவெங்கணும் இடைவிடாத இனப்படுகொலைகளும், இன ஒழிப்புக்களும் நடைபெற்று வந்தன. தமிழீழ பிரதேசத்துள்ளும், அதற்கு வெளியாலும் இவை சர்வசாதாரண நிகழ்ச்சிகளாயின. சிறு விடயங்களுக்குக் கூட தமிழன் தனது எதிர்ப்பையோ, வெறுப்பையோ வெளிக்காட்ட முடியாத நிலையே நிலவியது. தமிழீழம் மிகக் கடுமையான நெருக்கடிக்குள் சிக்கித் திணறியது.

தமிழீழத்தின் தன்னாட்சியுரிமையும், அத்தன்னைட்சி உரிமையைப் பெறுவதற்கான ஆயுதப்போராட்டமுமே இந் நெருக்கடிகளில் இருந்து விடுபடுவதற்கான ஒரே மார்க்கமாக இருந்தது. ஏனைய சகல மார்க்கங்களும் அடைக்கப்பட்டு விட்டன. இன ஒழிப்புக் குணாம்சம் கொண்ட சிறிலங்கா அரசுடன் ஆயுதப் போராட்டம் நடத்துவது என்பது ஒரு சாதாரண விடயமல்ல. மிகச் சிரமமான விடயமாயிருந்தாலும் இது நடத்தப்பட்டே ஆக வேண்டிய ஒரு விடயமாகவும் இருந்தது.

இந்த நெருக்கடிக் கட்டத்தில்தான், இந் நெருக்கடிகளில் இருந்து தமிழீழத்தை மீட்டெடுக்கும் ஆற்றல் கொண்ட 'மாவீரர்கள்' அவசியப்படுகிறார்கள். இவ் அவசியம் நிறைவேற்றப்படுகிறது. தமிழீழ வரலாறு மாவீரர் சகாப்தத்துள் உட்புகுகிறது. முடிவில்லாத சங்கிலித் தொடர் போன்ற வீரர்களை தமிழீழ மக்கள் தோற்றுவிக்கிறார்கள். இன்றைய வரலாற்றின் தேவை நிறைவேற்றப்படுவதற்கு அடிப்படையாக அவசியப்படும் நியதி ஒன்று பூர்த்தி செய்யப்படுகிறது.

இந்த மாவீரர்கள் தோன்றியிருக்காவிடில், இன்று தமிழர் அனைவருமே அகதிகளாகவும், அடிமைகளாகவுமே இருந்திருப்போம். 'ம்' என்றால் சிறைவாசம் 'ஏன்' என்றால் வனவாசம்' என்ற நிலையிலேயே இருந்திருப்போம்.

இங்கு தான் 'மாவீரர்படையின்' சமூக முக்கியத்துவம் உள்ளது. ஆனால் தமிழீழ விடுதலைப் பயணம் இன்னமும் முடிவடையவில்லை. மாவீரர்களின் கடமை இன்னமும் முற்றுப்பெறவில்லை. இதுவரை பெற்ற வெற்றிகளைப் பாதுகாக்கவும், இன்றைய நெருக்கடிகளையும், இனிவரப்போகும் நெருக்கடிகளையும் வெற்றிகரமாக தாண்டி முன்னேறவும், இறுதி வெற்றியை உறுதிப்படுத்தவும் வேண்டுமானால், காட்டு வெள்ளம் போலவும், சங்கிலித் தொடர் போலவும் தமிழீழ சமூகம் பல்லாயிரக்கணக்கான 'மாவீரர்களை' மேலும் பிரசவிக்க வேண்டும்.

'மாவீரர்கள் தினம் வெறுமனே கடந்த காலத் தியாகிகளை நினைவுகூரும் ஒரு தினமல்ல. மாறாக நிகழ்காலத்துக்கும் எதிர்காலத்துக்கும் அவசியமான பல்லாயிரக்கணக்கான 'போர் தியாகிகள்' உருவாகுவதற்கு அவசியமான சமூக சூழலை உருவாக்கும், துரிதப்படுத்தும் ஒரு தினமாகும். இத் தினத்தில் உங்கள் கடமையை உணர்ந்து கொண்டு, உங்கள் திறமையை இனங்கண்டு, தேச விடுதலைக்கும் மக்கள் சுதந்திரத்திற்குமான முயற்சியில் உங்களை அர்ப்பணியுங்கள். ★



தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/

# நெஞ்சமெல்லாம் வாழுவான் நீடூழி

ந. கிருஷ்ணசிங்கம்

சத்தியத்தின் வழிநின்று போராடியோர்
சாகடிக்கப்பட்டார்கள் ஆளுவோரால்
நித்தியமும் இந்தநிலை நீண்டபோது
நிலைகுலைந்து தமிழரிங்கு கலங்கிடவே;
உத்தமத் தலைவன் பிரபாகரன்
உதித்தனன் எங்களை உய்யவைக்க!
வித்தகன் விடுதலைப்புலி இயக்கம்
வளர்த்தனன்; எம்மை வாழவைத்தான்!

அண்ணனின் மாதலைமையால் மகிழ்ந்து
அழுகைவிட்டு எழுகவே நாம்விழைந்தோம்.
புண்ணான நெஞ்சுகளில் புதியசக்தி
புகுந்ததெனநாமுணர்ந்து
பெருமையுற்றோம்!
எண்ணார்ந்த இடர்பட்ட எமதுஇனம்
கண்துடைத்து கனலெடுத்து வந்ததுவே.
மண்மீட்க மாகலங்கள் கொண்டபடை
மண்மீது நமதெனவே நிமிர்ந்ததுவே!

தாக்குதல் படைநடத்தி தலைவருமே
தடுமாறி ஓடவைத்தார் சிங்களத்தை
ஊக்கமொடு உரிமைப்போர் உயர்ந்து
உன்னதங்கள் படைத்தனவே
உலகினிலே!
ஏக்கமதை போக்கியெமை காக்கவே
எழுந்தமாவீரர் உடல்வித்தாய் போக
தீக்கண்கள் திறந்து பல்லாயிரராய்
திரண்டு தலைவன்பின்
பிறவிகொண்டார்!

பெண்களும் முரசறைந்து முன்னேவர
அண்ணனே ஆக்கினான் அனைத்துமே.
ஆணோடு அரிவையரும் ஆயுதங்கள்
அணிந்து களம்வென்றார் அற்புதமாம்!
பெண்கடற்புலி அங்கையற்கண்ணி
பாரதிரப் படைத்தாளே சாதனையே!
இன்னும் நளாயினி; மங்கைமேலும்
எதிரிகப்பல் எரியவென உயிரேதந்தார்!

உடலுளம்யாவும் உயர்ந்தபடை
கடல் நிலமெங்கும் விளங்கவைத்தான்.
படைமுகாம்; கப்பல் பலவுமிங்கே
உடையவே தலைவன் தலைமைதந்தான்!
படைகள் அழிய உயிராயுதத்தால்
படைத்தனர் பலவெற்றி கரும்புலிகள்
நடைபெறா தியாகமா தீரங்களே
நடத்துவான் தலைவனே நாடதிர;
நேரிய கொள்கையால் நாடும்நிமிர
வீரியம் எங்கும் விளங்கி உயர
சீரிய ஒழுக்கம் சிறந்துவளர
சூரியகவனம் காட்டுவான் தலைவன்!
பாரினில் தமிழீழ விதையோ...
வேரினைவிட்டு விருட்சமேயாக
நீருமேயாகிட செய்தனன் மக்களை!
நெஞ்செல்லாம் வாழுவான் - நீடூழி
தலைவனே!





தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/

# புதுவை இரத்தினதுரை அவர்களின் நினைவழியா நாட்கள்

புதுவை இரத்தினதுரை என்றுமே மனுக்குலத்தை நேசிக்கின்ற ஒரு கவிஞர். இன்று நேற்றல்ல பல ஆண்டுகளாக மக்களுக்காகக் கவிதை புனைந்து வருபவர். என்றுமே பலமற்ற மக்களுக்காக அவர் குரல் கவிதைகளுடாக ஒலித்தது. ஆனால், பலமுள்ள அநீதிக்கு எதிராக அவருடைய குரல் இன்னும் பலமாக ஓங்கி ஒலித்து வருகிறது. தமிழ் மக்களுடைய பண்பாட்டுத்தளத்தை நன்கு விளங்கிக்கொண்ட கவிஞர் அவர். அவருடைய நினைவழியா நாட்கள் என்னும் கவிதைத் தொகுதி எண்பத்திரண்டு கவிதைகளுடன் அண்மையிலே வெளியிடப்பட்டது. தமிழீழத் தேசியத் தலைவருடைய வாழ்த்துரையுடன் இந்நூல் வெளிவந்துள்ளது. "அவர் இந்த மண்ணைக் காதலிப்பவர். அவர் இந்த மண்ணின் மக்களை நேசிப்பவர். இந்த மண்ணின் விடுதலையை இலட்சியமாக வரித்துக் கொண்டவர். மண், மக்கள், விடுதலை என்ற முப்பொருளை மூலப்பொருளாக எடுத்து கலைப்பொருள் படைப்பவர். கவிதை அவரது கலைப்பொருள். அந்தக் கலையில் அவருக்கு இங்கு எவரும் நிகரில்லை" என்னும் வாழ்த்துரைச் சொற்கள் எல்லோருக்கும் ஏற்புடையன. "வாக்குமூலம்" என்னுந் தலைப்பில் புதுவை தன்னுடைய கவிதைத் தொகுதிக்குக் கவிதையிலேயே ஒரு முன்னுரை வழங்கியுள்ளார். கவிஞன் எப்படி இருப்பான் என்று கூறும்போது புதுவை தன்னையே இனங் காட்டிக்கொள்கிறார்.

*"ஊரின்,*
*உலகத்தின்,*
*தன்னினத்தின், மனுக்குலத்தின்*
*சோகத்தைத் தூக்கி மடியிலே கட்டுவான்.*
*வீரத்தை எடுத்து முடியிலே பதிப்பான்.*
*தன்னினம்*
*விடுதலைக்கு விலைகொடுக்கும் போது,*
*கவிஞனின் கவிதை*
*கைவாளாகக் கொள்கிறது.*
*பூக்களுக்கு ஏன் பூத்தோம் என்று*
*புரியாது.*
*வாய்க்காலில் ஓடிவரும் நீருக்கு,*
*போகுமிடம் தெரியாது.*
*ஆனால் கவிஞனுக்குத் தன் பிறப்பின்*
*அர்த்தமும்*
*போகும் வழித் தெளிவும்,*
*நிச்சயம் தெரியும்."*

இச்சொற்களை எம்முன்னே நிறுத்தும் கவிஞன் புதுவையன்றி வேறு யார்? இந்தக் கவிஞன்தான் இராசவீதியிலே 'சுப்பர் சொனிக்' வீசிய குண்டாலே சதைக்கும்பமான ஒரு பள்ளிப்பிள்ளைக்குத் தந்தையாகி அந்தச் சோகத்தைத் தன் சோகமாக மடியிலே கட்டுகிறான். (பக். 84 – 86). இதே கவிஞன்தான்;

*"கோட்டை அதிர்ந்தது!*
*கோட்டை அழிந்தது,*
*கொடியவர் பாசறை எரிந்தது..."*

என்று வீரத்தை எடுத்து முடியிலே பதிக்கிறான் (பக்.12)

வீரமும் சோகமும் மலிந்ததாக எங்கள் மண் இருக்கின்றது. எத்தனையோ இளையவர்கள் நடுகற்களாகி வருகின்றனர். சங்ககாலத்திலே ஆண் வீரர்கள்தான் நடுகற்களாயினர். ஆனால், எங்கள் மண்ணிலே வீரப்பெண்கள் பலர் நடுகற்களாகும் விந்தை நடைபெறுகின்றது. இக் கல்லறைகளை, நடுகற்களைப் பாடுகின்ற கவிஞர்களிலே புதுவை இரத்தினதுரையை நான் முதற் கவிஞனாகக் காணுகின்றேன். *Elegies* எனப்படும் கல்லறைப் பாடல்கள் பாடிச் சிறப்புற்ற ஆங்கிலக் கவிஞரான *Gray* போன்று தமிழிலே புதுவையினுடைய கல்லறைப் பாடல்கள் அமைகின்றன. அவை நெஞ்சை உருக்குவன; உணர்வைத் தட்டியெழுப்புவன; வீரத்தை அடிப்படையாகக் கொண்டமைவன. இளஞ்செழியன் வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட பொழுது, புதுவை;

*நீயும், நானும் உன் அப்பனும்*
*ஒரே இலட்சியத்தையும்*
*ஒரே தலைமையையும்*
*ஏற்றுக்கொண்டவர்கள்.*
*"கட்டைக்காட்டு"ப் போரில்*
*நீ களப்பலியானாய்*
*"எல்லன்குளத்தில்" உனக்கு தீமூட்டிய*
*போது*
*பக்கத்தில் நின்று பார்த்துக்கொண்டிருந்*
*தேன்*
*அப்போது*



தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/

உன் தாயழுதாள், தாயின் தாயழுதாள்
ஆனாலும் அப்பன் அழவில்லை,
அப்பனும் மகனும் போர்க்களம் நிற்பது
அதிசயமல்ல.....
ஆனால்,
ஒரு புலி தன் புலிமகனுக்கு
சீருடையில் நின்று சிதை மூட்டியதுதான்
போராட்டத்தின் புதிய வடிவம்.

என்று பாடும் பொழுது மேற்குறித்த பண்புகளெல்லாம் இழையோடுகின்றன:

சோதியாவின் மறைவைப் பாடும் பாடல்களும் இவ்வாறுதான் அமைகின்றன:

சோதியா எனும் சோதி அணைந்ததா?
சொற்ப ஆயுளில் வாழ்வு முடிந்ததா?
ஊதி ஊதியே எங்களை மூட்டியே
உணர்வு ஏற்றிய காற்றும் கலைந்ததா?
தாதியாய், தந்தையாய் தலைவியென்
றாகியே
தலைநிமிர்ந்து நின்றவள், தீயில் என்ற
சேதி வந்தெமை திடுக்கிடச் செய்தது
திக்கெல்லாம் ஒரு சோகம் கவிந்தது.

"பெண்விடுதலை பாடிய பூங்குயில்" ஆகிய சோதியாவை "ஊதி ஊதியே எங்களை மூட்டியே" என்று கூறும்போது பாரதியின் "உலை ஊதி உலகக்கனல் வளர்ப்பாள்" என்ற சிந்தனையும் மனக்கண்முன் வந்து நிற்கின்றது.

புதுவையின் கவிதைகள் நெஞ்சுக்குள் ஊடுருவிச் சென்று நிமிர்ந்துநிற்க வைப்பன. பெரும்பாலான கவிதைகள் இப்படித் தட்டியெழுப்பும் பண்புடையன. நடைமுறை உண்மைகளை அப்படியே சுட்டிக்காட்டி, உணர்வை வளர்ப்பன; வீரநடை போடச்செய்வன. இத்தொகுதியின் முதலாவது பாடலையே சான்றாகக் காட்டலாம். காலடிபட்ட புல் மீண்டும் தலை நிமிர்ந்து நிற்கும் காட்சியைக் காட்டித் தமிழரின் தலையை நிமிர்த்தும் கவிஞன்.

யானையைக் கூட அடக்கினாள்,
"அரியாத்தை"
யாரிவள்?
உன் பூட்டி.
பூனைக்கண்ணோடு புகுந்த அந்நியனை
ஓட விரட்டினான் ஒருவன்.
யாரிவன்?
உன் பூட்டன்.
வேண்டும் உனக்கிந்த வீரம்
தமிழனே!
கூண்டைத்திறந்து குதித்து வெளியே வா,

என்று வரலாற்றுண்மையை மனக்கண் முன் நிறுத்துகிறான்.




போராளிகளைப் பாடும்போது உணர்வெல்லாம் கொட்டிப் பாடுகின்ற போக்கினையே புதுவையின் கவிதைகளிலே காண்கின்றோம். துப்பாக்கி ஏந்திச் செல்லும் வயதில் மிக இளைய போராளியைப் பார்த்து,

உன் வயதில் நானென்ன சாதித்தேன்
ஒன்றுமில்லை.....
ஒன்றுமேயில்லை.

பேராசிரியர் அ. சண்முகதாஸ்

கிட்டி அடித்தேன்
கிளித்தட்டு மறித்தேன்
வெள்ளையப்பா வீட்டு விளாத்திக்குக்
கல்லெறிந்தேன்
நீயோ
கையில் துவக்கேந்தி
களத்திலே நிற்கின்றாய்
கொட்டும் மழையினிலும்
குறிபார்த்து நிற்கின்றாய்
தூங்காத விழியோடு 'சென்றி'க்கு
நிற்கின்றாய்.

உன் பாதத்தைக் காட்டு
கால்களை முத்தமிட
கவிஞன் விரும்புகிறேன்.

வாஞ்சையுடனும், மதிப்புடனும், வியப்புடனும் கவிஞன் கூறுகிறான்.

புல், பூ, பூகம்பம் புதுவையின் கவிதைகளிலே அடிக்கடி இடம்பெறும் படிமங்களாக அமைகின்றன. புல்போன்று நாம் மிதிபட்டுப் போகும் அற்பர்களல்ல; மிதிபட்ட புல் மீண்டும் தலைதூக்கும் என்னும் நம்பிக்கையை ஊட்டும் படிமமாக, "கூண்டைத்திற" (பக். 1), "தாயகத்தைக் காதல் செய்" (பக் 61) ஆகிய கவிதைகளிலே புல் கையாளப்படுகின்றது. பூவும் பூகம்பமும் பெண்களோடு தொடர்பான படிமங்களாக அமைகின்றன,

"பூபதி" அம்மா....
ஒரு பெண்ணின் பெயரல்ல
பூகம்பத்துக்குப் புதுப்பெயர்."

(பக்.18)

"பூவிழி தீ சுமந்தாடட்டும் - இங்கு
பூகம்பம் ஆரம்பம் ஆகட்டும்"

(பக்.45)

பூவும் எழுந்திங்கு போர்க்களம் போகின்ற
பூகம்ப நாடென்று கும்மியடி"

(பக். 46)

இவ்வாறு பூவாக இருக்கும் பெண்கள் போராளிகளாகப் பூகம்பம் ஏற்படுத்துகிறார்கள் என்ற உண்மையினை இந்தப் படிமம் மூலமாகக் கவிஞன் உணரவைக்கின்றான்.



தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/

செஞ்சோலைக்கீதமும், தேசியக்கொடிப் பாட்டும் இத்தொகுதியிலே இடம்பெறுகின்றன.

தான் நடந்துவந்த பாதையிலே ஏற்பட்ட தவறுகளையெல்லாம் நன்கு உணர்ந்துவந்த கவிஞன் புதுவை. அந்த நாட்களிலே,

*"நாங்கள் சிவப்பு விடிய' லென்னும்*
*அந்தத் திருநாளை ஆவலுடன்*
*பார்த்திருந்தோம்*
*பேதங்கள் அற்ற 'புரட்சி'க்காய்*
*நாங்களொன்றாய்*
*வேதங்கள் சொன்னோம் விடியாமற்*
*போனது பார்"*

என்று தங்களுடைய முயற்சி தோல்வியுற் றதைக்கூறி, தங்களைப் போல் அல்லாமல், இன்றைய இளைஞர்கள்,

*எங்களைப்போல*
*நின்று கதைக்கவில்லை, நிறக்கொடிகள் -*
*ஏந்தவில்லை.*
*கட்சி அலுவலகக் காரியங்கள் –*
*பார்க்கவில்லை*
*அச்சகங்கள்*
*பிரசுரிக்கும் ஆலயங்கள் தேடவில்லை,*
*துச்சமென*
*இளமைச் சுகங்களையே வீசிவிட்டுப்*
*பிச்செறிந்து கொண்டு புறப்பட்டார்"*
*(பக். 134 – 135)*

என்று கூறத்தக்க அளவிலே சிந்தனையும் செயலும் தம் தாயகமீட்புப் பணியிலே ஒன் றித்துள்ளனர். புதுவையின் கவிதை இவையா வற்றையும் உள்ளடக்கியது.

நினைவழியா நாட்கள் மானிடம்பாடும் கவி ஞனுடைய கவிதைகளைக் கொண்ட தொகுதி. தன்மானம், மண்ணிலே கொண்ட காதல், அந்த மண்ணை ஆக்கிரமிக்க வரும் எதிரிக்கு எதிரான களமாடல், களத்திலே, வீரமரணம் அடைந்தோரின் பெயரும் பீடும் பொறித்தல் என்பனவெல்லாம் புதுவை என்னும் கவிஞ னின் கவிதைகளிலே நடைபெறுகின்றன. தமிழ்க் கவிதைக்கு மேலும் ஒரு மெருகூட்டும் தொகுதி இது என்பதில் ஐயமேயில்லை. ★★

# போரில் ஒரு தேடல்



*தொலைந்த வாழ்க்கையை*
*துப்பாக்கியில் தேடுகிறோம்!*

*வசந்தங்களை எல்லையில்*
*எரித்துவிட்டோம்!*

*எங்களது சுதந்திர நாடு*
*இன்னும் தீட்டப்படவில்லை!*

*நாங்கள் விறகுச் சூட்டில்*
*குளிர் காய்கிறோம்!*
*நீங்களோ விறகாய்*
*எரிகிறீர்கள்!*

*என் உன்னதத் தோழர்களே!*
*நீங்கள் சுமப்பது துப்பாக்கியல்ல*
*வாழ்க்கை!*
*மனித மூச்சின் முடிவுகளை*
*சுமக்கின்றீர்கள்...!*

*நீங்கள் இடுவது போரல்ல*
*அறுவடைக்கான தேய்மானம்!*

*ஒவ்வொரு புலிகளும்*
*சின்னச் சின்னச் சூரியன்களே!*
*தன்னை எரித்து ஒளியூட்டும்*
*"பீனிக்ஸ்" பறவைகள்!*

*ஓ! இவர்கள்*
*போருக்குள்ளே வாழ்க்கையைத்*
*தேடுகிறார்கள்!*

*இனி கனிந்திருக்க வேண்டியது*
*காலமல்ல - உணர்வே?*
*பொங்கிடுவோம்*
*புது பூகம்பமாய்!*
*ஒரு தென்றல் புயலாய்*
*மாறாமல்!*

*நாளைய முதல் கதிரில்*
*ரகசியமாய் ஒரு செய்தி*
*"கிடைத்துவிடும் விடியல்...*
*கிடைத்துவிடும் விடியல்..."*
*இன்றைய இரவில்*
*நாளைய விடியல்*
*தயாரிக்கப்படுகிறதாம்!*

– சீ. அருணாசலம்
பகாவ், மலேசியா



தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/

# அசைவியக்கத்தின் அக்கினிப்பிழம்புகள்

விடுதலைப் போராட்டங்கள் அந்நிய காலனித்துவத்துக்கு எதிரான போராட்டங்களாக, நிறவெறிக்கு எதிரான போராட்டங்களாக பெரும்பான்மை எதேச்சாதிகாரத்துக்கு எதிரான போராட்டங்களாக, முதலாளித்துவத்திற்கு எதிரான போராட்டங்களாக பலவகை வடிவங்களை தாங்கி நிற்பதை வரலாற்றில் அவதானிக்கலாம். இந்த வகையான சுதந்திரப்போராட்டங்கள், விடுதலைப் போர்கள் வெற்றியடைந்த வேளைகளில் எல்லாம் எண்ணிறைந்த சுதந்திரப் போராளிகளும், விடுதலை வீரர்களும் தங்கள் உதிரத்தால் விடுதலைக் காவியங்கள் படைத்திருந்தார்கள். ஆகவே அந்த காவிய நாயகர்கள் அந்த நாட்டு மக்களாலும், வரலாறுகளாலும் போற்றப்படுவதையும், பூசிக்கப்படுவதையும் காணுகின்றோம்.

இங்கு நாம் தமிழீழ விடுதலைக்கான போர் நடைபெற்றுக்கொண்டிருக்கும் சூழலிலே அடக்குமுறைக்குள்ளாகி சுதந்திரம் நாடி நிற்கும் மக்கள் சமூகத்தின் அங்கங்களாக புலம்பெயர் வாழ்வை மேற்கொண்டு வருகின்றோம். இத்தகைய சூழ்நிலையின் மத்தியிலே விடுதலையின் தேவை குறித்து சிந்திப்பவர்களாக, பங்காளிகளாக வாழ்ந்து வருகின்றோம். இந்த வேளையிலே எம் மண்ணிலே எண்ணிறைந்த துன்ப துயரங்களின் நடுவே எதிரியின் தாங்கொணா ஆயுத அடக்குமுறையின் சூழலிலே வீரம் செறிந்த போராட்டத்தை முன்னெடுத்து வீழ்ந்து விதையாகி விட்ட மாவீரர்களின் நினைவுகளை உள்வாங்கி நிற்பது வெறும் சம்பிரதாய அஞ்சலியாக நிற்காது போராட்ட உணர்வுகளை தக்கவைத்துக் கொள்ளவும் போராட்டத்திற்கு மேலும் வலுச்சேர்க்கவும், அடுத்த சந்ததிக்கு போராட்டத்தின் தார்ப்பரியத்தை நகர்த்தவும் என்ற வகையில் பல்வேறு பரிமாணங்களை தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது.

போராட்டகால வாழ்வு என்பதே போராளிகளுக்கும், பொதுமக்களுக்கும் ஆழமான பிணைப்பினைக் கொண்டதாக, பிரிக்கமுடியாததாக எண்ணிறைந்த வலைப்பின்னல்களைக் கொண்டதாக விளங்கும். எனவே இச்சூழலில் ஒவ்வொரு போராளியின் இழப்பும் அம் மக்கள் சமூகத்திலே பாதிப்பையும், வேதனையையும், வெற்றிடத்தையும் தோற்றுவிப்பதை உணரலாம். அந்த பாதிப்பும், வேதனையும் விடுதலை உணர்வுகளை மேலும் அம் மக்களின் மத்தியில் கொழுந்து விட்டெரியச் செய்து, இது போராட்டத்தை மேன்மேலும் வலுவான முறையில் முன்னெடுப்பதற்கான சாதகமான அகபுற நிலைமைகளை உருவாக்கிக் கொண்டேயிருக்கும்.

எமது தமிழீழ போராட்ட வரலாற்றிலே கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலே வீரச்சாவடைந்த மாவீரர்களின் நினைவுச் சின்னங்களாக போற்றி வடிவமைக்கப்பட்ட படைப்புக்கள் எதிரியின் யுத்தமுனையிலே சிதைக்கப்பட்ட பொழுதெல்லாம், பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டபொழுதெல்லாம் மக்களின் மனங்கள் காயங்களுக்குள்ளான நிகழ்வுகளைக் காண்கிறோம். மாவீரன் தன் இன்பங்களைத் துறந்தவராக, மற்றவர்களுக்காக வாழும் மனம் படைத்தவனாக, காலத்தின் பால் சத்தியவேட்கை கொண்டவனாக, எந்த வகைத்தியாகங்களுக்கும் தன்னை இட்டுச் செல்லும் ஞானிகளாக இளவயதிலே மக்கள் சமூகத்திலே புரட்சிகர சூழ்நிலையை உருவாக்கிச் செல்வதனால் அவன் இறந்த பின் புதைக்கப்பட்ட நடுகற்கள் கூட எதிரிக்கு அச்சத்தை தோற்றுவிப்பதாக, ஆத்திரத்தை ஊட்டுவதாக அமைகின்றது. ஆகவே தான் அவை அழுவதற்காக அமைக்கப்பட்ட சமாதிகளாக அல்லாது உறுதியின் உறைவிடங்களாக உருமாறி நிற்கிறது.

ஆனாலும் நாம் புலம்பெயர்ந்து வாழும் மேற்கத்தேய வாழ்விடங்களிலே இது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும்? எதிர்காலச் சந்ததிக்கு இது குறித்த விபரங்கள் புரியும் சூழல் இருக்கிறதா? என்றவாறெல்லாம் எண்ணத்தோன்றுகிறது. அப்படி நோக்குமிடத்து புலம்பெயர் வாழ் தமிழர் மத்தியில் இடம் பெறும் எல்லா நிகழ்வுகளிலும் மாறுபட்டதாக முக்கியத்துவம் படைத்ததாக பெரும் எண்ணிக்கையிலான எல்லாத் தரப்பினரும் உள்ளிட்ட ஈழத்தமிழர்கள் பங்கு கொள்வதையும், இதயபூர்வமான அஞ்சலிகளை வெளிப்படுத்துவதையும் ஆழ்ந்து நோக்கலாம். மாவீரர்கள் அழிந்து பட்டாலும், அவர்கள் கல்லறைகள் சிதைந்து பட்டாலும் அவர்கள் எம் எண்ணங்களில் மேலொங்கி நிற்பதையும், அவர்களது கடந்த காலங்கள் காட்சிப் படலங்களாக கண்முன்னே நிழலாடுவதையும் உணருகின்றோம். எப்படி இத்தகைய அதிசயத்தை இவர்களால் நிகழ்த்த முடிந்தது? காலவெளியைக் கடந்து, மனப்பரப்பிலே உறுதிபரப்பி நெடும்பனைகளாக நிமிர்ந்து சூரியக்கதிர்களாக ஒளிபாய்ச்சி விடுதலை வரலாற்றிலே புதியபிரசவங்களுக்காய் தங்களை சங்காரம் செய்து மக்களுக்காக வரலாற்றை முன்னோக்கி நகர்த்தும் சக்கரங்களாக அந்த மக்கள் மனங்களில் வாழ்கிறார்கள். மக்களை வாழ வைக்கவும், போராடவைக்கவுமான புதியசக்தியினைத் தோற்றுவிக்கிறார்கள். எமது அசைவியக்கத்துக்கான காரணிகளில் ஒன்றாக அடையாளம் காணப்படும் இச்சக்தியினை மாவீரர் நாளன்று உள்வாங்குவதன் மூலம் நாம் புத்துயிர்ப்பும், புதுவேகமும் கொண்டெழுந்திடுவோம்.

**- நடராஜா முரளிதரன்**



தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/

# மாவீரர் நினைவாக

தமிழ் மண்ணும், தமிழீழ மக்களும் சிங்களப் பேரினவாத மிலேச்சப்பிடியிலிருந்து விடுதலை பெறவேண்டும். சங்ககாலம் அவர்தம் வாழ்வுக்குத் திரும்பி வந்ததாக வேண்டும். எதிர்கால தமிழ்ச் சந்ததி அடிமைத்தனத்தின் எந்தவொரு சுவட்டைத்தானும் அனுபவிக்கக் கூடாது என்பதற்காகவே பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட எம்மினத்தின் இளங்குருத்துக்கள் தம் இன்னுயிரை மண்மீட்புப் போரில் தற்கொடையாக்கியுள்ளனர்.

ஆண்ட தமிழினம், மீண்டும் அரசோச்ச வேண்டும். அடிமை வாழ்விற்கெதிராகத் தமிழினம் பொங்கி எழவேண்டும். செந்தமிழுக்கொரு தீமை வந்த பின்பும் இந்தத் தேகம் இருந்தொரு இலாபமுண்டோ? தாயையும் தாய்மொழியையும் பழித்தவனை அந்தத் தாயே தான் தடுத்தாலும் விட்டு விட முடியாது. கங்கையும் கடாரமும் கொண்டு, தூரக்கடலெங்கும் வெற்றிக் கொடிநாட்டி தூரகிழக்கு நாடுகளிலெல்லாம் தம் புலிக்கொடியும் மீன் கொடியும் பட்டொளி வீசிப் பறந்திடப் பார்த்து மகிழ்ந்த எம் இனத்தின் வீரவரலாறு பொய்யாய் பழங்கதையாய்ப் போய் விடக் கூடாது. இந்த இன உணர்வின் தூண்டுதலால், வானுறையும் தெய்வங்களாகிவிட்ட எம் இரத்தத்தின் இரத்தங்களின் இலட்சியப்பற்றுக்கு ஈடும் இல்லை; இணையும் கிடையாது.

அன்னியரின் அடி வருடிப் பழக்கப்பட்ட காரணத்தால் விடுதலையின் மாண்பு தெரியாமல் எம் அறிவு, ஆற்றல் அனைத்தையும் விழலுக்கிறைத்த நீராக்கினோம். பட்டமும் பதவியும் எம்மை அடிமைத்தனத்தின் அதலபாதாளத்திற்கே இட்டுச் சென்றது. எம் சொந்த மண் சுரண்டப்பட்டதைக்கண்டும் காணாமல், வெந்தபுண்ணில் மாற்றான் வேல் புகுத்தி மகிழ்ந்த போதும் வாய்ச்சொல் வீரர்களாக வெற்று வேட்டுக்கள் விட்டுத் திருப்தியடைந்து வந்தோம். சொந்த நலன்களுக்காக இனத்தின் உரிமைகளையெல்லாம் அடகுவைத்தோம். அடிக்க அடிக்க குனிந்தோம்; பேரினவாதத்திற்கு துணை போனோம். அன்று இலங்கையை



ஆண்ட இராவணனின் வீரபரம்பரையினரான ஈழத்தமிழினம், வந்தேறு குடிகள் என்று வரலாறு திரிக்கப்பட்ட போதும், தமிழ் மக்களின் பாரம்பரிய மண்ணும் அதன் வளங்களும் திட்டமிட்டு சிங்களக் குடியேற்றங்களால் சிதைக்கப்பட்ட வேளையிலும் தட்டிக் கேட்கத் திராணியற்று தன்மான உணர்விழந்து வாழ்ந்தோம். களங்கமற்ற எமது தொன்மையான வரலாற்றில் கறைபடிந்தமைக்கு, கடந்த காலங்களில் எம் இனத்தின் தலைவர்கள் எனக்கூறி வந்தவர்கள் இழைத்த இமாலயத்தவறுகளே அடித்தளமாயின.

இவ்வாறான இக்கட்டான சூழலில்தான் 'ஓராயிரமாண்டு ஓடி இளைத்த பின் வாராது வந்த மாமணியாக' அரசியல் ஆழியில் தத்தளித்த எம்மினத்திற்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கமாக, விடிவெள்ளியாக, ஒளிக்கீற்றாகத் தோன்றினான் ஒரு தலைவன், தமிழர் விடுதலையே உயிர்மூச்சாகவும் தமிழ் மொழியின் உயர்வொன்றே இலக்காகவும், தமிழ் மண் மீட்பே தன் தாரகமந்திரமாகவும் கொண்டியங்கும் ஒரு தலைவனின் கீழ் தமிழீழ விடுதலைக்காக தம்மை முற்று முழுதாக அர்ப்பணிக்கத் திடசங்கற்பம் செய்து கொண்டனர்.

ஒரு தசாப்த காலத்திற்கும் மேலாக, எதிரியின் பாசறைகளை வெடிகுண்டு வைத்துத் தகர்த்து, அரண் கோட்டைகளையெல்லாம் பொடிப்பொடியாக்கி, வானிலும் தரையிலும் கடலிலும் எதிரியைச் சின்னாபின்னமாக்கி, மண்மீட்புப் போரிலே, மாவீரர்களாகிவிட்ட மாமணிகளை நினைவுகூரும் ஒரு நன்னாளே மாவீரர் திருநாளாகும்.

வீரசுதந்திரம் வேண்டி, தம் இன்னுயிர்களையே ஆயுதமாக்கி, செங்குருதியால் வீரவரலாற்றுக் காவியம் படைத்தது, கற்சிலைகளாய், அழியாத ஓவியங்களாய் உள்ளக்கோயில்களில் வேதப்பொருட்களாய், வெட்டவெட்ட முளைவிடும் கற்பகவிருட்சங்களாய் மாறிவிட்ட எம் செல்வங்களை மறந்தவர்கள் மனிதம் அற்றவர்களே.

எந்தவொரு மகாகாவியமும் முன்னுதாரணம் காட்டமுடியாத வரலாற்று நாயகர்கள் எமது மாவீரர்கள். தந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி, முந்தையராயிரமாண்டுகள் வாழ்ந்த எம்மண்ணின் மாசுமறுவற்ற மாணிக்கங்கள் அவர்கள். வீரத்துடன் எழுந்து தமிழர்களைத் தொடும் எவனும் செத்தான் என்ற தலைவனின் கூற்றை செயலாக்கிக் காட்டியவர்கள். அந்தத் தமிழ் ஈழ முத்துக்கள்.

காற்றோடு காற்றாகி, கடலோடு அலையாகி மூச்சோடு மூச்சாகிவிட்ட இந்தப்புனிதர்களின் அடியொற்றிப் பணிசெய்ய அன்னை மீதே ஆணை செய்வோம்.

—கணபதிப்பிள்ளை செல்வநாயகம்

https://tamileelamarchive.com/

# கல்லறைகள் கண்ணீர் விடுவதில்லை

இன்னும்
எத்தனை காலம் தான்
கண்ணீர் விடப்
போகிறீர்கள்
இழந்தவைகளை எண்ணி

இன்னும்
எவ்வளவு நேரம் தான்
கண்ணீர் சிந்தப்
போகிறீர்கள்
உங்கள் தனயரின்
கல்லறையின் முன்னால்

கல்லறைகள்
கண்ணீர் விடுவதற்கல்ல
கருத்தரிப்பதற்கே!

ஒரு
இருளின் யுகத்தை
எரிப்பதற்காகத் தான்
அவன்
சூரியனாகி போனான்.

போராளி நடந்த
சுவடுகளை
தொட்டுப் பாருங்கள்
சுள்ளென்று சுடும்
அவன்
விடுதலையின் தாகங்கள்!
அவன்
உயிரின் ஆன்மா
எதை நினைத்து
உறங்கி போயிருக்கும்
தனது
தோளில் தாங்கும்
சுதந்திர வேட்கையை
தனது சந்ததி
சுமக்கும் என்றுதானே..

அவன் வீரமரணத்தின்
அர்த்தத்தை
அசிங்கப்படுத்தாதீர்!

கண்ணீர் விடுவதும்
கன்னத்தில் கை வைப்பதும்
கோழையின் செயல்!



விழிகளை துடையுங்கள்
தெளிவான பாதையை
தேடுங்கள்

மீண்டும் மீண்டும்
இழப்புக்கள்
எதிரொலிக்கலாம்

இழப்புக்கள் இன்றி
எதுவுமேயில்லை

இழந்தவைகளில்
இருந்து தான்
அவன் எழுந்தான்!

எரிந்த குடில்
கருகிய வயல்
எரியுண்ட படிப்பகம்
வாழ்விழந்த பெண்
ஓடிய குருதி
அயலவரின் பிணம்

இழப்புக்களிலிருந்து தான்
அவன் எழுந்தான்

கண்ணீர் சிந்தி
கல்லறையை
களங்கப்படுத்தாதீர்

விழிகளை துடையுங்கள்
விரைவாய்
அவன் வழி தொடருங்கள்
கல்லறைகள்
கண்ணீர் விடுவதற்கல்ல!

–எஸ். ஞானவேல்



தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/

# சூரியப் புதல்வர்களில் ஒருவன்

பிறந்தது முதல் இன்று வரை
பார்த்துவிட்டேன் எல்லாம்
தந்தையின் சாவு சகோதரர்களின் பிரிவு
என் குழந்தைகளின் அழுகை.
இன்று கல்லறைக்குள்ளிருக்கும்
என் அன்னை
எவ்வளவு துன்புற்றிருக்கிறாள்........

*('ஓடிப் போனவன்' எனும் கவிதையில், பிரெஞ்சுக் கவிஞர் போரில் லியோன்)*

இளைய வயதினனான மௌலிக்கும் இருந்த துயரம் இப்படித்தான் இருந்தது.

அமைதி காப்பதாக வந்த இந்திய இராணுவம் எமது மண்ணின் குரல்வளையை நசித்துக் கொண்டிருந்தது. ஆனால் மண்ணில் போர்க்குணம் அடங்கிப்போய்விடவில்லை. வெடித்துக் கிளம்பிக் கொண்டேயிருந்தது. அப்போது போராளிகளை மக்கள் தங்கள் வீடுகளில் அடைக்கலம் கொடுத்துக் காத்தார்கள்.. அந்தப் போராளிகள் மௌலியின் தாய் வீட்டிலும் தங்கியிருந்தார்கள். அப்போது அவர்களுடன் மௌலி உரையாடிக் கொண்டிருந்தான்.

'அண்ணே எங்கட அப்பாவை இந்திய இராணுவம் தான் அநியாயமாகக் கொன்றது.' என்று சொல்லிவிட்டு சிறிது கணங்கள் மௌனமாக இருந்தான்.

அவனுடையை அப்பா முற்றத்தில் சாய்மனைக் கதிரையில் இருந்து ஆடிக் கொண்டிருக்கிற நினைவும், தேவாரங்களை இசைத்துப் பாடிக் கொண்டிருக்கிற நினைவும் அவனை வருத்துகிற கணங்கள் தோறும் அவன் துடித்தான்....

.....

இயலாத காலுடன் மண்ணில் ஊன்றி நடந்து 'பிள்ளைகளே! போர் மூண்டு விட்டது. அமைதி காக்க வந்தவர்களில்லை இவர்கள் அழிக்க வந்தவர்கள் தான் நீங்கள் தப்பிப் போங்கள். எங்கட பிள்ளையள் விடமாட்டாங்கள்'

முற்றத்தில் நின்று கொண்டு முழங்கினார். அவர்களுக்கோ தந்தையை விட்டு பிரிய மனமில்லை. அவர்கள் பிரியமறுத்து அழுதார்கள். தந்தையாரோ பிள்ளைகளே நீங்கள் இந்த இடத்தில் நிற்பது ஆபத்து. போங்கள் என சத்தம் வைக்க ஒவ்வொருவராக அழுது கொண்டு பருத்தித்துறை வீதியால் நடந்து போய் கோப்பாயில் உள்ள பாடசாலையொன்றில் அகதியாக தஞ்சமடைந்தார்கள். ஆனால் மௌலிக்கு அது கோபமாக இருந்தது. தங்களை அப்பா துரத்திவிட்டார் என்று. ஏன் எங்களைத் துரத்திவிட வேண்டும்; நாங்கள் மட்டும் தப்பித்துக் கொள்ள வேண்டி என்ன இருக்கிறது என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் செல்வீச்சும், துப்பாக்கி வெடியோசைகளின் அதிர்வுமாக திசைகள் கலங்கின. மூட்டை முடிச்சுக்களுடனும் கைக்குழந்தைகளுடனும் வீதியால் மக்கள் ஓடிக்கொண்டிருந்தார்கள். எரியுண்ட வீடுகளில் இருந்து அழுகுரல்கள் கேட்டன. குண்டுகள் வீழ்ந்து வீட்டுக் கூரைகளைச் சிதைத்தன. ஒரு சிறிய செல்துண்டு ஒன்று அவர் இதயத்தைத் தாக்கி அவர் குற்றுயிராய் நிலத்தில் வீழ்ந்து கிடந்தார். அந்த கிராமத்தில் உள்ள சிலர் அவ்விடத்திற்கு செய்தியறிந்து ஓடினார்கள். ஆனால் அவர்களால் காப்பாற்ற முடியாது போனது.

அந்த துயர நிகழ்வே வாழ்வில் போராளியாகும் எண்ணத்தைப் அவனுள் பிறப்பித்தது.

அவன் அந்த வீட்டில் தங்கியிருந்த போராளிகளோடு பேசுகையில் மீண்டும், மீண்டும் சொன்னான், எங்களின் அப்பாவை அநியாயமாக இந்திய இராணுவம் கொன்று விட்டது என்று. அவன் போர்ப்பயிற்சி பெற்று ஒரு போராளியாக மாறிய பின்னரும் தனது கிராமம் எப்படி தீ மூட்டப்பட்டது என்பது பற்றி துயரோடு அந்தப் போராளிகளோடு நினைவு கூர்வான்.

அதுவே அவனின் போர்ப்பிரகடனமாக வாழ்விலும் ஒலிக்கத் தொடங்கியது.

இந்த உணர்வோடு தான் அவன் களத்தில் குதித்தான்.

இந்திய இராணுவத்துடனான சண்டைகள் சிலவற்றில் அவன் போராளிகளுக்கு துணையாக நின்றான், இந்திய இராணுவம் மண்ணை விட்டு வெளியேறிக் கொண்ட பொழுது அவன் வெற்றிக்களிப்பில் திரிந்தான்.


பின்னாளில் அவன் ஒரு நாள் ஆக்கிரமிப்பு இராணுவத்துடனான சண்டை ஒன்றில் வீரச்சாவடைந்து விட்டான்.

விடுதலை இன்றி வாழாதிருக்க முடியாது என்கின்ற பேரறிவாளனாக அவன் இருந்தான். அத்தகைய உணர்வே அவனை போராளியாக்கி என்றுமே சாகாத வாழ்வின் சொந்தக்காரனாக்கியது.

அன்பின் ஊற்று மூலங்களாக, சின்னச் சின்னக் காதல்களாக, பற்றுதல்களாக முற்றத்தில், தந்தையில், தாயில், தாய் மண்ணில் என்று பரந்து விரிந்த தளத்தின் உச்சத்தில் நின்று போராடி இன்று என்றும் அழியாத வாழ்வின் சுவடுகளைப் பதித்துச் சென்றிருக்கிறான். அவனும் இந்தச் சூரியப் புதல்வர்களில் ஒருவனே.

★★★

https://tamileelamarchive.com/



# வரலாறு தன்னை மீட்கும்

-வளவை வளவன்

அந்தமில் தமிழே எங்கள்
ஆவியே தாயே உந்தன்
முந்தைய பெருமை எங்கே
முத்தமிழ் திருநா டெங்கே
கங்கைகொள் வீரம் எங்கே
கடாரமின் றெங்கு தாயே
சிந்தையில் இவற்றை யெண்ணா
சிறுமையுள் வாழ்ந்தோம் வீணர்.

முந்தையோர் நாட்டில் எங்கள்
முதுசமாம் வீரம் இன்றி
சிந்தையில் செயல் அகற்றி
சிறப் பெலாம் இழந்து நிற்கும்
விந்தையை நினைத்தாற் பாரில்
வேதனை முகிழ்த் தெழுந்து
தந்தையர் நாட்டின் சேதி
தணலினைக் கொட்டி த்தூவும்

விந்தைகள் எங்கே என்று
விரிந்த இவ் வுலகில் பார்க்கும்
சிந்தனை கொண்டோர் கூட
குறித்திட மறுத்த தாலே
சிந்திக்க வைத்தார் அந்தச்
சிறுத்தைகள் என்றே பேச
இங்கிதம் நிறைந்த நாடு
தமிழீழம் ஒன்றே கேளீர்

சந்தமுத் தமிழை நாளும்
சாற்றி நீ வாழ்ந்த போதும்
சிந்தனை தன்னைச் சற்று
திருப்பி நீ பாராய் இங்கு
ஃகத்தால் அரண்கள் செய்யும்
சந்ததி வாழும் நாளை
சரித்திரம் படைக்கும் பாரீர்

வங்கமா கடலின் ஓரம்
வளர் தமிழ் நாடொன்றுண்டு
சங்கமுத் தமிழும் நாட்டின்
சரித்திரம் யாவும் மீட்கும்
சிந்தையில் உயர்ந்த கூட்டம்
சிறுத்தைகள் என்று பாடி
வந்தனை செய்து நிற்கும்
வரலாறு தன்னை மீட்கும்.



தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/

# மாவீரன் நவநீதன்

காட்டில் உறைந்திருந்த அமைதியின் ஊடே காற்றில் மெல்லிதான சிரிப்பொலிகள் தணிந்து ஒலித்துக்கொண்டிருந்த ஒரு மாலைப் பொழுதில் முல்லைத்தீவிற்கு சென்றேன். மேஜர் பசீலனின் குழுவில் இருந்த நவநீதனை சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

மெல்லியகுரல். அதிர்ந்து பேசாத தன்மை. மிக அமைதியான சுபாவம். யார் உதவி கேட்டாலும் புன்னகையுடன் செய்து கொடுக்கும் தன்மை. இக்குணங்கள் எல்லோரையும் கவர்ந்தது. நவநீதனிடத்தே ஒரு அளவற்ற பிரியத்தை உண்டாக்கியிருந்தது.

நவநீதனுக்கு சிறப்பானது 'மங்கிக்ரோப்' அவனுக்கு 'சட்டித்தலையன்' என்ற பட்டத்தையும் கொடுத்திருந்தது.

ஆனால் இச் சாந்தமான போராளியை களத்தில் காண்பவர் மலைப்படைந்து விடுவர். நாம் நவநீதனை கோபம் கொண்டதை ஒரு போதும் பார்த்ததில்லை. ஆனால் களத்திலோ அவனது உத்வேகமான நிலையை காணும் போது வியப்படைந்து விடுவோம். இதைவிட 'ஒரு போராளிக்கு உதாரணமாக' நவநீதனையே பசீலன் சுட்டிக் காட்டுவர். ஏனெனில் நவநீதனின் கடமைகள் எப்போதும் செவ்வனே செய்யப்பட்டிருக்கும்.

அவனது ஆயுதம் நன்கு சுத்தப்படுத்தப் பட்டு பளிச்சென இருக்கும்.

நவநீதன் வவுனியா பிரதேசத்தில் பிறந்து வளர்ந்தவன். அந்த மண்ணில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட கொடுமைகளைக் கண்டு குமுறி 1985–ல் அமைப்பில் சேர்ந்து கொண்டவன். எமது மண், மக்களின் மேல் மிகுந்த பாசம் கொண்டவன். அப்போது குடும்ப நினைவுகள் வரும் போது மட்டும் மௌனமாகி விடுவான்.

நீண்ட நாட்களின் பின் விடுமுறை பெற்று ஊருக்குச் சென்று வந்தவன் மௌனமாக சிலநாட்கள் வெறுமனே பார்த்துக் கொண்டிருந்தது எனக்கு இன்னமும் தெளிவாக நினைவிருக்கின்றது. ஆனால் சில நாட்களுக்குள் மீண்டும் பழைய நவநீதனாகி விட்டான். இருந்த போதிலும் அவனுக்குள்ளிருந்த சோகங்கள் அவனுக்கு மட்டுமே தெரியும்.

அவ்வேளைகளில் நாம் அடிக்கடி முகாம் மாற்றியபடி இருப்போம். சில சமயங்களில் ஒரு வாரத்தில் இருமுறை கூட முகாம் மாற்றியுள்ளோம். அநேகமான நேரங்களில் காட்டுக்குள்ளேயே முகாமிருக்கும். தண்ணீர் எடுத்து வரவே பல கிலோ மீட்டர்கள் நடக்க வேண்டும். அப்போதெல்லாம் எமது குழுவில் யாருக்கும் உதவி தேவைப்பட்ட நேரங்களில் எல்லாம் நவநீதன் முகம் கோணாமல் உதவி செய்வான். இரண்டு 35 லீட்டர் தண்ணீர்க் கான்களை தடியில் கொளுவி இருவராக எடுத்து வர, அதுவும் மேடு பள்ளத்தில் மிகுந்த வலியெடுக்கும். ஆனால் இதையே நவநீதன் உதவி செய்யும் பொருட்டு ஒரே நாளில் இரண்டு மூன்று தடவைகள் செய்யும் போது மலைப்பாக இருக்கும்.

தாக்குதல் நடவடிக்கைகளின் போது நவநீதன் எப்போதும் முன்னணியில் நிற்பான், முல்லைத்தீவு இராணுவத்துடனான மோதல்கள், 31.06.87 அன்று மிகவும் வெற்றிகரமாக நடத்தப்பட்ட முந்திரிகைக்குள இராணுவ அணி மீதான தாக்குதல், 27.07.87 அன்று நடாத்தப்பட்ட பூநகரி இராணுவ முகாம் மீதான தாக்குதல் என்பன அவனது வீரத்தைப் பறைசாற்றும் சான்றுகளாகும்.

இதன்பின் இந்திய அமைதிப்படை 1.8.87–இல் எமது மண்ணில் காலடியெடுத்து வைத்தது. அமைதிப்படையாக உள்ளே வந்தவர்கள் தமது சுயரூபத்தைக் காட்ட வேறு வழியில்லாத நிலையில் நாமும் ஆயுதத்தை தூக்குகின்றோம்.

எமது குழு அப்போது யாழ்ப்பாணத்தில் நிற்கின்றது. நவநீதன் என்னுடன் பழைய பூங்காவில் நிற்கிறான். யாழ்நகர் வெடிச்சத்தங்களால் அதிர்ந்து கொண்டிருக்கையில் நாம் மேல் மாடியில் இருந்து களத்திற்கு தயாரான நிலையில்,. நண்பர்களுடன் உரையாடுகின்றோம். அது தான் நான் நவநீதனை கடைசியாக சந்தித்தது.

முல்லைத்தீவிற்கு திரும்பிய நவநீதன், இந்திய இராணுவத்திற்கு எதிரான பல மோதல்களில் பங்கு பற்றி தலைவரின் அரவணைப்பில் ஒரு சிறந்த தளபதியாக உருவெடுத்தான்.

ஆக்கிரமிப்பு படை வெளியேறிய பின்னர் ஒரு சிறந்த தளபதியாக படைகளை நடாத்தி சிங்கள படையினரை அச்சமுற வைத்தவன். 1993–ல் நடாத்தப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பூநகரி இராணுவ முகாம் தாக்குதலின் போது படையணி ஒன்றை வழி நடத்தி முன்சென்ற போது இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரமரணம் அடைகின்றான்.

இலட்சிய வேங்கைகள் இறப்பதுமில்லை
விடுதலைப்புலிகள் வீழ்வதுமில்லை

– ரஞ்சன் டாக்டர்



தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/

# வல்லமை வாராதோ



மடிகிடந்து புரண்டெழுந்த
பூமித்தாயோ
தினமும் தீக்குளிக்கிறாள்.
காயமுற்று மேனி நோகிறாள்
எனது மனமோ
அவளன்பில் கனிந்து
விழிகசிய மறுக்கிறது.

மூக்குநீர் சிந்தி
முடிச்சிட்ட காற்சட்டை
கையிறுக்கி
புழுதிமண் பொடி பூசித்திரிந்த
செல்வங்கள் தான்
பூமித்தாயின் புதல்வரென எழுந்தார்.

பிரபஞ்சம் முழுமையும் நிறைக்கும்
தாயன்பின் வீச்சுடன்

என் கண்மணிதேசத்தின்
காதலர் அவர்கள்
அவர்தம் நெஞ்சு நிறைகாதலால்
மண்மாதா வீறுபெற்றெழுகிறாள்.

அன்பாய் எமை அணைத்த
தாயின் மடிகிடந்து நான்
'அம்மா' வென்று அழைத்ததென்ன?
கையள்ளி மகிழ்ந்து களித்ததென்ன?

காலாற நடந்து திரிந்ததென்ன?
மெய்யில்லை
பொய்தானே

நானும் பொய்
என் நெஞ்சும் பொய்
என் அன்பும் பொய்

என்பிள்ளை நாளை
என் தாய்த்தேசம் எதுவென்று
அழுதிடும் அவலம்.
எனக்குப் புரியாமலேபோகும்.

தொலைப்பதற்கு இன்னும்
என்ன உள
எஞ்சிய சில அடையாளங்களும்
எனை மீட்கப் போதுமா?

நினக்குள் எனக்குள்
காதல் நிறையாது
குருதிச் சுற்றுகைக்காக மட்டுமே
நித்தம் துடிக்கிற நெஞ்சு கொண்ட
வஞ்ச மனிதன் ஆனேன்.
சுத்திச் சுத்தி வரும்
கொல்லைக் குதிரை போல் மனமோ
துக்க சாகரத்தில் சிக்கிச் சுழல்கிறது.
பற்களைக் காட்டி பொய்யாய் சிரித்து
கைகளைக் குலுக்கி

நலமோ என வினவிடும்
நாட்டிய மனிதன் ஆனேன்.

சுடுபுழுதி மணல் தோய
சிறகு கட்டித் திரிந்த
எம் மணல் முன்று
தீப்பட்டெரிகையிலே

புன்னகைத்து
கைகுலுக்கி, கையசைத்து, விடைபெற்று.....
கூத்தாடி முகம் தரித்தேன்

பொல்லா வினையேன்
புழுத்தலைப் புலையனேனுக்கு
வல்லமை வாராதோ?
மனிதனாய் ஆவதற்கு?

— சுபா





தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/



அச்சுப்பதிப்பு: வாசன் அச்சகம் 0181 - 640 4366